# விதைகள்...

பகுதி–16

# உள்ளே ...

அறிமுகம்....

விதைகள் 16ஆம் பகுதியை பற்றி சில நிமிடங்கள்!

இதோ அந்த இரகசியம்:

கிறிஸ்துவின் சிந்தையே நம் ஆற்றல் தளம்:

கிறிஸ்துவின் சிந்தையென்றால் ... ?:

பூமியைக் கெடுத்த சிந்தனைகள்:

சிந்தனைத் தளத்தை சரிசெய்வோம்:

சிந்தனை + பேச்சு + செயல் (ஒருங்கிணைப்பு):

மனிதர்களை Focus பண்ணுவோம்:

சிந்தனை ஆயுதம்:

சிந்தனைக்குப் பூட்டு:

மனதைப் பராமரிப்போம் (Take care):

சிந்தனையில் கிறிஸ்தவ அணுகுமுறை:

நன்மை + பிரியம் + பரிபூரணமான தேவசித்தம்:

1. நன்மையென்றால்?
2. பிரியமென்றால்?
3. பரிபூரணமென்றால்?

நாம் கிறிஸ்தவ சிந்தனையாளர்கள்:

மனதில் எதையெல்லாம் வைக்கக்கூடாது?

மனதில் எதையெல்லாம் வைக்கவேண்டும்?

சிந்தனை கெடுவது ஏன்?

தேவனைப் பற்றின தவறான எண்ணங்களே பாவங்களுக்கான மூலகாரணி:

உச்சக்கட்ட பாவங்களுக்குள் நடத்தும் மனம்:

பிரச்சனைகளே இல்லாத பூமிக்கு நாம் தான் பொறுப்பாளிகள் !:

நற்செய்திகளை நம் மனதிலே பதிப்போம்:

நாம் கெட்டிக்காரர்கள் (Good men) !:

பூமியின் தலையெழுத்தை மாற்றியெழுதுவோம்:

சந்தர்ப்பக் கதவுகள்:

பாவம் செய்யாமலிருக்க வேதம் காட்டும் வழிகள்:

நான் எழுதுவதென்னவென்றால் ... :

No. 1 பிரமாணம்:

ஆதியிலே ... ஏதேனிலே ... :

பூட்டப்பட்ட மகிமையின் சாவி:

நம் மனது கெட்ட விஷயங்களினால் அல்ல; நல்ல விஷேசங்களினால் பொங்க வேண்டும்:

துணிச்சலை மனதில் வளர்ப்போம்; நினைத்ததை நடத்தி முடிப்போம்:

மனதோடு பேசுவோம்:

நினைவுகள் தோன்றும் நெஞ்சில் இயேசு:

நிழல் ஏதேன் Vs. நிஜ ஏதேன்:

மயக்கம், கலக்கம், குழப்பம், வாழ்க்கையில் நடுக்கம் எதுவும் வேண்டாம்:

ஒருமனம்:

வாலிபனே ...

காதல் Vs. அன்பு:

முடிவாக ...

# விதைகள்...

## பகுதி–16

### அறிமுகம்...

*"ஆதிகாலமுதல் அடக்கமாயிருந்து, இப்பொழுது தீர்க்கதரிசன ஆகமங்களினாலே அநாதி தேவனுடைய கட்டளையின்படியே வெளியரங்கமாக்கப்பட்டதும், சகல ஜாதிகளும் விசுவாசத்திற்குக் கீழ்ப்படியும் படிக்கு அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதுமாயிருக்கிற இரகசியத்தை வெளிப்படுத்துகிறதான, இயேசுகிறிஸ்துவைப்பற்றிய பிரசங்கமாகிய என் சுவிசேஷத்தின்படியே உங்களை ஸ்திரப்படுத்த வல்லவரும், தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாயிருக்கிற தேவனுக்கு இயேசுகிறிஸ்துவின் மூலமாய் என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென் (ரோமர். 16:25, 26, 27)"*

*"ஆதிகாலங்களுக்கும் தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து, இப்பொழுது அவருடைய பரிசுத்தவான்களுக்கு வெளியாக்கப்பட்ட இரகசியமாகிய தேவவசனத்தைப் பூரணமாய்த் தெரியப்படுத்துகிறதற்கு, உங்கள்பொருட்டு தேவனால் எனக்கு அளிக்கப்பட்ட உத்தியோகத்தின்படியே நான்... சபைக்கு ஊழியக்காரி(ரனா)யானேன். புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம் (!) (கொலோ. 1: 25, 26, 27)"*

*"கிறிஸ்துவினுடைய இரகசியத்தினிமித்தம் கட்டப்பட்டிருக்கிற நான் அந்த இரகசியத்தைக் குறித்துப் பேசவேண்டிய பிரகாரமாய்ப் பேசி, (எழுதவேண்டிய பிரகாரமாய் எழுதி) அதை வெளிப்படுத்துவதற்கு, திருவசனம் செல்லும்படியான வாசலைத் தேவன் திறந்தருளும்படி எங்களுக்காக... வேண்டிக்கொள்ளுங்கள். (கொலோ. 4 : 3, 4)"*

### விதைகள் 16ஆம் பகுதியை பற்றி சில நிமிடங்கள்!

விதைகள் 16ஆம் பகுதியை வெளியிட கர்த்தரின் கிருபை போதுமானதாயிருந்தது. எங்களுடைய முந்தின வெளியீடுகளான விதைகள் பகுதி 1 முதல் பகுதி 15 வரையிலுமான புத்தகங்களை உங்களுக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் வாசியுங்கள். எங்களுடைய புத்தகங்கள் மற்ற புத்தகங்களைப் போல ஒழுங்கு முறைகளின்படி எழுதப்படாமல் ஏனோதானோவென்றிருப்பதாக அபிப்பிராயங்கள் வந்தன. ஆனால் நான் அதைப் பற்றியெல்லாம் யோசிக்கவில்லை; இந்த வித்தியாசமான அணுகுமுறைதான் எங்களுடைய வெற்றியின் இரகசியமாக எங்களுக்குத் தோன்றுகிறது. ஆவியானவருடைய நடத்துதல் எப்படியிருந்தாலும்; முடிவில் அது தேவதிட்டத்தை நோக்கி முன்னேறும் என்பதில் எந்த சந்தேகமுமில்லை. கிறிஸ்துவின் மூலமாக தேவன் நமக்கு சிலுவையில் ஏற்படுத்திக் கொடுத்த புதிய உடன்படிக்கையின் இரகசியங்களடங்கிய வெளிப்பாடுகள் எனக்கு முதன் முதலில் கிடைத்த போது; நான் கணுக்காலளவு ஆழத்தில் நின்று கொண்டிருந்தேன். தொடர்ந்து முழங்காலளவு, இடுப்பளவு என்று படிப்படியாக நடந்து நான் நீச்சலாழத்திற்குள் வரும் போது இந்தத் தரிசனப் புத்தகங்கள் பகுதி 7–ஐத் தாண்டியிருந்தது.

பரவலாக சபை மத்தியில் காணப்படும் நியாயப்பிரமாண உபதேசங்களால் திருடப்பட்ட... உள்வாங்கப்பட்ட... பட்சிக்கப்பட்ட... ஜீரணிக்கப்பட்ட... நீர்த்துப் போன புதிய உடன்படிக்கையின் இரகசியங்களை வெளிச்சம் போட்டுக் காட்டுவது தான் எங்களுக்குக் கொடுக்கப்பட்ட தரிசனத்தின் நோக்கம். கர்த்தருடைய இரகசியம் நம்மிடம் வந்து சேர்ந்தது. அவர் எதையுமே மறைக்கவில்லை; நாம் தான் கவனிக்காமல் விட்டுவிட்டோம். *“தேவனுடைய இரகசியச் செயல் என் கூடாரத்தின் மேல் இருந்தது* **... the friendship of God protected my home** *என்றார் யோபு! (29:4ல்).”* ஒரு நண்பனுடன் இரசியங்களை பகிர்ந்து கொள்வதைப் போல நம்முடன் நட்புறவாடி தன் இரகசியங்களைச் சொல்ல தேவன் ஆசையாக இருக்கிறார்; ஆனால் நமக்கோ அவருடைய மனது புரியாமல் போனது (சங். 25:14). என்ன செய்வது? பெத்த மனம் பித்து; பிள்ளை மனம் கல்லு என்ற கதையாகிப் போனது! **அவர் ஏதோ எட்டாத உயரத்தில் இருப்பதாகவும்; அவருடைய இரகசியங்களின் மேல் யாராலும் திறக்க முடியாத பூட்டுகள் தொங்குவதாகவும் கற்பனை செய்து கொண்டோம். தேவனைப் பற்றின இப்படிப்பட்ட தவறான படங்கள்; தேவனையறியாத உலகத்தாரிடமிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டவையாகும்!**

அவரிடமிருந்தே நம்மை தோன்றச் செய்த அவர்; இரகசியங்களை மட்டும் தன்னிடமே வைத்துக் கொள்ளுவதென்பது எப்படி சாத்தியமாகும்? அவரைப் போலவே செயல்பட வேண்டும் என்பதற்காக நம்மை உருவாக்கி அனுப்பின தேவன்; தன்னுடைய இரகசியங்களை மட்டும் தன்னுடனேயே வைத்துக் கொள்வாரானால்; அவருடைய சித்தம் (திட்டம்) பூமியில் நடப்பது எப்படி? **அவர் நம் மேல் நம்பிக்கை வைத்திருக்கிறார்; அவருடைய மனவிருப்பத்தை நாம் பூமியில் நிறைவேற்றுவோம் என்று விசுவாசிக்கிறார். அதைப் போலவே நாமும் அவர் மேல் நம்பிக்கை வைத்திருக்கிறோம்; நம்முடைய மனவிருப்பத்தை அவர் பூமியில் நிறைவேற்றுவார் என்று விசுவாசிக்கிறோம்! (சங். 40:8, ஏசாயா 44:28) *What a surprise!* நாம் தேவனிடம் எதிர்பார்ப்பதையே அவரும் நம்மிடம் எதிர்பார்க்கிறார்!** எப்படியென்றால் மணவாளனுக்காக (இயேசுவுக்காக) தேவனால் ஆயத்தமாக்கப்பட்டு வருகிற மணவாட்டியாகிய சபை நாம். ***Made for each other!***

தேவ இரகசியங்கள் எதுவுமே நம்மைத் தாண்டி இந்தப் பூமிக்குள் வருவதில்லை; நாம் தான் அவருடைய ஊடகம். அதனால் நாம் தேவனுடைய இரகசியங்களை அவரிடமிருந்து பெற்று தேவ சபைக்குள் அனுப்புவது மிக மிக அவசியம், கட்டாயம். ***(compulsory).*** அவருடைய இரகசியங்களைத் தெரிந்து கொள்ளாமல் அவருடைய வேலையைப் பூமியில் செய்ய முடியாது.

## *இதோ அந்த இரகசியம்:*

புதிய உடன்படிக்கையின் சத்தியங்களே அந்த இரகசியம். இயேசு தேவனுடைய இரகசியங்களை வெளிப்படுத்தவே வந்தார். இந்தப் பூமியைச் சுதந்தரித்து, அதைக் கீழ்ப்படுத்தி ஆளுகை செய்து, பண்படுத்திக் காத்து, தன் பலனால் பூமியை நிரப்புவதற்குத் தேவையான இரகசியங்களை இயேசுவின் மூலமாக தேவன் அனுப்பிக் கொடுத்தார். அந்த இரகசியங்கள் களவு போன விஷயமும், யார் களவாடிக்கொண்டு போனார்கள் என்ற விஷயமும் தெரிந்த விஷயம்! அந்த இரகசியங்களைக் கண்டுபிடிக்கிற வேலையில் தான் இப்போது நாம் இருக்கிறோம். இயேசுவின் மூலமாக நமக்குக் கொடுக்கப்பட்ட புதிய உடன்படிக்கையின் அடிப்படையில் செயல்படுகிற பிரமாணங்கள் தான் அந்த இரகசியம்!

பூமியின் மீது கோடிக்கணக்கான, எண்ணிக்கைக்கு அடங்காத ஜீவராசிகள் வாழ்கின்றன. அவைகளெல்லாம் ஓரறிவு, இரண்டறிவு, மூன்றறிவு, நான்கறிவு, ஐந்தறிவுள்ளவை. ஆனால் மனிதன் மட்டும் ஆறறிவு படைத்தவன் என்பது ஆரம்பக்கால பதிப்பாக இருந்தது. போகப்போக மனிதனின் அறிவில் (அறிவியல்) வளர்ச்சி வளர வளர தனக்கு ஏழாம் அறிவு இருப்பதாக மனிதன் மார் தட்டிக்கொண்டான். அதோடு கதை முடியவில்லை, எட்டாம் அறிவு என்ற ஒன்றை இப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள்; ஒன்பதாம் அறிவு அதோ வந்து கொண்டிருக்கிறது. இவ்வளவு அறிவை மனிதன் பெற்றிருந்தபோதும்; இன்னமும் மனிதனின் சிந்தனைப் பகுதிகளில் இருட்டும், அதிலிருந்து முளைத்தெழும்பும் குழப்பங்களும், கலக்கங்களும், சந்தேகங்களும், இதுவரையிலும் யாராலும் பதில்

சொல்ல முடியாத கேள்விகளும் தான் மிச்சமிருக்கின்றன. ஆனால் புதிய உடன்படிக்கையின் ஊழியக்காரர்களான நம்மிடத்தில் எல்லா கேள்விகளுக்கான விடையும் காத்திருக்கின்றன. தேடி வருபவர்கள் அவற்றைக் கண்டுபிடிக்கிறார்கள். இந்த அறிவு எங்களாலே எங்களில் உருவாகவில்லை, நாங்கள் உருவாக்கவுமில்லை. அண்டசராசரத்தை உருவாக்கி; தன்னைப் போலொத்த மனிதனை உருவாக்கி, அவனுக்காகப் பூமியை அந்தரத்திலே தொங்க வைத்து, கடலுக்குக் கரையை வகுத்த தேவாதி தேவனாலேயே இந்த அறிவு எங்களுக்குள் உண்டானது.

நாம் யார்? எதற்காக இந்தப் பூமிக்கு வந்தோம்? நம்மை அனுப்பியது யார்? அவருடைய பெயர் என்ன? நம்மால் அவருக்கு ஆக வேண்டிய காரியங்கள் என்னென்ன? அவருடைய மனவிருப்பத்தையெல்லாம் நம்மால் நிறைவேற்றி வைக்க முடியுமா? இயேசு யார்? அவர் ஏன் பூமிக்கு வந்தார்? எதற்காக அவர் சிலுவையில் அறையப்பட்டார்? ஏன் உயிரோடு எழுந்தார்? அவர் மூலமாக தேவன் மனுக்குலத்துக்கு என்னென்ன செய்ய வேண்டும் என்று திட்டமிட்டார்? அதற்காக அவர் என்னென்ன செய்திருக்கிறார்? அதை உபயோகித்து நம்மால் என்னென்ன செய்ய முடியும்? செய்து முடிப்போமா? இது சாத்தியம் தானா? இப்படிப்பட்ட எக்கச்சக்கமான கேள்விகளுக்கான பதில்களை, கடந்து வந்த விதைகள் 1 – 15 வரையிலான புத்தகங்களின் வாயிலாகப் பார்த்துக் கொண்டு வருகிறோம். **இது என்னவோ நமக்கு வித்தியாசமாக, புதுமையான காரியங்களாகத் தோன்றுகிறது. ஆனால் இந்த இரகசியங்கள் எல்லாம் ஏற்கெனவே உலக மனிதர்களுக்குள் இயக்கத்தில் இருக்கிறது என்பதும், பெருமளவிலான தேவபிள்ளைகளுக்கு இது தெரியாது என்பதும் ஆச்சரியமான இன்னொரு இரகசியம்!**

*"அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது. அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக் கொள்ளவில்லை* ***(the darkness has never put it out).*** *அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை* ***(the world did not recognize him).*** *அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்கு சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை* ***(his own people did not receive him).*** *(யோவான். 1:4, 5, 10, 11)"* தேவன் தன்னுடைய ஒரே குமாரன் இயேசுவை பல இரகசியத் திட்டங்களுடன் பூமிக்கு அனுப்பி வைத்தார். ஆனால் அவருடைய ஜனங்களுக்கு அவரை யாரென்றே புரியவில்லை, அதனால் தான் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. மனுஷனாகப் பிறந்து வந்த அவரை அவருடைய சொந்த ஜனங்கள் புரிந்து கொள்ளாமல் புறக்கணித்துத் தள்ளிவிட்டார்கள். அவரைப் புறக்கணித்தபோது; அவருக்குள்ளாக மறைந்திருந்த வெற்றி வாழ்வுக்கான இரகசியமும் தேவபிள்ளைகளின் எல்லையை (சபையை) விட்டு விலகி உலகத்துக்குள் போய் விழுந்தது! தேவனையறியாத உலகத்தாருக்கு விஷயம் புரிந்து போனது, ஏற்றுக்கொண்டார்கள், பற்றிக் கொண்டார்கள்.

இரகசியங்களைப் பின்பற்றி பூமியைச் சொந்தமாக்கிக் கொண்டார்கள், ராஜாங்கம் பண்ணுகிறார்கள், பண்படுத்தாமல் தரிசு நிலங்களில் விதை விதைக்கிறார்கள், முள்ளும் குறுக்கும் முளைத்து எழும்பிக்கொண்டேயிருக்கின்றன. அதனுடைய பலன் பூமியில் பெருகி வருவதைக் பார்க்கிறோம். தேவனுடைய திட்டம் அவருடைய இரகசிய பிரமாணங்களின்படி இயக்கப்பட்டாலும் இயேசு இல்லாத அந்த இயக்கம் எதிர்மறையாகிப் போனது; பூமியின் மீது இடி விழுந்தது! ***(negative feedback, degrade, anti-clockwise).*** நீங்கள் 100% நல்லவர்களாகவே இருந்தாலும், 100% நல்லதே செய்தாலும், இயேசு இல்லாத பட்சத்தில் எல்லாமே ***absolute zero*** வாகிவிடும் என்பதே தேவ இரகசியத்தின் முக்கியமான சாராம்சமாகும்! *என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்றார் இயேசு* ***(you can do nothing without me)*** *(யோவான். 15:5)* ஏனென்றால் தேவனுடைய கையின் சிருஷ்டிப்பு முழுவதுமே இயேசுவைக் கொண்டு, இயேசுவால், இயேசுவுக்கென்று உருவாக்கப்பட்டது. ...சகலமும் அவருக்குள் (இயேசுவுக்குள்) சிருஷ்டிக்கப்பட்டது; ...சகலமும் அவரைக்கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது. கொலோ. 1:16 ***(all things were created by him, and for him (Jesus) and he is before all things, and by him all things consist)*** அதனால் எல்லா காரியங்களிலும் நிச்சயமாக சகலத்தையும் உருவாக்கியவரின் தலையீடு, குறுக்கீடு, மேற்பார்வை இருந்தே ஆகவேண்டும்;

***(interference)*** அது கட்டாயம், வேறு வழியில்லை. உலகத்தார் பெருமளவில் பூமியை ஆக்கிரமிப்பு செய்து சாதனைகள் படைத்துக் கொண்டிருந்தாலும்; அங்கே தேவனுடைய தலையீடு மறுக்கப்படுவதால் தேவனுடைய திட்டம் நிறைவேறவில்லை. நாமோ, மிகச்சிறிய கூட்டத்தாராக இருந்தாலும், சிறிய அளவில் வேலை பார்த்தாலும் அவைகளை தேவனின் மேற்பார்வையில் விட்டிருக்கிறோம். பூமியை மிகச்சிறிய அளவில் சுதந்தரித்து, கீழ்ப்படுத்தி, ஆளுகை செய்கிறோம்; பண்படுத்தி, பாதுகாத்துக் கிடைக்கிற சிறிய அளவிலான பலனால் பூமியை நிரப்ப முயற்சிக்கிறோம். என்றாலும் தேவனுடைய பங்களிப்பு அதில் இருப்பதால்; தேவதிட்டம் நிறைவேறிக்கொண்டிருக்கிறது. நம்முடைய நடவடிக்கைகள் கண் காணாத ஆவிக்குரிய மண்டலத்தில் இயக்கம் பெறுகிறது. ஏற்ற காலம் வரும் போது திடீரென்று வெளிப்படும் தேவ திட்டத்தில் சம்பந்தப்பட்ட வெற்றியான காரியங்கள் பூமியை ஆக்கிரமிக்கும்; அப்போது பூமியே அதிர்ச்சிக்குள்ளாகும் ***(shocking).*** நிச்சயம் அவர்கள் இதை எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

## *கிறிஸ்துவின் சிந்தையே நம் ஆற்றல் தளம்:*

மனிதனுடைய சிந்தனை மண்டலத்தின் ஆற்றலைப் பற்றி பார்த்து வருகிறோம். மனிதன் கடவுளைப் போலவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறபடியால் இப்படிப்பட்ட ஆற்றல் அவனுக்குள் ஒளிந்திருப்பதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. ஆனால் அதைப்பற்றி எதுவுமே தெரியாமல்; வாழ்ந்து முடித்து விட்டு போய்ச் சேர்ந்து விடுவது தான் ஆச்சரியமான விஷயம்!

இந்தப் பிரபஞ்சமே சிந்தனையிலிருந்து தோன்றிய ஒன்று தான் என்று குவாண்டம் இயற்பியல் விதி (விஞ்ஞானம்) ஒத்துக் கொள்கிறது! பிரபஞ்சத்தை உருவாக்கிய சிந்தனை யாரிடமிருந்து தோன்றியது? அதன் காரணகர்த்தா யார்? மறைமுகமாக விஞ்ஞானமே மெய்ஞானத்தை (கடவுளை) ஒத்துக் கொள்ளும் காரியத்தை கவனியுங்கள்! கற்பனைக்கு எட்டாத மாபெரும் சக்தி வெளியில் (பிரபஞ்சத்தின்) இயங்கிக் கொண்டிருக்கும் ஆற்றல் தளம் தான் மனிதன். மனிதனின் ஆற்றல் அவனுடைய சிந்தனையிலிருந்து தான் ஆரம்பமாகின்றது. தன்னுடைய அறிவாற்றலினால் பூமியையே நிரப்பி வைத்திருக்கிறான் மனிதன். ஆனால் இவைகளின் துவக்கம் மனிதனின் சிந்தனை தான். அதனால் நம்முடைய சிந்தனைப் பகுதியின் மேல் கவனத்தைச் செலுத்த வேண்டியது ***(concentration)*** மிகவும் அவசியம்.

*"...எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது. (1 கொரி. 2:16)." "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; (பிலி. 2:5)."* நல்ல காரியங்களையே சிந்தித்து, அதையே பேசி, அதை நடைமுறைப்படுத்தும் காரியத்தைத்தான் உலகத்தார் கையாளுகிறார்கள்; என்றாலும் அவர்களுடைய சிந்தை கிறிஸ்துவின் சிந்தை கிடையாது, ஏனென்றால் அவர்களிடம் கிறிஸ்துவே கிடையாது. *"ஆனால் நமக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது. (1 கொரி. 2:16) (We have the mind of Christ)."* இந்த சிந்தை தான் உலகத்தாரை முந்திச் செல்ல நம்மை உந்தித்தள்ளும் இரகசியம்! இயேசுவைப் போலவே சிந்தித்து, இயேசுவைப் போலவே பேசி, இயேசுவைப் போலவே வேலை செய்ய வேண்டும் என்பதே மாபெரும் தேவ இரகசியத்தின் ஆரம்பப் பகுதியாகும்.

*"... கர்த்தருக்குள் நான் உங்களுக்குச் சாட்சியாகச் சொல்லி எச்சரிக்கிறது என்னவெனில், மற்ற புறஜாதிகள் தங்கள் வீணான சிந்தனையிலே நடக்கிறது போல நீங்கள் இனி நடவாமலிருங்கள். எபே. 4:17."* புறஜாதிகள் என்ற வார்த்தை கடவுள் நம்பிக்கையில்லாதவர்களையும், உண்மையான தேவனை அறியாமலுமிருக்கிற புறமதஸ்தர்களையும் குறிக்கிறது ***(heathen, non-christian).*** அவர்கள் எல்லா விஷயங்களிலும் தேவபிள்ளைகளைகளைப் பார்க்கிலும் புத்திசாலித்தனமாக இருந்து பூமியையே வளைத்துப் போட்டுக் கொண்டார்கள். என்றாலும் வாழ்க்கையில் முன்னேற, வெற்றியாக வாழ, செழிப்படைய அவர்களின் சிந்தனைகளைத் தெரிந்து கொள்ளக்கூடாது என்று வேதம் நம்மை எச்சரிக்கிறது; அது ஏன்? அதைத்தான் பார்க்கப் போகிறோம்.

அவர்களின் சிந்தனைகள் எப்படியிருக்கும் என்பதை வேதம் வெட்டவெளிச்சமாக்கிக் காட்டுகிறது. *"அவர்கள் புத்தியில் அந்தகாரப்பட்டு, (whose minds are in the dark) தங்கள் இருதய கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்து; (They have no*

*part in the life that God gives, for they are completely ignorant and stubborn) உணர்வில்லாதவர்களாய், சகலவித அசுத்தங்களையும் ஆவலோடே நடப்பிக்கும்படி, தங்களைக் காமவிகாரத்திற்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள். (They have lost all feeling of shame; they give themselves over to vice and do all sorts of indecent things without restraint) எபே. 4:18, 19"*

தேவன் தங்களுக்கென்று ஏற்படுத்தியிருக்கும் பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான வாழ்க்கையைப் பற்றி எதுவும் தெரியாமல் இருக்கிறார்கள். அதனால் அவர்களின் சிந்தனைப் பகுதியை இருள் மூடியிருக்கிறது; குருடனைப் போலத் தடவித் திரிகிறார்கள். மதிமயங்கிய நிலையில் – மயக்க நிலையில், மிருகத்தை விட கேவலமாக வாழக் கற்றுக்கொண்டார்கள். தங்களுக்குள்ளாக இருந்து வெளிப்படும் தரங்கெட்ட பாவச் சிந்தனைகளுக்குத் தங்களை விட்டுக்கொடுத்து விட்டார்கள் ***(compromise).*** உலகத்தார் தேவபிள்ளைகளை விட புத்திமான்களாயிருக்கிறார்கள் தான் ***(clever - quick to understand and apply ideas - skilful).*** ஆனால் அவர்களின் சிந்தனைத் தளம் எவ்வளவு மோசமாக இருக்கிறது என்பதைக் கவனியுங்கள். ஜெயிக்கிறவர்களெல்லாம் நல்லவர்களென்றும்; தோற்கிறவர்களெல்லாம் கெட்டவர்களென்றும் முடிவு செய்துவிடக்கூடாது. அவர்களுக்குத் தேவனைத் தெரியவில்லை, சிந்தனை மண்டலமும் சரியில்லை, என்றாலும் தேவனுடைய பிரமாணங்களைச் சரியானபடி கையாளத் தெரிந்திருக்கிறது; அதனால் ஜெயிக்கிறார்கள், அவ்வளவு தான்.

**தேவபிள்ளைகள் ஆமை வேகத்திலிருக்கிறார்கள்; அவர்களோ முயல்களாக முன்னேறுகிறார்கள். என்றாலும் முயல் தூங்கிய நேரத்தில் ஆமை அதை முந்திச் சென்று (overwhelm) இலக்கை அடைந்த கதை வெறும் ஒண்ணாம் வகுப்பு பாடப்புத்தகக் கதை மட்டும் அல்ல. அது நம்முடைய வாழ்க்கையின் கதை!** நம்முடைய சிந்தனைத் தளம் அவர்களுடையதைப் போலானதல்ல; அவ்விதமாக நாம் கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ளவுமில்லை (எபே. 4:20) நமக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது (1 கொரி. 2:16) **இயேசு கிறிஸ்து எப்படியெல்லாம் சிந்திப்பாரோ அப்படியே நாமும் சிந்திக்க வேண்டும், அவரைப் போலவே பேச வேண்டும், அவரைப் போலவே கிரியை நடப்பிக்க வேண்டும்! அதாவது எந்த காரியத்தை எடுத்துக் கொண்டாலும் அதில் கிறிஸ்தவ (கிறிஸ்துவின்) கண்ணோட்டம், கிறிஸ்தவ (கிறிஸ்துவின்) அணுகுமுறை, கிறிஸ்தவ (கிறிஸ்துவின்) தொலைநோக்குப் பார்வை வேண்டும். இதுவே அவர்களை முந்திச் சென்று பூமியை நம் வசமாக்கும் பரம இரகசியமாகும்; நம் தேவன் இயேசு நமக்குக் கற்றுக் கொடுத்த இரகசியமாகும்.**

இவ்விதமாகத்தான் நாம் கற்றுக்கொண்டதை நடைமுறைப்படுத்த வேண்டும். சிந்தனைத் தளம் ஒன்று தான்; ஆனால் அதில் எதை வைத்திருக்கிறோம் என்பது தான் முக்கியம். கம்ப்யூட்டர் ஒன்று தான்; ஆனால் அதில் எதை ஏற்றி வைத்திருக்கிறோம் என்பதைப் பொறுத்து அது இயங்குகிறது. ***( to load software on to a computer, fit or connect something)*** இயேசுவை வைத்திருக்கிறோமா? அல்லது சுயத்தையும், புயபலத்தையும், கண்டதையும் வைத்திருக்கிறோமா? உங்கள் கிரியைகளின் மூலம் அதைக் கண்டுபிடிக்க முடியும். ***(activities)***

## *கிறிஸ்துவின் சிந்தையென்றால் ... ?:*

நம் தேவனுடைய (கிறிஸ்துவின்) சிந்தனை எப்படியெல்லாம் இருக்கிறது? அவர் எப்படியெல்லாம் பேசுகிறார்? எப்படியெல்லாம் கிரியைகள் நடப்பிக்கிறார்? என்பதைப் பற்றின காரியங்களை அவருடைய வார்த்தைகளினடிப்படையில் தெரிந்து கொண்டால்; நாமும் அதைப் போலவே நடந்து கொண்டு ***(follow-up)*** இந்தப் பூமியில் அவருடைய வேலையை முடிக்க வசதியாக இருக்கும்.

*"...உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள். பிலி. 4:8 (... fill your minds with those things that are good and that deserve praise: true, noble, right, pure, lovely, and honourable)"* நம்முடைய மனதில் இப்படிப்பட்ட காரியங்களையே வைக்க வேண்டும். அப்படி வைக்கும் போது அதிலிருந்து சிறகடித்துப் பறக்கும்

சிந்தனைகள் நம் வாய்வழியாக வெளியேறும் (வார்த்தைகளாக). அப்படிப்பட்ட வார்த்தைகள் தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றி முடிக்கும் என்பதில் சந்தேகமேயில்லை. **நம்முடைய சிந்தனையில் எதை வைக்கிறோமோ அது தான் வாய் வழியாக வெளியே புறப்பட்டு வரும். கண்டதையும் உள்ளே வைத்தால் கண்டதும் தான் வெளியே வரும்! நாலு கழுதைகளைக் கூட்டிக்கொண்டு வந்து ஒரு வீட்டிற்குள் அடைத்து வையுங்கள்; ஒரு மணி நேரம் கழித்து கதவைத் திறந்தால் ... ? பச்சைக் கிளிகள் அழகாகப் பேசிக்கொண்டு வெளியே வரும் என்றா நினைத்தீர்கள்? அது தான் இல்லை, கழுதைகள் தான் துள்ளிக்கொண்டு வெளியே வரும்! நீங்கள் கொஞ்சம் தூரமாகப் போய் நின்று கொண்டால் நல்லது; இல்லாவிட்டால் எட்டியும் உதைக்கும். மூக்கா, அல்லது பல்லா எது முதலில் உடையும் என்பது கழுதையின் கால்களின் வேகத்தையும் கோணத்தையும் பொறுத்தது!**

கிறிஸ்துவின் சிந்தையை உள்ளே வைத்தால்; வெளியேறும் வார்த்தைகள் கிறிஸ்துவுக்கு பிரயோஜனமாக இருக்கும்; அவருடைய வேலையைச் செய்ய வழி ஏற்படுத்திக் கொடுக்கும். சாத்தானின் சிந்தையை உள்ளே வைத்தால்... ? வெளியே வரும் வார்த்தைகள் அவனுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும். இப்போதிருக்கும் இந்தப் பூமியின் மீது ஒரு நிமிஷம் உங்கள் பார்வையைத் திருப்புங்கள் ***(glance)***. இப்படிப்பட்ட மோசமான உலகம் யாரால் உருவானது? பூமியைக் கெடுக்க செவ்வாய் கிரகத்திலிருந்து யாரும் இறங்கி வரவில்லை. பூமியில் இதுவரையிலும் வாழ்ந்து முடித்த; இப்போதும் வாழ்ந்து கொண்டிருக்கிற மனிதர்களின் சிந்தனையிலிருந்து தோன்றின பூமியைத்தான் நாம் பார்க்கிறோம். தங்களுடைய பாதக சிந்தனைகளினால் மனிதன் கெடுத்துப் போட்ட பூமியைத்தான் நாம் பார்த்து வருகிறோம்; வேறு வழியில்லாமல் அதில் நடமாடி வாழ்ந்தும் வருகிறோம். சிந்தனைகளால் கெடுக்கப்பட்ட பூமியைச் சிந்தனைகளாலேயே சரி செய்யும் வேலை நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது; முள்ளை முள்ளால் தான் எடுக்க வேண்டும்.

## *பூமியைக் கெடுத்த சிந்தனைகள்:*

*"மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், **அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே (evil thoughts)** என்றும் கர்த்தர் கண்டு, தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது. தேவன் பூமியைப் பார்த்தார்; இதோ அது சீர்கெட்டதாயிருந்தது; மாம்சமான யாவரும் பூமியின்மேல் தங்கள் வழியைக் கெடுத்துக்கொண்டிருந்தார்கள். **... அவர்களாலே பூமி கொடுமையினால் நிறைந்தது... (violent deeds)** (ஆதி. 6:5,6,12,13)"*

தேவன் பூமியின் மீது வாழ்ந்த மனிதர்களின் தரங்கெட்ட மோசமான வாழ்க்கையைப் பார்த்து மனஸ்தாபப்படவில்லை. அவர்களுடைய இருதயத்தின் நினைவுகளைப் பார்த்துத்தான் வேதனைப்படுகிறார். ஏனென்றால் மனிதர்களின் கெட்ட நடவடிக்கைகளினால் அவ்வளவாகப் பூமிக்கு ஆபத்தில்லை; ஆனால் அவர்களுடைய நினைவுகளினால் தான் பூமிக்குப் பேராபத்து காத்திருக்கிறது என்பது தேவனுக்குத் தெரியும்! அதனால் தான் ***upset*** ஆகிறார்; அவருடைய இருதயமே உடைந்து போயிற்று! ஏனென்றால் அந்தக் காலகட்டத்தில் பூமியை நிறைத்திருந்த கொடுமை மனிதர்களின் சிந்தனையிலிருந்து தோன்றியவைகள் தான் என்பது அவருக்குத் தெரியும். அந்தக் காலக்கட்டத்தில் வாழ்ந்த மனிதர்களின் சிந்தனைகள் நிஜமான உருவெடுக்கும் போது அது இந்தப் பூமியை மிக மோசமான விதத்தில் சிதைத்துப் போட்டுவிடும் ஆபத்து இருக்கிறது. ஏனென்றால் அவர்களின் நினைவுகளின் தோற்றம் மிகவும் மோசமாக இருந்ததைத் தேவன் கவனித்தார்.

தன்னைப் போலவே தன்னால் உருவாக்கப்பட்ட மனிதர்களால் என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும் என்பது தேவனுக்குத் தெரியும். மனிதனுடைய சிந்தனைப் பகுதியின் ஆற்றல் அவருக்குத்தான் தெரியும். தன்னுடைய சிந்தனையில் உருவாகி நிஜவுருக்கொண்ட 6,00,00,000,00,00,000,00,00,000 டன் (6 கோடி கோடி கோடி டன்) எடையுள்ள இந்தப் பிரமாண்டமான அழகு நிரம்பிய பூமி தன் கண் முன்னால் சின்னாபின்னமாவதை பார்க்கத் தேவன் தயாராக இல்லை. அதை விட முக்கியமான காரியம் என்னவென்றால்; இந்தப் பூமியை யாருக்காக அவர் வடிவமைத்தாரோ அவர்கள் (மனிதர்கள்)

சின்னாபின்னமாவதையும் தேவனால் நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை. ஏனென்றால் தேவன் எப்படி தோற்றமும் முடிவுமில்லாதவராக இருக்கிறாரோ; அப்படியே மனிதர்களும் தோற்றமும் முடிவுமில்லாத ஆற்றலுள்ளவர்கள் என்பது அவருக்குத் தெரியும். மனிதனை அழிக்க முடியும் என்றால் கூட அதோடு பிரச்சனை முடிந்தது என்று விட்டுவிடலாம். ஆனால் மனிதனின் நிலைமை அவ்வளவு இலேசானதல்ல. மனிதனின் சரீரத்தை மட்டும் தான் அழிக்க முடியும். உள்ளேயிருக்கும் ஆவி மனிதனையும் அந்த ஆவியோடு இணைந்திருக்கும் சிந்தனைப் பகுதியையும் அழிக்கவே முடியாது; அவை அழிவில்லாத தன்மையுள்ளவைகள்.

தேவன் தன்னைப் போலவே சிந்தித்து, பேசி, செயல்படும் ஆற்றலையும் மனிதனுக்குள்ளாக வைத்தது தான் மனிதனுக்கே பேராபத்தாக முடிந்தது. தயாள மனதுள்ள தேவன் தன்னைப் போலவே மனிதர்களையும் சிருஷ்டி கர்த்தாக்களாகப் படைத்தார். இது அவருடைய விரிந்து பரந்த அன்பு நிறைந்த மனதைக் காட்டுகிறது. தேவன் தவறு செய்யவில்லை; தன்னுடைய பிள்ளைகளைத் தன்னைப் போலவே பெற்றெடுத்தார் (உருவாக்கினார்). இதில் தவறு எதுவுமில்லையே, அப்படித்தான் உருவாக்க முடியும் வேறு வழியில்லையே? அந்தக் காலக்கட்டத்தில் மனிதனின் நினைவுப்பகுதிக்குள் மறைந்திருந்த காரியங்களைத் தேவன் பார்த்தார். அங்கே மட்டரகமான சிந்தனைகள் இருந்தன, அவைகள்: கெட்ட, மட்டமான, தவறான, ஒழுக்கமில்லாத, பாவமான, அழுக்கான, அற்பமான, அவமரியாதையான, நேர்மையில்லாத, அவலட்சணமான, வன்முறை நிறைந்த, கொடிய, துரோகமுள்ள, விஷமுள்ள, பொறாமையுள்ள, பழிவாங்கும் உணர்வுள்ள, வஞ்சனையான, பேய்த்தனமான, மிருகத்தனமான, இருளான, அதிர்ச்சியளிக்கக்கூடிய, வெறுக்கக்கூடிய, கோரமான, பகையுள்ள, மிகமிக தரக்குறைவான, ***( an evil deed wicked, bad, wrong, immoral, sinful, foul, vile, dishonourable, corrupt, iniquitous, depraved, villainous, nefarious, vicious, malicious; malevolent, sinister, demonic, devilish, diabolical, fiendish, dark; monstrous, shocking, despicable, atrocious, heinous, odie, execrable; informal low-down, dirty)*** அகராதியில் இதிலுள்ள ஒவ்வொரு வார்த்தைக்கும் அர்த்தத்தைப் பார்த்தால்... முடிவில் நான் ஏற்கெனவே சொன்னபடி 1,00,000 பாவங்கள் இருந்தன.

இவைகளெல்லாம் ஆதாமின் மூலமாக நுழைந்த பாவப்பிரமாணத்தினால் விளைந்தவை. ஆரம்பத்தில் பெருமை, பொய், மீறுதல், கீழ்படியாமை, பயம், அடுத்தவர் மீது பழி சுமத்துதல் என்று ஆரம்பித்த இந்தப் பாவம் கிளைவிட்டு விரிந்தது, கொடிவிட்டு தாவிப்படர்ந்து பூமியை மூடியது. எல்லாப் பாவங்களும் சிந்தனை வடிவத்தில் தான் இருந்தன. இனிமேல் அவைகள் நிஜ உருவத்தை அடைய அதிக பட்ச நாட்கள் பிடிக்காது என்பது தேவனுக்குத் தெரியும். அதனால் அந்தப் பாவங்களைச் சிந்தனைப் பகுதியிலேயே அழித்து விடுவது தான் நல்லது என்று தேவன் முடிவெடுத்தது எப்படி தவறாக இருக்க முடியும்? இது மனுவர்க்கத்தின் மீது தேவன் வைத்திருக்கும் அதிகப்படியான அக்கறையைத்தானே காட்டுகிறது? மனிதனின் சிந்தனைகளைச் செயல்முறைப்படுத்த அவனுக்கு சரீரம் தேவைப்படுகிறது; சரீரம் அழிக்கப்பட்டுப் போகும் வரையிலும் தான் அவனால் பொல்லாப்பு செய்ய முடியும், பூமியை கெடுக்கவும் முடியும். சரீரம் அழிக்கப்பட்டுப் போனால்... மனிதன் செத்துப் போனால்... இப்படிப்பட்ட காரியத்தைச் செய்ய தேவன் நிர்ப்பந்திக்கப்பட்டார். அந்தக் காலகட்டத்தில் வாழ்ந்த மனிதர்களின் மனதில் இருந்த பொல்லாத சிந்தனைகள் அழிக்கப்பட்டதா இல்லையா என்பது வேறு ***subject.*** ஆனால் அதற்குப் பிறகு அந்தப் பொல்லாத சிந்தனைகள் பூமியின் மீது செயல்பாட்டுக்கு வருவதை, சரீரத்தை அழிப்பதன் மூலம் தேவனால் தடுக்க முடிந்தது.

நல்ல தேவன் அன்று எடுத்த அந்த அதிரடி நடவடிக்கையினால் தான் இன்றளவும் பூமி நிலைத்திருக்கிறது; மனிதனும் வாழ்ந்து கொண்டிருக்கிறான், தேவனுடைய திட்டமும் செயல்பாட்டில் இருக்கிறது. தேவன் அப்படியே விட்டிருந்தால் என்னவாகியிருக்கும் என்பதைச் சற்று யோசித்துப் பாருங்கள். ஒட்டுமொத்த மனுக்குலமும் நரகத்தை நோக்கிப் பயணிப்பதைத் தவிர வேறு வழியே ***(option)*** இல்லாமல் போயிருக்கும். **தேவனுக்காக யாரும் வக்காலத்து வாங்கத் தேவையில்லை சார்! தேவன் தவறானவராக இருக்க வாய்ப்பே இல்லை. ஒருவேளை தவறான தேவனுக்காக நாம் வக்காலத்து வாங்கி பேசிக்கொண்டேயிருந்தோமானால் அது நமக்குத்தான் பிரச்சனையாக முடியும்! தேவன் நல்லவர் நல்லவர் நல்லவர் மட்டுமே.** நம்மைக்குறித்து

நன்மையானதை நினைக்கிறார், நன்மையானதைப் பேசுகிறார், நன்மையானதைத் தருகிறார் என்ற நிச்சயம் எனக்கு 100% இருப்பதால் தான் இந்த ஊழியத்தையே செய்து கொண்டிருக்கிறேன். என் நம்பிக்கை 1% குறைந்தால் கூட நான் என் ஊழியத்தையே விட்டுவிட வேண்டியதாயிருக்கும். புரிந்துகொள்ள முடியாத ஒரு குழப்பபடியான தேவனுக்கு யாரும் ஊழியம் செய்ய வேண்டிய அவசியமில்லை. அப்படிச் செய்தால் அது சரியாக வராது. அதனால் அவருக்கும் பிரயோஜனமில்லை, நமக்கும் பிரயோஜனமில்லை. விளங்கிக் கொள்ளாமல் செய்யும் எந்த காரியமும் விளங்காது; அதாவது புரிந்துக் கொள்ளாமல் செய்யும் எந்த காரியமும் உருப்படாது. நம் தேவனை நன்றாக புரிந்து வைத்துக் கொண்டு; அவருடைய வேலையை செய்தோமானால் வாசல்கள் தானாக திறந்து விடும்; வெற்றி நம்மைத் தேடி வரும்.

## *சிந்தனைத் தளத்தை சரிசெய்வோம்:*

நம்முடைய சிந்தனைப் பகுதிகளில் எதையெல்லாம் வைத்தால் நாம் வெற்றியடைந்து தேவனுடைய திட்டத்தை நோக்கி வேகமாக முன்னேற முடியும் என்பதைப் பற்றிய இரகசியங்களை தொடர்ச்சியாக கற்றுக் கொள்ளப் போகிறோம்; பரிசுத்தாவியானவர்தாமே உதவி செய்வாராக. *"வீண் சிந்தனைகளை நான் வெறுத்து, உமது வேதத்தில் பிரியப்படுகிறேன். சங். 119:113."* தேவனுக்கு விருப்பமில்லாத எதையுமே நம்முடைய சிந்தனைப் பகுதியில் வைக்கக்கூடாது. அவைகளை வீண் சிந்தனைகள் ***(vain thoughts)*** என்று வேதம் கூறுகிறது. அப்படியானால் தேவனுக்குப் பிரியமான காரியங்களை மட்டுமே நாம் யோசிக்க வேண்டும். அப்படிப்பட்ட யோசனைகளே வாழ்க்கையில் நம்மை வெற்றியடைய வைத்து, தேவனுடைய திட்டத்தையும் பூமியில் செய்து முடிக்கும். உலகத்தார் தங்களுடைய சிந்தனைப் பகுதியில் வெற்றியை வைத்ததினால் தான் ஜெயித்திருக்கிறார்கள் என்பதை மறுக்க முடியாது தான். ஆனால் அவர்களின் சிந்தனைத் தளத்தில் இயேசு இல்லாத வெறும் பிரமாணங்களே இயங்கிக் கொண்டிருக்கிறது. அதனால் தான் இன்றளவும் தேவனுடையத் திட்டத்தை அவர்களால் நிறைவேற்ற முடியவில்லை. அவர்களுடைய வெற்றி, செழிப்பு, நற்கிரியைகள் எல்லாமே மாயையாக, விழலுக்கு இறைத்த நீராக, வெற்று மேகங்களாக, பாலைவனத்தில் பெய்யும் மழையாக வீணாகப் போய்க்கொண்டிருக்கிறது. (சங். 62:9) வெற்றி பெற்றுவிட்டதாக அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்; ஆனால் அவர்களின் சாதனைகளினால் தேவனுக்கு எந்தப் பிரயோஜனமுமில்லை.

உலகத்திலிருந்தும், நமக்குள்ளிருந்தும், அவங்க இவங்ககிட்டேயிருந்தும் நமக்குத் தேவையான வெற்றியின் சிந்தனைகளை எடுக்க முடியாது. அப்படியானால் தேவனுடைய திட்டத்திற்கான சிந்தனைகளை நாம் வேதத்திலிருந்து தான் ஆராய்ந்து, தோண்டி, பூட்டை உடைத்து, (என்னவேண்டுமானாலும் செய்து) எடுக்க வேண்டும். **தேவனுடையத் திட்டத்திற்கான இரகசியங்கள் வைக்கப்பட்டிருக்கும் அறையின் வாசல் இயேசுவே. அவர்கள் வாசல் வழியாகப் போகாமல் பக்க வழியாகப் போய் (ஜன்னல் வழியாக ஏறிக்குதிக்கும் திருடன் போல) இரகசியங்களை எடுத்துக் கொண்டு அதே வழியில் வெளியே குதித்து விட்டார்கள். நாம் நேர் வழியில், இயேசுவின் வழியாக நுழைந்து போய் எடுக்கிறோம்; இது தான் வித்தியாசம்.**

*"கர்த்தாவே, துன்மார்க்கனுடைய ஆசைகள் சித்தியாதபடி செய்யும்; அவன் தன்னை உயர்த்தாதபடி அவனுடைய யோசனையை* ***(illegal plans)*** *நடந்தேறவொட்டாதேயும். (சங். 140:8)"* என்ற ஜெபத்தில் அர்த்தம் இல்லாமலில்லை. **துன்மார்க்கன் என்றால் கெட்டவன் என்று அர்த்தமல்ல; இயேசுவை ஏற்றுக் கொள்ளாதவன், உண்மையான தேவனை அறியாதவன் என்று அர்த்தம். அவர்கள் நல்லவர்களாகவே இருந்தாலும் வேதம் அவர்களை இப்படித்தான் அர்த்தப்படுத்துகிறது *(Biblical language).*** அவர்களுடைய ஆசைகள் நிறைவேறினாலும் அவைகள் தேவனுடைய திட்டத்தில் வராது. அவர்களின் யோசனைகளின்படியே காரியங்கள் நடந்தாலும்; அவர்கள் உயர்ந்த நிலையில் வைக்கப்பட்டாலும்; அவர்களால் தேவனுடைய வேலையை முடிக்க முடியாது. ஏனென்றால் தேவனில்லாமல் – அவரைப்பற்றின அறிவில்லாமல் – அவருடைய ஆலோசனையில்லாமல், உதவியில்லாமல் – அவருடைய வேதப்பிரமாணங்களுக்கு வெளியே செய்யப்படும் எந்த யோசனையும் நன்மையானதாக இருக்க வாய்ப்பே இல்லை. அதனால் தான் இப்படி ஜெபிக்க வேண்டியதாயிருக்கிறது.

*"... துன்மார்க்கனுடைய விளைவோ பாவத்தை பிறப்பிக்கும். (நீதி. 10:16)."* தேவனையறியாதவர்களிடம் நிச்சயமாக நன்மையின் விதை இருக்க முடியாது. சகலவித நன்மைகளின் ஊற்று நம் தேவன் இயேசு தான். *"... நாம் அனுபவிக்கிறதற்குச் சகல வித நன்மைகளையும் **(everything)** நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன்... (1 தீமோத். 6:17)"* அவரைத் தவிர வேறு யாரிடமிருந்தும் நன்மையின் விதைகள் கிடைக்காது. மற்ற விதைகளெல்லாம் நன்மையை விளைவிக்காது; பாவம் பாவத்தைத்தான் பிறப்பிக்கும், ***sin leads only to more sin.***

*"... நீதிமான் விரும்புகிற காரியம் அவனுக்குக் கொடுக்கப்படும். நீதி. 10:24"* **நீதிமான் என்றால் நல்லவன் என்று அர்த்தமல்ல; இயேசுவை ஏற்றுக் கொண்டவன், உண்மையான தேவனை அறிந்தவன் என்று அர்த்தம். அவர்கள் நல்லவர்களாக இல்லாவிட்டாலும் வேதம் அவர்களை இப்படித்தான் அர்த்தப்படுத்துகிறது!** ***(Biblical language).*** நீதிமான்கள் விரும்புகிற காரியம் அவர்களுக்கு கிடைத்தால் அவைகளினால் தேவனுடையத் திட்டம் நிறைவேறும். அவர்கள் உயர்ந்த நிலையில் வைக்கப்படும் போது; தேவனுடைய வேலையைச் செய்து முடிக்க முடியும். அதனால் கண்டிப்பாக இந்த வாக்குத்தத்தம் ஒவ்வொரு நீதிமானுடைய வாழ்க்கையிலும் கட்டாயம் நிறைவேற வேண்டியதொன்றாயிருக்கிறது. *"நீதிமான்களுடைய ஆசை நன்மையே; ... (நீதி. 11:23)"* ***(The desire of the righteous is only good)***

நீதிமான்களுக்கு மாத்திரமல்ல; துன்மார்க்கனுக்கும் வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியுமா? *"துன்மார்க்கன் பயப்படும் காரியம் அவனுக்கு வந்து நேரிடும்; ... நீதி. 10:24." "... துன்மார்க்கருடைய நம்பிக்கையோ கோபாக்கினையாய் முடியும். நீதி. 11:23"* ஆனால் அவை எதிர்மறையாக ***(negative)*** இருக்கின்றன. ஏனென்றால் இயேசு இல்லாத சிந்தனைத் தளத்தில் பயம் தான் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும். பயம் என்பது விசுவாசம் என்ற பிரமாணத்தின் எதிர்மறைப்பக்கம். இது எதையும் சாதிக்காது; அதுமாத்திரமல்ல இருப்பதையும் அழித்துவிடும். இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் இயேசுவால் வந்ததல்ல; கீழ்ப்படியாமையினால் தேவனுடைய பிரமாணங்கள் புரட்டிப்போடப்பட்டபோது விளைந்தவை. ஏதேனின் செழிப்படர்ந்த மரங்கள் இருந்த இடங்களிலே இப்போது முள்ளுக்காடுகள் காணப்படுவதைப் போல இதுவுமாயிற்று.

## *சிந்தனை + பேச்சு + செயல் (ஒருங்கிணைப்பு):*

சிந்தனை செய் மனமே, செய்தால் தீவினை அகன்றிடுமே... என்ற உலகப் பாடல் வரிகளும் வேதத்திலிருந்து எடுக்கப்பட்டது தான். *"வாழ்வு காலத்தில் நன்மையை அநுபவித்திரு, தாழ்வு காலத்தில் சிந்தனை செய்; ... பிர. 7:14."* சிந்தனையைச் சரி செய்வதன் மூலம் மோசமான வாழ்க்கையை நல்லவிதமாக நாமே மாற்றியமைக்க முடியும் என்ற வேத இரகசியம் உலகத்தைச் சுற்றி வந்து கொண்டிருக்கிறது. நமக்கு முன்னதாகவே உலகத்தார் அதைக் கண்டுபிடித்து விட்டார்கள் (கண்டு + பிடித்துக் கொண்டார்கள்). நன்றாக வாழ்ந்திருக்கும் போது கொஞ்சம் கொஞ்சமாக நம்முடைய நிலைமை நம்மையறியாமல் மோசமாகிக் கொண்டே போகிறது. கடைசியில் தாழ்வின் காலத்திற்குள் போய்விடுகிறோம். ஏன்? எல்லாம் நம்முடைய சிந்தனைப் பகுதியில் உதித்த பயம், சந்தேகம் தான் காரணம். இதை நாமே நிதானித்துப் பார்க்க முடியும். அதனால் தான் தாழ்வு காலத்தில் சிந்தித்துப் பார்க்கச் சொல்லி பரிசுத்தாவியானவர் நமக்கு ஆலோசனை தருகிறார். வாழ்க்கையில் எல்லாவற்றையும் இழந்து, தோற்றுப்போன நிலைமையில் சிந்தனை செய் என்கிறார். அழுது புலம்புவதால் எந்த பிரயோஜனமுமில்லை, அது நம்முடைய சிந்தனையை இன்னும் மோசமாக்கி, இன்னும் மோசமான தாழ்வுப்பகுதிக்கு நம்மை இழுத்துச் சென்றுவிடும். இப்படி **தாழ்வின் காலத்தில் வாழ்வைப் பற்றி சிந்திப்பதின் மூலம் நம்முடைய நல்வாழ்க்கையை நாமே மீண்டும் உருவாக்கி விட முடியும்.**

அப்படியானால் எதைச் சிந்திப்பது? நம்முடைய சிந்தனைகளை பின்னோக்கி ஓடவிட்டு***(rewind)***; வாழ்க்கையை நாசமாக்கிய மோசமான சிந்தனைகள் என்னென்ன? அவைகள் எப்போது நம் மனதை ஆக்கிரமித்தன? அது எப்படியெல்லாம் வேலை செய்தது என்பதை சிந்திக்க வேண்டும். இனிமேல் அப்படிப்பட்ட காரியங்களை சிந்திக்காமல்; நம் வாழ்க்கை நன்றாக மாறுவதற்குத் தேவையானதை மனதில் போட வேண்டும். வெண்டை விதைகளை விதைத்து விட்டு கத்தரிச் செடியை எதிர்பார்ப்பது முட்டாள்தனம். வாழ்க்கை நன்றாக வேண்டுமானால் நல்லவற்றை – நல்ல விதைகளை ஊன்ற

வேண்டும். வேத வசனங்களின் அடிப்படையில் செயல்பட முடிவெடுக்க வேண்டும்; ஏனென்றால் நல்ல காரியங்கள் அதில் மட்டுமே இருக்கின்றன. வாக்குத்தத்தங்களுக்குள் அவைகள் கருவாக வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் நம்முடைய மனதில் அவைகளை பதியன் போடும் வரைக்கும் கரு வளர்வதில்லை. வருஷக்கணக்கில் காய்ந்த விதைகளை பாக்கெட்டில் போட்டு வைத்திருப்போம்; அவைகள் அப்படியேதான் இருக்கும். ஆனால் ஒரு நாள் அந்த பாக்கெட்டை திறந்து சில விதைகளை எடுத்துக் கொண்டு தோட்டத்திற்குள் போய் மணலில் சில குழிகளைப் போட்டு அவற்றை ஊன்றுகிறோம், மூடுகிறோம், தண்ணீர் ஊற்றுகிறோம். இவைகளெல்லாம் ஒரு சில நிமிஷங்களில் நடக்கிறது; ஆனால் அந்த நிமிஷத்தில் ஒரு குறிப்பிட்ட நொடியில் அந்த விதைக்குள் இருக்கும் கருவுக்கு ***(embryo)*** உயிர் வருகிறது. தாவரங்களின் விதைகள் மட்டுமல்ல; நம்முடைய மனதும் அதன் நினைவுகளும் இதே முறையில் தான் ***(process)*** இயங்குகிறது. உடனடியாக நிலத்தின் மேல் எதுவும் தெரிவதில்லை; ஆனால் சில நாட்களில் ஊன்றப்பட்ட விதைக்குள்ளிருந்து அதன் குருத்து வெளியே தலை நீட்டும். மனதும் அப்படித்தான்; அடுத்த நாளே எல்லாம் சரியாகிவிடுவதில்லை, ஆனால் நம் வாழ்க்கையில் செழிப்பின் துளிர் தோன்றிவிட்டது என்பது மட்டும் நிச்சயம். **மனதில் உறுதி வேண்டும்; விரும்பிய பொருள் கைபட வேண்டும். நினைவில் நல்லது வேண்டும்; கைவசமாவது விரைவினில் வேண்டும்** என்றான் உலகக் கவிஞன்!

ஆசை விண்ணிலே பறந்து போகிறது; கால்கள் மண்ணிலே நடந்து போகிறது. நம்முடைய ஆசை கண் காணாத உலகில்... நம்முடைய அனுபவமோ கண் காண்கின்ற உலகில்... நம்முடைய விசுவாசமே இரண்டையும் இணைக்கும் பாலமாகிறது. நம் சிந்தனை மண்டலமே விசுவாசத்தை உற்பத்தி செய்கிறது, வார்த்தைகள் அதை வெளியே கொண்டு வருகிறது, கிரியைகள் அதோடு கையைக் கோர்த்துக் கொள்கிறது. இந்தப் பூமியை ஏதேனாக்க வேண்டிய பொறுப்பு; தேவதிட்டத்திற்கான அழைப்பைப் பெற்ற ஒவ்வொருவருடைய தலையின் மேலுமிருக்கிறது. நீங்களும் நாங்களும் தான் பொறுப்பாளிகள்; அவங்க செய்வாங்க, இவங்க செய்வாங்க என்று தப்பிக்க முடியாது. *"... அது என் மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ. 1கொரி. 9:16."* சுவிசேஷத்தைப் பிரசங்கியாமலிருப்பதால் மாத்திரமல்ல, தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றாமல் தட்டிக்கழித்து ஓட நினைப்பதும் நமக்குத்தான் பிரச்சனையைக் ***(terrible)*** கொண்டுவருகிறது. **சுவிசேஷம் தட்டிக்கழிக்கப்படும் ஒவ்வொரு நிமிஷமும் நமக்கெதிராக திரும்புகிறது. இயேசுவை அறியாத ஒவ்வொரு மனிதனின் சிந்தனைத் தளமும் தேவனுடைய திட்டத்திற்கெதிரான ஏவுகணைகளை அனுப்ப ஆரம்பிக்கிறது!** நாம் பெற்றுக்கொண்ட தேவ இரகசியங்களை உலகத்துக்குச் சொல்லும் வேலையை நாம் மூச்சுவாங்க செய்ய வேண்டும். இந்த விஷயத்தில் வியர்வை ஆறாக ஓடினாலும் பரவாயில்லை, ஒரு வேளை இரத்தம் சிந்த வேண்டியதாகக் கூட இருக்கலாம்.

## *மனிதர்களை Focus பண்ணுவோம்:*

ஒவ்வொரு மனுஷனுக்குள்ளும் கிறிஸ்துவைக் கொண்டுவருவது மட்டுமல்ல, அவர்களின் ஆத்துமாவுக்குள் (மனம்) கிறிஸ்துவின் சிந்தையைக் கொண்டு வருவதே பூரண சுவிசேஷத்தின் முக்கிய வேலையாகும். சுவிசேஷத்தின் இரகசியம் என்று பவுல் சொல்வது இதைத்தான் (எபே. 6:20). இந்த வேலையை நாம் ஒழுங்காகச் செய்ய ஆரம்பித்தாலே போதும்; பூமியை ஏதேனாக்க வேறு தனிப்பட்ட முயற்சிகள் தேவையிருக்காது. பூமியைப் பாதுகாக்க, பூமி வெப்பமாகாமலிருக்க, பனிமலைகள் உருகாமலிருக்க, சுனாமி வராமலிருக்க, கொள்ளைநோய்கள் பரவாமலிருக்க உலக மனிதர்கள் என்னென்னவோ முயற்சிகளை எடுக்கிறார்கள். விஞ்ஞானிகள் மூளையை கசக்கு கசக்கு என்று கசக்குகிறார்கள்! அவர்கள் மூளைகளையெல்லாம் எடுத்து உரலில் போட்டு உலக்கையினால் நொய்யோடே நொய்யாகக் குத்தினாலும் இந்தப் பிரச்சனைகளுக்கெல்லாம் தீர்வு வரப்போவதில்லை! (நீதி. 27:22). தீர்வு ***(solution)*** நம்ம கையில இருக்கு பிரதர், சிஸ்டர்; பூமியின் மீது நம் கவனத்தைச் செலுத்தி பிரயோஜனமில்லை. இந்தப் பூமி யாருக்காக உருவாக்கப்பட்டதோ அவர்களின் மீது கவனத்தைத் திருப்ப வேண்டும் ***Yes,*** மனிதர்களை நோக்கி நம் கண்களை திருப்புவோம்; மனிதன் சரியானாலே பூமி சரியாகிவிடும்; தேவதிட்டமும் நிறைவேறும். ஒரு ஸ்கூலில்

மாணவர்களுக்கு ஒரு போட்டி வைக்கப்பட்டது. இந்த உலகத்தின் வரைபடங்களை எடுத்து சிறிய துண்டுகளாகக் கிழித்து வகுப்பிலுள்ள 50 மாணவர்களுக்கும் ஆசிரியர் கொடுத்தார். ஒவ்வொரு படமும் 25 துண்டுகளாக்கப்பட்டிருந்தது. வகுப்பிலிருந்த மாணவர்கள் 50 பேர். 5 நிமிடங்களுக்குள் எல்லாத்துண்டுகளையும் சரியாக ஒட்ட வைத்து மீண்டுமாக பூமியின் வரைபடத்தை சரியாக கொண்டுவர வேண்டும்; இது தான் போட்டி. எல்லா மாணவர்களும் முயற்சித்துப் பார்த்துக் குழம்பிக் கொண்டிருந்தார்கள். ஒரு மாணவன் மட்டும் அந்தத் துண்டு வரைபடங்களைத் திருப்பிப் பார்த்தான். அங்கே ஒரு மனிதனின் படம் துண்டு துண்டாக அச்சிடப்பட்டிருப்பதைக் கண்டு பிடித்தான். உடனே அவன் அந்த மனிதனின் படத்தினை கால் முதல் தலை வரை சரியாகப் பொறுத்திக் கொண்டு அப்படியே திருப்ப, அங்கே அந்த உலக வரைபடம் மொத்தமும் சரியாக ஒட்டி முழு வரைபடமாகப் பரிணமித்திருந்தது.. என்ன ஆச்சரியம். ஆம்... இதே போல் தான் ஒவ்வொரு மனிதனின் மனமும் சரியானாலே எல்லாம் சரியாகி விடும். மனதில் என்ன இருக்கிறதோ; அது தொடர்பான சிந்தனைகள் தான் எழும்பும். கிறிஸ்து மனதில் இருந்தால்; கிறிஸ்துவின் சிந்தனைகள் எழும்பும். கிறிஸ்து பதிக்கப்பட்ட இருதயத்திலிருந்து; அவருடைய திட்டத்திற்கு எதிரிடையான எந்த நினைவுகளும் எழும்பாது. அதனால்தான் இந்த அளவுக்கு முழுமூச்சாக கிறிஸ்துவை அறிவிக்க வேண்டிதாயிருக்கிறது. இயேசுவை ஏற்றுக் கொண்டால்; பாவத்திலிருந்து விடுதலை, பரலோகம் போகலாம் என்று அறிவிப்பது சுவிசேஷமல்ல, அது சுவிசேஷத்தின் ஆரம்பம் தான். இயேசுவை ஏற்றுக் கொள்வதால் நமக்கு வரப்போகிற செழிப்பை அறிவிக்கும் போது தான் அந்த சுவிசேஷம் பரிபூரணத்தை அடைகிறது.

சுவிசேஷம் அறிவிக்கும்போது கேட்கிற மனிதர்களுடைய மனதில் என்ன விழுகிறது என்பதைக் குறித்து ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். அவர்களை மகிழச் செய்யக்கூடிய, நற்காரியங்களை, பிரயோஜனமானவைகளை, ஆறுதல் வார்த்தைகளை பேச வேண்டும். **நம்முடைய சுவிசேஷத்தின் மூலமாக மக்களின் மனங்களை சந்தோஷப்படுத்த வேண்டியது மிகவும் அவசியம். மனம் மகிழும்போது உற்சாகமாகச் செயல்படுகிறது; அங்கே சந்தோஷப் பூக்கள் பூக்கிறது, நினைவுகள் வண்ணப் பறவைகளாக சிறகடித்து பறக்கின்றன.** இந்த விதைகள் புத்தகங்களின் மூலம் இந்த வேலை தான் நடந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட பூரண சுவிசேஷம் தேவபிள்ளைகளுடைய மனங்களை தேவ திட்டத்திற்கு ஆயத்தமாக்குகிறது; இருதயம் பண்பட்டு நல்ல நிலமாக மாறுகிறது. அதில் ஊன்றப்பட்ட சத்திய வார்த்தைகள் முளைக்க ஆரம்பிக்கின்றன. அவர்கள் கிறிஸ்துவின் சிந்தனையாளர்களாக மாறுகிறார்கள். பிறகென்ன சிந்தனைகள் வார்த்தைகளாக பரிணமிக்கின்றன... வார்த்தைகள் செயல் வடிவம் பெறுகின்றன. பூமியில் தேவனுடைய திட்டத்தை நிறைவேற்ற (ஏதேனாக்க) ஆளுக்கு ஆள் புறப்பட்டு வருவார்கள். தங்களுடைய பலனால் (செழிப்பினால்) பூமியை நிரப்ப ஆரம்பிப்பார்கள். இயேசுகிறிஸ்து சிலுவையின் மூலமாக மனுவர்க்கத்திற்கு கொண்டுவந்த செழிப்பான வாழ்க்கையின் திட்டத்தை ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனும் பெற்றுக் கொள்ளும் போது... பூமி ஏதேனாக மாறத்தானே செய்யும்? மாறித்தான் ஆக வேண்டும் வேறு வழியில்லை; அல்லேலூயா!

**நமக்கு ஆச்சரியத்தைக் *surprise* கொடுக்க ஏதேனின் பூங்கொத்துக்களோடு வந்து கொண்டிருக்கும் இயேசுவை வாழ்த்தி வரவேற்போம். வழி மீது விழி வைத்துப் பார்த்து பார்த்துக் காத்திருந்ததில் பூத்துப்போன கண்களினால் மாலைத் தொடுப்போம், புன்னகைச் செண்டமைப்போம்.** *"நெடுங்காலமாய்க் காத்திருக்குதல் இருதயத்தை இளைக்கப்பண்ணும்; விரும்பினது வரும் போதோ ஜீவவிருட்சம் போல் இருக்கும். நீதி. 13:12"*

## *சிந்தனை ஆயுதம்:*

*"இப்படியிருக்க, கிறிஸ்து நமக்காக மாம்சத்திலே பாடுபட்டபடியால், நீங்கள் அப்படிப்பட்ட சிந்தையை ஆயுதமாகத் தரித்துக்கொள்ளுங்கள். 1 பேதுரு. 4:1."* சிந்தனைகளை ஆயுதங்களாக உபயோகித்துக் காரியங்களைச் சாதிக்க வேண்டும். ஆயுதங்களால் உயிரைக்காக்கவும் முடியும், உயிரை எடுக்கவும் முடியும்; அது நல்லவற்றையும் செய்யும், கெட்டவற்றையும் செய்யும். நம்முடைய மனம் தான் இந்த சிந்தனை ஆயுதங்களைத் தயாரித்துக் கொடுக்கிறது. அதை எப்படி வெளியே கொண்டு வந்து பிரயோஜனப்படுத்துகிறோம் என்பதைப் பொறுத்துத்தான் அதன் பலன் அமைகிறது. நம்முடைய

சிந்தனைகள் அந்த அளவுக்கு பலமுள்ளவைகள் ***(strengthen, effectively, operative).*** நம்முடைய சிந்தனைகளால் உலகத்தையே அசைக்க, கலக்க, தலை கீழாக மாற்றிவிட முடியும். நாம் காணும் பிரபஞ்சம் (அண்ட சராசரம்), பூமி அதிலுள்ள காரியங்கள் எல்லாமே முதலில் தேவனுடைய சிந்தனையில் தான் இருந்தன என்பதைப் பார்க்கிறோம். (ஆதி. 8:22).

தேவன் எல்லாவற்றையும் உருவாக்கி முடித்து விட்டு; மேற்பார்வையிடும் போது, அவையெல்லாம் மிகவும் நன்றாக இருந்ததாகச் சொல்வதைப் பார்க்கிறோம். அப்போது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது. (ஆதி. 1:31) ***(it was very good ... he was very pleased).*** எல்லாமே உயர்ந்த தரமுள்ளதாயிருந்தது; அவருக்கு மிகுந்த திருப்தியளிப்பதாக இருந்தது. தான் உருவாக்கிய எல்லாமே அவருக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடியதாக இருந்தது. எல்லாமே மனிதனுக்குப் பொருத்தமானதாகவும் இருந்தது. புத்தம் புதியதாக, அழகானதாக, சுத்தமானதாக இருந்தது. எல்லாமே நியமித்த விதிமுறைகளின் மேல் ஒழுங்காக இயங்கக்கூடியதாக அமைந்திருந்தது. தேவனுடைய சிந்தனை அந்த அளவுக்கு மிகவும் நன்றாக இருந்ததால் தான்; எல்லாம் மிக நன்றாக அமைவதற்கு காரணமானது. தேவனைப் போலவே சகல விதத்திலும் உருவாக்கப்பட்டிருக்கும் நாம்; அவரைப் போலவே நம்முடைய மனதை மிகவும் நன்றாக வைத்துக் கொள்வதன் மூலம்; நம்முடைய வாழ்க்கையை நல்ல விதமாக செதுக்கும் உளிகளை அதிலிருந்து உருவாக்க முடியும். நம்முடைய செழிப்பின் தோட்டத்தில் வேலை செய்ய தேவையான எல்லா ஆயுதங்களையும் உருவாக்க முடியும். தேவன் ஆரம்பத்தில் உருவாக்கின குறைவில்லாத தரமான உலகத்தை நாமும் உருவாக்க முடியும். தேவன் ஏதேனுக்குள் துவக்கி வைத்த அந்தத் செழிப்பின் திட்டத்தை மிகவும் நல்ல விதமாக முடிக்கவும் முடியும்.

## *சிந்தனைக்குப் பூட்டு:*

மனிதனின் மனம் இந்த அளவுக்கு முக்கியமானதாக இருப்பதால்; அதற்கு மிகவும் அதிகப்படியான பாதுகாவல் அவசியமாயிருக்கிறது. வீட்டுக்குப் பூட்டு போடுகிறோம்; அதற்கு முன்னதாக உள்ளே ஒவ்வொரு அறைக்கும் தனித்தனியாக பூட்டுப் போடுகிறோம். பணத்துக்கும், விலையுயர்ந்த பொருட்களுக்கும், நகைகளுக்கும் தனிப்பட்ட பாதுகாப்பைத் தருகிறோம். கார் ஷெட்டுக்கு தனியான பூட்டு, கோழிக்கூட்டுக்குப் பூட்டு, நாய்க்குக்கூட பூட்டு! (35,000 ரூபாயாச்சே, யாராவது தூக்கிட்டுப் போயிட்டால்... ). தோட்டத்துக்கு பூட்டு, துரவுக்குப் பூட்டு, பேங்க் லாக்கரில் பூட்டு... இதெல்லாம் சரிதான், கண்டிப்பாக அவசியமும் கூட. ஆனால் ஒரு இரகசியம் காலாகாலமாக மனிதர்களுக்குத் தெரியாமலேயே போய்விட்டது. இவைகளெல்லாம் எங்கேயிருந்து வந்ததோ; எது இவைகளுக்கெல்லாம் மூலமாக இருந்ததோ; அதற்குப் பூட்டு போடாமல் விட்டுவிட்டார்கள், பிறகென்ன, ரோட்டில் போய்க்கொண்டிருந்ததெல்லாம் திறந்து கிடந்த கதவின் வழியாக மனதுக்குள் வந்துவிட்டன!

இதனால் மனிதர்களின் மனம் போர்க்களங்களாகிவிட்டன. எப்போதும் யுத்த இரைச்சல், கூக்குரல்கள், புழுதி மண்டலம்! உள்ளே என்ன நடக்கிறதென்பதே யாருக்கும் புரியவில்லை, பலன்? இப்போது வெளியே என்ன நடக்கிறதென்பதும் யாருக்கும் தெரியவில்லை? ஏன்? எதற்காக? எப்படி? எதனால்? யாரால்? என்ற கேள்விகளை மூட்டைக்கட்டிக்கொண்டிருக்கிறோம். **மனிதர்கள் தங்கள் மனதிற்கு தேவையான அளவுக்கு பாதுகாப்பைக் கொடுத்திருப்பார்களானால்; இன்று அதிலிருந்து தோன்றிய நினைவுகள் புழுதியை வாரியிறைத்துக் கொண்டிருக்கும் தூசிக்கிரகத்தை (பூமி) உருவாக்காமல் இருந்திருக்கும்!** ஒண்ணுமே புரியலே உலகத்திலே, என்னமோ நடக்குது, மர்மமா இருக்குது என்று பாடும் மனிதனே! மர்மம் உன் மனதிற்குள்ளே தான்; அந்த மர்ம முடிச்சை அவிழ்த்தால்; என்ன நடந்தது? ஏன் நடந்தது? என்பது புரியும்.

இந்த இரகசியத்தை விளக்கும் வசனங்கள்: *"நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லா புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும். (பிலி. 4: 6,7)."* மனதுக்கு பாதுகாப்பு அவசியம்; அதுவும் இயேசுவுக்குள் தான்

இருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். சிந்தனைப் பகுதிக்கு பாதுகாப்பைத் தர இயேசுவைத் தவிர வேறு எந்த வழியும் கிடையாது *(no choice).* இதனால் தான் பூமியின் சாபத்தடைகளையும் சாத்தானின் வேகத்தடைகளையும் மீறி இயேசு இந்த அளவுக்கு முழுவேகத்துடன் பிரசங்கிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார். அவரைத் தடுத்து நிறுத்த எத்தனையோ சக்திகள் எழும்பின போதும்; கடந்த 2013 ஆண்டுகளுக்கும் மேலாகியும் இன்னமும் அவர் பிரசங்கிக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறார்; இன்னமும் அவர்தான் பிரசங்கிக்கப்படுவார்.

நம்முடைய மனதை பத்திரப்படுத்த வேண்டுமானால்; முதலில் பிரச்சனைகளைப் பார்த்துக் கவலைப்படாமல் இருக்க வேண்டும். கவலைப்படும்போது மனதிலிருந்து எழும்பும் நினைவுகள் தெளிவில்லாமல் உருப்படியில்லாமல் இருக்கும்; அவைகள் திசை தெரியாத பறவைகளாக பறந்து கொண்டேயிருக்கும். இதனால் பிரச்சனைகளை அதிகப்படுத்துவோமே தவிர அதி–ருந்து விடுதலையாக மாட்டோம். நம்முடைய ஜெப வேளையில் தான் இப்படிப்பட்டக் காரியங்களை செயல்முறைப்படுத்த வேண்டும். நாம் கவலையோடு தேவனிடம் போனோமானால்; அவரை நம்பவில்லை என்று அர்த்தமாகிறது. நம்மால் நம்ப முடியாத கடவுளிடமிருந்து நாம் எப்படி உதவியை பெற்றுக் கொள்ள முடியும்? அல்லது தன்னை நம்பாத ஒருவனுக்கு கடவுள் எதைத்தான் கொடுக்க முடியும்? கவலைப்படும் மனது பல காரியங்களை யோசிப்பதால்; அந்த யோசனைகள் ஒன்றுக்கொன்று மோதி உடைய ஆரம்பிக்கிறது. முடிவில் தேவனிடமிருந்து பெற்றுக் கொள்வதற்குத் தேவையான எதுவுமே அதில் இல்லாமல் போகிறது.

*"நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது. எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும். பிலி. 4:6,7"* நம்முடைய ஜெபவேளையில் தான் தேவன் தரும் சமாதானத்தை *(peace)* நம்முடைய மனம் பெற்றுக் கொள்கிறது. மற்ற நேரங்களில் உலகத்தில் உள்ள பல காரியங்கள் நம்முடைய ஐம்புலன்கள் வழியாக மனதிற்குள் ஏறிக்கொண்டே இருக்கிறது. ஜெப நேரத்தில் எது நடக்கிறதோ இல்லையோ; ஒரு பாதுகாப்பு உணர்வு கிடைக்கிறது, மனது அமைதியாகிறது; நிம்மதிப் பெருமூச்சோடு இடத்தை விட்டு எழும்பி நிற்க முடிகிறது. நம்முடைய சிந்தனையை ஒழுங்கு படுத்தும் வேலையில் ஜெபம் முக்கிய இடத்தைப் பெறுகிறது என்பதை மறுக்க முடியாது. நமக்குச் சரியாக ஜெபிக்கத் தெரியாவிட்டாலும் இது நடக்கிறது. குவா குவா என்று அழும் குழந்தைகளின் ஜெபவேளையிலும் இது நடக்கிறது. அழும் குழந்தைக்கு எதுவும் தெரியாது தான்; ஆனால் பால் கிடைக்கிறதே, வயிறு நிரம்பியதும் நிம்மதியுடன் தூங்க ஆரம்பிக்கிறது. அழுகையினால் ஓரளவுக்கு மனதின் துக்கம் ஆற்றப்படும் என்பது உண்மை தான்; என்றாலும் நம் வெற்றிக்கு இது உதவாது. புதிய உடன்படிக்கையின் வெளிச்சத்தில் செய்யப்படும் ஜெபங்களே நம் மனதின் பாதுகாப்பை நிச்சயப்படுத்திக் கொடுக்கிறது. ஏனென்றால் அது அர்த்தம் நிறைந்ததாகவும், காரண காரியங்கள் புரிந்ததாகவும் இருக்கிறது.

*"உமது வேதம் என் மனமகிழ்ச்சியாயிராதிருந்தால், என் துக்கத்திலே அழிந்துபோயிருப்பேன்." என்றார் சங்கீதக்காரன் சங். 119:92ல்.* ஜெபவேளைகள் என் வாழ்க்கையில் இல்லாமலிருந்திருந்தால்; என் மனதின் துக்கம் என்னைக் கொன்று போட்டிருக்கும்; என்னை மட்டுமல்ல, என் குடும்பத்தையே என்று என்னால் சொல்ல முடியும்! ஜெபம் என்றாலே அது வேத வசனங்களுடன் சேர்ந்த ஒன்று தான் என்று சொல்லித் தெரிய வேண்டியதில்லை. வேத வாசிப்பு + தியானம் + ஆராய்ச்சி இவையெல்லாம் 90% என்றால் ஜெபம் 10% மாத்திரம் தான். நம்முடைய ஜெபவேளையில் நம்முடைய இருதயத்திற்கும் *(inner man)*, அதோடு இணைக்கப்பட்டிருக்கிற சிந்தனைப் பகுதிக்கும் *(mind)* தேவையான பாதுகாப்பு கிடைக்கிறது. கண்டதும் உள்ளே போகாமல் பாதுகாக்கப்படுகிறது; அப்படியே உள்ளே போயிருந்தாலும் அவற்றை வெளியே தள்ள நமக்குச் சந்தர்ப்பம் கிடைக்கிறது. அதனால் நம்முடைய மனதை சரிசெய்து கொண்டு; அதில் சரியான காரியங்களை வேத வசனங்களினடிப்படையில் வைப்பதின் மூலம் *(set - locate)* பண்ணுவதின் மூலம்; சரியான காரியங்களை அதிலிருந்து ராக்கெட்டைப் போல சீறிப்பாய்ந்து வெளிவரச் செய்ய முடியும். அப்படிப்பட்ட

காரியங்கள் பூமியின் எல்லைகளை தேவனுடைய திட்டத்தினடிப்படையில் செழிப்படையச் செய்யக்கூடியவைகளாக இருக்கும் என்பதில் சற்றேனும் சந்தேகமில்லை.

## *மனதைப் பராமரிப்போம் (Take care):*

மனிதன் ஆவி – ஆத்துமா – சரீரம் என்ற முப்பரிமாணமுள்ளவன் என்பது பொதுவாக நம் எல்லோருக்கும் தெரிந்த விஷயம் ***(basic).*** இதில் ஆவி என்பது மனிதனைக் குறிக்கிறது; வேதம் புரிய வேண்டும் என்பதற்காக அவனை உள்ளான மனிதன் என்று அழைக்கிறது. அதாவது சரீரத்திற்கு உள்ளாக இருக்கிற ஆவி தான் உண்மையில் மனிதன்! இந்த ஆவி மனிதனுடன் தான் ஆத்துமா (மனம் – ***mind - seat of thought***) இணைக்கப்பட்டிருக்கிறது; அதாவது மனிதனுக்கு ஒரு மனம் உண்டு; அது சிந்தனைகளின் இருப்பிடமாக செயல்படுகிறது. அதாவது ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய ஆத்துமாவில் தான் சிந்திக்கிறான். இந்த இரண்டும் ஒரு சரீரத்திற்குள்ளாக வைக்கப்பட்டிருக்கிறது. மனிதனுடைய இந்த முப்பரிமாணத்தில் சரீரம் மட்டும் பார்க்கக்கூடிய ரீதியில் இருப்பதால் இதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துப் பழகிவிட்டோம். ஆனால் நாம் முக்கியமாக கவனிக்க வேண்டிய பகுதி ஆவி + ஆத்துமா தான். ஆத்துமா என்றால் மனம் என்று அர்த்தப்படுகிறது. இந்தப் பகுதியில் தான் நம்முடைய சிந்தனையோட்டம் நடைபெறுகிறது. தினசரி சுமார் 20,000 க்கும் மேற்பட்ட சிந்தனைகள் நம்முடைய மனதிலிருந்து எழும்பி கடந்து போகிறது. மேகம் போல கடந்து போகிற சிந்தனைகளினால் பாதிப்பேதுமில்லை; ஆனால் அது மழை மேகமாக மாறும் போது தான் மாற்றங்களுக்குத் தயாராகிறது. திரும்பத் திரும்ப நம் மனதை சுற்றிச் சுற்றி சுழன்று கொண்டிருக்கும் நினைவுகளைக் குறித்து எச்சரிக்கையாயிருப்பது நல்லது. ஏனென்றால் இன்னும் கொஞ்சம் காலத்துக்குள் அவைகள் மனதை முற்றுகையிடப்போவது உறுதி! அதற்குப் பிறகு சிறைபிடிக்கப்படப் போவதும் நிச்சயம்! பிறகென்ன நம்மை அவைச் சிறைக் கைதிகளைப் போல நடத்த ஆரம்பித்து விடும்!

தேவனுடைய இராஜ்ஜியத்தின் நன்மைகளை இந்தப் பூமியில் ஸ்தாபிப்பதற்கேதுவான காரியங்களைச் மனதில் வைக்க வேண்டும் (விதைக்க வேண்டும், பதியன் போட வேண்டும்). தேவனுடைய திட்டத்தை பூமியின் மேல் நிறைவேற்ற உதவாத நினைவுகளெல்லாம் வீணானவைகளே. அதனால் தேவையில்லாத சிந்தனைகளை எழும்பச் செய்ய மனதை அனுமதிக்கக்கூடாது. *"வீண் சிந்தனைகளை (vain thoughts - useless - no purpose -without success) நான் வெறுத்து, உமது வேதத்தில் பிரியப்படுகிறேன். சங். 119:113."* ஒன்றுக்கும் உதவாத, எதற்கும் பிரயோஜனமில்லாத, எந்த நோக்கமுமில்லாத, வெற்றியின் இலக்கைத் தொட முடியாத எந்த சிந்தனையும் வீணானது தான். இப்படிப்பட்ட சிந்தனைகளால் இந்தப் பூமி மீண்டும் மீண்டும் கொடுமையை அனுபவிக்கிறது. இப்படிப்பட்ட மோசமான சிந்தனைகள் நம் இருதயத்தை ஆக்கிரமிக்காதபடி தடைசெய்வதற்கு ஒரேயொரு வழி தான் இருக்கிறது; அது: அவருடைய வேதத்தில் பிரியமாயிருப்பது; அதாவது வேதத்தை வாசித்து, இந்தப் பூமியை நன்மையினால் நிரப்பக்கூடிய காரியங்களை எடுத்து மனதில் வைப்பது; அதைத்தவிர வேறு வழி இல்லை. நம் வாழ்க்கைக்கு நன்மைகளை தரக்கூடிய வாக்குத்தத்த வசனங்கள் நிரப்பப்பட்ட மனது தேவையில்லாதவைகளை யோசிக்காது. நமக்கு வாக்குப்பண்ணப்பட்ட ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள் நம்முடைய மனதில் வீணான சிந்தனைகள் நுழைவதை தடுத்து நிறுத்துகிறது, நம் வாழ்க்கையைப் பாதுகாக்கிறது, ஏன் இந்த உலகத்தையே பாதுகாக்கிறது. வேதத்தைத் தொடர்ந்து ஆராய்ந்து அதிலிருந்து நன்மையானவைகளை எடுத்து, எடுத்து சிந்தனையில் பதிப்பதன் மூலம்; நம் மனம் புதிதாகிறது; புதிய எண்ணங்கள் வளர ஆரம்பிக்கிறது, நாம் சிந்தையில் தேறினவர்களாக மாற ஆரம்பிக்கிறோம். இதைத்தான் தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார்; இப்படிப்பட்ட நினைவலைகளின் மூலம் தான் பெரிய அளவிலான அசைவுகளை, நம் மூலமாக தேவனால் பூமியின் மேல் கொண்டுவர முடியும். நம் மனதை தேவனுடைய திட்டங்களுக்காக விட்டுக் கொடுப்போம்.

*"... நீங்கள் புத்தியிலே குழந்தைகளாயிராதேயுங்கள்; துர்க்குணத்திலே குழந்தைகளாயும், புத்தியிலோ தேறினவர்களாயுமிருங்கள் (grown-up) (1 கொரி. 14:20)."* புத்தியில் வளர்ச்சி வேண்டும், முன்னேற்றம் வேண்டும். அப்போது தான் நம் வாழ்க்கையிலும், சமுதாயத்திலும், உலகளவிலும் அசைவுகளைக் கொண்டு வர முடியும். எதைச் செய்வதாக இருந்தாலும் சரி; முதலில் அதைச் செய்வதற்கான மனம்

வேண்டும். இதைச் செய்வதற்கு எனக்கு மனசே வரலை, அங்கே போகவே மனமில்லை போன்ற வார்த்தைகளை சாதாரணமாகப் பேசுகிறோம். ஆனால் மனதில்லாவிட்டாலும் செய்கிறோம், விருப்பமில்லாத இடத்திற்கு வேறுவழியில்லாமல், கட்டாயத்தினால் போகிறோம். இதுவும் நம் வாழ்க்கையில் சாதாரணமாக நடக்கிறது. மனதின் நினைவுகளை மிகச் சாதாரணமாக எடை போட்டு விடுகிறோம். ஆனால் வாழ்க்கையையே புரட்டிப் போடக்கூடிய சூறாவளிகள் இங்கே தான் மையம் கொள்கின்றன என்ற இரகசியம் தேவ ஜனங்களுக்குத் தெரியாமல் போனது. தேவபிள்ளைகளின் அறியாமையினால் பூமி தினம் தினம் ஏதேனைத் தவற விடுகிறது ***(miss*** பண்ணுகிறது)!

## *சிந்தனையில் கிறிஸ்தவ அணுகுமுறை:*

இப்படிப்பட்ட பிரச்சனைகளைத் தவிர்ப்பதற்காகத்தான் பவுல் கிறிஸ்துவின் சிந்தையை முக்கியப்படுத்துகிறார். கிறிஸ்துவின் சிந்தையென்றால் அவருடைய சித்தத்தை (மனவிருப்பத்தை) அறிந்து, அதை நம்முடைய மனதின் விருப்பமாக மாற்ற வேண்டும் என்று அர்த்தம். இப்படிப்பட்ட கிறிஸ்தவ அணுகுமுறையில் நம்முடைய சிந்தனைகள் இருக்குமானால்; பூமி அனுதினமும் ஏதேனை தாவிப் பிடிக்கும் ***(catch*** பண்ணும்)!

குழந்தை பிறந்தால்; மலர்க்கொத்தைக் கொடுத்து சந்தோஷப்படுகிறோம்; காதலன் தன் காதலிக்காக மலர்க்கொத்துக்களோடு காத்திருக்கிறான் ***I love you*** சொல்ல! கல்யாணம் செய்து கொள்ளும் மணமக்களின் கழுத்துக்களில் மலர் மாலைகள்; "ஈ" என்று சிரிக்கிறார்கள்! கல்லறையின் மேல் குனிந்து மலர் வளையத்தை வைத்துவிட்டு; செத்துப் போன நபரை நினைத்து ஓ என்று அழுகிறார்கள்! ஆனால் எதற்குமே அர்த்தம் விளங்கவில்லை! வாழ்க்கையின் நிகழ்வுகளுக்கு காரண காரியம் புரியாமல் வாழும் மனிதர்களின் கைகளில் இந்த பூக்கள் படும் பாட்டைப் பாருங்கள்! மனித மனம் ஒரு குரங்கு; அதை தப்பி ஓடவிட்டால் ... ? வாழ்க்கையின் கதைக்கு ஒரு சோக முடிவைக் கொண்டு வந்து விடும். அதைப் பிடித்துக் கட்டி, நம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது நல்லது. தப்பியோடின எத்தனையோ கோடானுகோடி குரங்குகள் பூக்களை பிய்த்து எறிந்து விட்டன, கசக்கி போட்டன, சாறு பிழிந்தன! வாசமிழந்த ஏதேனின் பூக்கள் தங்கள் ஆரம்பக்கால செழிப்பை நினைத்து ஏங்கி நின்றன; அவற்றின் மலரும் நினைவுகளில் எந்தவொரு வாசமுமில்லை!

பிரச்சனைகளையே திரும்பத் திரும்ப பேசிக்கொண்டிருப்பதால் எந்தப்பிரயோஜனமுமில்லை. நம் மனதை வேத வசனங்களினடிப்படையில் மலர வைப்போம்; ஏதேனின் மலர்களின் வாசனையை மீண்டுமாக அங்கே கொண்டு வருவோம். ஏதேனின் செழிப்பினடிப்படையிலேயே நம் எண்ணங்கள் இருக்க வேண்டும். நீங்கள் மனம்பொருந்திச் செவிகொடுத்தால், தேசத்தின் நன்மையைப் புசிப்பீர்கள். ஏசா. 1:19 தேசத்தின் நன்மைகள் என்பது நமக்கு வாக்குப்பண்ணப்பட்ட காரியங்களைக் குறிக்கிறது. ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள் தேசங்களெங்கும் சிதறிக்கிடக்கிறது; தேவனற்ற உலக ஜனங்களின் ஆளுகைக்குள்ளாக அவைகள் இறைந்துக் கிடக்கின்றது. அவற்றையெல்லாம் சுதந்தரிக்க முதலில் மனசு வரவேண்டும். தேசத்தின் நன்மைகளை முதலில் நம் மனசுக்குள் கொண்டு வரவேண்டும். பிறகு படிப்படியாக அவைகள் நம் வாழ்க்கைக்குள்ளாக வர ஆரம்பிக்கும்.

நமக்கு எதற்காக பூமியின் செழிப்பு அது இது எல்லாம்? இரட்சிக்கப்பட்டு விட்டோம், அது போதும், ஆளை விடுங்கள், பேசாமல் பரலோகத்திற்குப் போய்விடுவோம் என்று சொல்லி; தேவனுடைய வசனங்களுக்கு எதிராக பேசுவீர்களானால்? மாட்டோம் என்று எதிர்த்து நிற்பீர்களாகில் பட்டயத்துக்கு இரையாவீர்கள்; ஏசா. 1:20. தேவனுடைய ஆசீர்வாதத்தில் வாழ்வது தான் நமக்கு பாதுகாப்பானது; பலவகையில் அனுகூலமானதும் கூட. பூமியின் சாபத்திற்குள் பாதுகாப்பு எதுவுமேயில்லை, நம்மைக் காயப்படுத்திக் குத்திக் கொல்லும் கத்திகள் மட்டும் தான் அங்கேயுண்டு.

## *நன்மை + பிரியம் + பரிபூரணமான தேவசித்தம்:*

*... தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத் தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். ரோமர். 12:2. (Do not conform yourselves to the standards of this world, but let God transform you inwardly by a* ***complete change of***

*your mind. Then you will be able to know the will of God what is **good** and is **pleasing** to him and is **perfect)*** தேவனுடைய சித்தம் என்றாலே அதில் நன்மை + பிரியம் + பரிபூரணம் என்ற மூன்றும் அடங்கியிருக்கும்.

## *1. நன்மையென்றால்?*

நன்மையென்றால்? தகுந்த, உகந்த அதாவது நமக்குப் பொருத்தமானதைக் குறிக்கும் ***(suitable, appropriate).*** அந்த நன்மையான காரியம் வந்ததும் நமக்குச் சந்தோஷமாக இருக்கும், மனதுக்கு திருப்தியாகவும் இருக்கும் ***(enjoyable, satisfying).*** புதிதானதாக, தற்காலத்திற்கேற்ற நவநாகரீகமானதாக இருக்கும் ***(newly, recently).*** இன்னும் நிறைய வரும்; சுருக்கமாகச் சொல்லப்போனால் தேவன் நமக்கு வேதத்தில் வாக்குப் பண்ணியிருக்கும் காரியங்களுடன் ஒத்து வருபவைகளாக இருக்கும். ( உ.ம்: ஞானம், சுகம், பரிசுத்தம், பொருளாதார ஆசீர்வாதங்கள், சமாதானம், சந்தோஷம், கார், வீடு, சொத்துக்கள், பணம், பொன் போன்றவைகளைச் சொல்லலாம்.) ... *"நன்மையானதைப் பின்பற்று, நன்மை செய்கிறவன் தேவனால் உண்டாயிருக்கிறான்; ... 3 யோவா.1:11"*

## *2. பிரியமென்றால்?*

அடுத்தபடியாக வருவது பிரியம்; பிரியமென்றால்? இங்கிதமான, இன்பமானதாக ***(agreeable),*** மனதுக்கேற்றதாக இருக்கும்; ***(consent)*** அதை உடனடியாகச் செய்வதற்கு மனம் அனுமதி கொடுத்து விடும்; தயங்கிக் கொண்டிருக்க மாட்டோம். *"... சமாதானத்தின் தேவன் இயேசுகிறிஸ்துவைக் கொண்டு தமக்கு முன்பாகப் பிரியமானதை உங்களில் நடப்பித்து, நீங்கள் தம்முடைய சித்தத்தின்படி செய்ய உங்களைச் சகலவித நற்கிரியையிலும் சீர்பொருந்தினவர்களாக்குவாராக; அவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென். (எபி. 13:20,21)"*

## *3. பரிபூரணமென்றால்?*

பரிபூரணம்? நிறைவான, பூர்த்தியான, முடிக்கப்பட்ட என்று அர்த்தமாகிறது ***(completely, entirely, come to an end).*** தேவனுடைய சித்தமானது பரிபூரணமாக முடிக்கப்பட்ட ஒன்றாக இருக்கும்; அரைகுறை வேலையாக இருக்காது. உதாரணமாக தேவன் முதல் 5 நாட்களில் வானத்தையும், பூமியையும் அதிலுள்ள எல்லாவற்றையும் உருவாக்கி முடித்தார். 6ஆம் நாளில் அவைகளையெல்லாம் ஆளுகை செய்வதற்காக மனிதனை படைத்தார்; 7ஆம் நாளில் ஓய்ந்திருந்தார். அதற்கு பிறகு இன்றைய நாள் வரையிலும் தேவன் எதையுமே உருவாக்கவில்லை என்பதே நூற்றுக்கு நூறு உண்மை. ஏற்கெனவே தேவன் முடித்து ***(complete*** செய்து) வைத்திருக்கும் நன்மைகளை நாம் நம் விசுவாச முயற்சிகளினால் அவ்வப்போது எடுத்துக் கொண்டிருக்கிறோம் அவ்வளவு தான்! இதற்கு ஆதாம் ஒரு சரியான உதாரணம்; அவன் தன் முயற்சியினால் அல்ல, தேவன் அருளிய நன்மையினால் வாழ்ந்தான்; இது தான் ஓய்வு! இந்த ஓய்வு தேவனுடைய பரிபூரணமான கிரியைகளினால் நமக்கு கிடைத்த ஒன்று.

தேவன் 6 நாட்களில் உருவாக்கிய எல்லாமே நன்மையாக இருந்தது, அவருக்குப் பிரியமானதாகவும் இருந்தது, முடிக்கப்பட்ட ஒன்றாகவும் இருந்தது ***(finishing).*** ஆதி. 1, 2, 3 அதிகாரங்களில் தேவனுடைய இந்த நன்மை & பிரியம் & பரிபூரணமான சித்தங்களைப் பார்க்க முடியும். ஏதேன் மனிதனிடமிருந்து பறிக்கப்பட்டபோது; அதிலுள்ள செழிப்பான காரியங்கள் ஆபிரகாமின் ஆசீர்வாதப் பொட்டலத்திற்குள் வைத்து பத்திரப்படுத்தப்பட்டது; அதனால் அதிலும் தேவனுடைய சித்தத்தின் மூன்று குணாதிசயங்களைப் பார்க்க முடியும். அதற்குள்ளாக இருந்த சுமார் 7000 வாக்குத்தத்தங்கள் இவற்றை நமக்கு வாரி வாரி வழங்குகின்றன; வாங்கிக் கொள்ளுவோம்! கிறிஸ்துவின் சிலுவையின் மூலமாக இவற்றை இலவசமாக பதிவிறக்கமும் செய்து கொள்ளலாம் ***(free download!)*** *"...தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது. ...அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள். (கொலோ. 2:9,10)"*

நம்முடைய மனக்கண்கள் பிரகாசமடையும் போது; நம் மனம் முழுவதுமாக மாறிவிடுகின்றது. வசனங்களுக்குள் மறைந்திருக்கிற கிருபை பிரமாணத்தை கிரகிக்கக்கூடிய ஆற்றல் மனதிற்கு வந்து

விடுகிறது. அதனால் அவருடைய நன்மை, பிரியம், பரிபூரண சித்தங்களைக் கண்டுபிடித்து; அவற்றை செயல்படுத்த முடிகிறது. தேவனற்ற உலகத்தாருக்கு இதுவெல்லாம் சாத்தியமில்லை. மறுரூபமடையாத அவர்களின் மனம் தேவனுக்கு பிரியமில்லாத, நன்மையில்லாத, பரிபூரணமில்லாத காரியங்களைக் கிரகிக்கிறது; அவற்றையே அவர்கள் நடைமுறைப்படுத்துகிறார்கள்.

## *நாம் கிறிஸ்தவ சிந்தனையாளர்கள்:*

சிந்தனையில் எதையெல்லாம் வைப்பது? *"... உண்மையுள்ளவைகளெவைகளோ* ***(reality, genuine)****, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ* ***(straightforward, sincere)****, நீதியுள்ளவைகளெவைகளோ* ***(appropriate, exactly)****, கற்புள்ளவைகளெவைகளோ****(clean, unmixed)****, அன்புள்ளவைகளெவைகளோ* ***(lovely, very pleasant)****, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ****(good, high standard)****, புண்ணியம் எதுவோ* ***(virtue)****, புகழ் எதுவோ* ***(admiration)*** *அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள். பிலி. 4:8."* என்று பரிசுத்தாவியானவர் நமக்கு யோசனை கொடுக்கிறார் ***(suggestion).*** இதில் வருகிற எட்டுக் காரியங்களினடிப்படையில் நம் சிந்தனையை அமைத்துக் கொள்ளும் போது அது கிறிஸ்தவ (கிறிஸ்துவின்) சிந்தனையாக உருவெடுக்கிறது. கர்த்தர் இயேசு இந்தப் பூமியில் வாழ்ந்த காலக்கட்டத்தில் இப்படிப்பட்ட சிந்தனைகளினடிப்படையில் தான் வாழ்ந்தார், பேசினார், செயல்பட்டார் என்பதை மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் சுவிசேஷங்களை வாசிக்கும்போது நமக்கு நன்றாகப் புரிந்து கொள்ள முடியும்.

கூட்டிக்கழித்துப் பார்த்தால் இயேசு நன்மையானவற்றையே சிந்தித்தார். நல்லவற்றையே சிந்தித்து வந்ததினால் தான் விடுதலை தரக்கூடிய, வாழ்வளிக்கக் கூடிய, ஆறுதலான வார்த்தைகளை இயேசுவால் பேச முடிந்தது. இயேசுவினுடைய பேச்சிலும் நடவடிக்கைகளிலும் குற்றம் கண்டுபிடிக்க முயற்சி செய்த சாத்தான் சிண்டைப் பிய்த்துக் கொண்டு நிற்பதை பல இடங்களில் பார்க்க முடிகிறது.

நம்முடைய வாயிலிருந்து புறப்படுகிற வார்த்தைகளின் கர்ப்பகிரகம் நம் மனது தான். அதிலிருந்து எழும்புகிற எண்ணங்கள், யோசனைகள் எல்லாம் வாய்வழியாக வெளியே வரும் போது; வார்த்தைகளாக உருமாறுகிறது. சிந்தனையானது ஒலிவடிவத்தைப் பெற்றுக் கொள்ளும்போது; வார்த்தையாக மாறுகிறது. இப்படி தினந்தோறும் எண்ணுக்கடங்காத சிந்தனைகளை நம் மனம் பிறப்பித்துக் கொண்டேயிருக்கிறது. சிந்தனையிலிருந்து பிறப்பெடுக்கிற வார்த்தைகள் வாயின் வழியாக வெளியேறும் வரை பிரச்சனையில்லை. வார்த்தையாக வெளியே வந்தவுடன் அது வேலை செய்யத் துவங்கி விடுகிறது. எதைப் பேசினோமோ அதைச் செய்ய ***(action)*** நம்மை இழுத்துக் கொண்டு போகிறது அல்லது பின்னாலிருந்து பிடித்து தள்ளிவிடுகிறது. அதனால் நம்முடைய சிந்தனையைக் குறித்து ஏனோதானோ என்று இருக்காமல் கவனம் செலுத்த வேண்டியது மிக மிக அவசியம். அங்கே குப்பையைச் சேரவிடாமல் ஒட்டடையடித்து, பெருக்கி, கழுவி சுத்தம் செய்து கொண்டேயிருக்க வேண்டும். வேதத்தைத் தியானிக்கும்போது; வசனங்கள் உள்ளே போய் இந்த சுத்தம் பண்ணும் வேலைகளைச் செய்கிறது. நாம் ஜெபிக்கும் போது இந்த விஷயத்தில் தேவன் நமக்கு உதவி செய்கிறார். *"தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும். சங். 139:23, 24."* மிகுந்த அர்த்த செறிவு நிறைந்த இந்த வசனத்தை ஆங்கிலத்திலும் வாசியுங்கள். ***Examine me, O God, and know my mind; test me, and discover my thoughts. And see if there be any wicked way in me, and lead me in the way everlasting.***

நம்முடைய தலை மேல் பறவை பறந்து போவதை நம்மால் தடுக்க முடியாது; ஆனால் அது நம் தலையின் மேல் கூடு கட்டாமல் தடுக்க முடியும் என்ற பழமொழியைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். மனிதனை மிஞ்சக்கூடிய காரியம் எதுவுமே உலகில் கிடையாது. அப்படி மிஞ்சிப்போக விடுகிறான் என்றால் அவனுக்கிருக்கிற அதிகாரத்தை அவன் அறிந்திருக்கவில்லை, அதை உபயோகிக்கவில்லை என்று தான் அர்த்தமாகிறது. நம்முடைய சிந்தனைகள், பேச்சுக்கள், நடவடிக்கைகள் எல்லாவற்றின் மேலும் நமக்கு அதிகாரம் இருக்கிறது. நம் மனதிலேயே அவைகளை ஒழுங்குப்படுத்துவோமென்றால் அது நன்மை + பிரியம் + பரிபூரணமான தேவ சித்தத்திற்குள் – தேவ திட்டத்திற்குள் நம்மை நடத்தும்.

அதனால் தான் சங்கீதக்காரன் தன்னுடைய மனதை தேவனுக்கு ஒப்புக்கொடுத்து ஜெபிக்கிறான். தன்னுடைய சிந்தனைகளைப் பார்த்து; அதில் பிரச்சனையிருக்குமானால் அவைகளை வெளியே தள்ளிவிட்டு, நல்ல சிந்தனைகளை அங்கே வைக்க தேவனிடம் உதவி கேட்பதை இந்த ஜெபத்தில் பார்க்கிறோம். ஏனென்றால் கெட்ட சிந்தனைகள் பாவ வழிகளில் இழுத்துக் கொண்டு போய்விடும் என்பது அவனுக்குத் தெரியும்; அதை அனுபவப் பூர்வமாக தன் வாழ்க்கையில் பார்த்திருந்தான். நம்முடைய மனதில் என்ன இருக்கிறது என்பதை பார்க்கக்கூடிய ***X -ray*** கண்கள் தேவனுக்கு உண்டு. தேவன் ஆவியாயிருக்கிறார்; அதனால் நம் மனதில் ஆவியுருவில் இருக்கும் சிந்தனைகளைக் கூட அவரால் பார்க்க முடியும். நாம் பேசப்போகும் வார்த்தைகள் சிந்தனையுருவாக நம் மனதில் இருக்கும் போதே அவர் கவனித்து விடுகிறார். அவருடைய கண்ணுக்குத் தெரியாத விதத்தில் நம்மால் எதையும் சிந்திக்க முடியாது. ***X-ray*** கதிர்கள் சரீரத்திற்குள் ஊடுருவி உள்ளே இருக்கும் உறுப்புகளைக் காட்டுகிறது. தேவனுடைய கண்களோ மனிதனுடைய மனதை ஊடுருவுகிறது.

*"... என் நினைகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர் (**understand**). என் நாவில் சொல் பிறவாததற்கு முன்னே, இதோ, கர்த்தாவே, அதையெல்லாம் நீர்அறிந்திருக்கிறீர். உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தை விட்டு எங்கே ஓடுவேன்? சங். 139:2,4,7" "நான் அவர்கள் கிரியைகளையும், அவர்கள் நினைவுகளையும் அறிந்திருக்கிறேன்; ... ஏசா. 66:18." "இயேசு அவர்கள் நினைகளை அறிந்து: நீங்கள் உங்கள் இருதயங்களில் (மனதில்) பொல்லாதவைகளைச் சிந்திக்கிறதென்ன?" மத். 9:4* என்றார்!

*"நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சாமாதானத்துக்கேதுவான நினைவுகளே. எரே.29:11"* அவரைப் போலவே நாமும் சிந்தித்து – பேசி – செயலில் இறங்க வேண்டுமென்று அவர் எதிர்பார்க்கிறார்; அது நியாயமான எதிர்பார்ப்பு. ஏனென்றால் அவரைப் போலிருக்கிற நாம், அவரைப் போலவே செயல்படும் விதத்தில் உருவாக்கப்பட்டுள்ள நாம் வேறு மாதிரியாக இருந்து, வேறு விதமாக செயல்பட்டால் அது அநியாயம்! மூளை என்றதுமே நமக்கு ஞாபகத்திற்கு வருவது இரத்த நாளங்கள் ஓடும் ஒரு சதை உறுப்புத்தான். ஆனால் அதற்குள்ளாக ஆவி, ஆத்துமா என்ற மகா பயங்கரமான தெய்வத்துவமுள்ள இயக்க ஆற்றல்கள் இருப்பது விஞ்(ஞானி)களுக்குக் கூடத் தெரியாது. *"ஞானிகளுடைய சிந்தனைகள் வீணாயிருக்கிறதென்று கர்த்தர் அறிந்திருக்கிறாரென்றும் ... 1 கொரி.3:20."*

ஆனால் நம்முடைய சிந்தனைகள் நிச்சயமாக வீணானதாக இருக்கப் போவதில்லை, அவைகள் வீணாகப் போகப்போவதுமில்லை. அதில் நாம் தெய்வத்துவ காரியங்களை வைத்திருக்கிறோம். கிறிஸ்தவ அணுகுமுறைச் சிந்தனைகளைப் பதித்திருக்கிறோம். அப்படியே கண்ட கண்ட அழுக்குகளும் குப்பைகளும் உள்ளே இருந்தாலும் இப்படிப்பட்ட போதனைகளைத் தொடர்ந்து வாசிக்கும் போது – தியானிக்கும் போது அவைகளெல்லாம் தானாகவே வெளியே போய்விடும். இந்த நல்ல காரியங்கள் உள்ளே பதிக்கப்பட்டு விடும். *நிறைவானது வரும் போது குறைவானது ஒழிந்துபோம். 1கொரி. 13:10* ***(when what is perfect comes, then what is partial will disappear.)***

நல்ல காரியங்களை நாம் வேதத்திலிருந்து தான் எடுக்க முடியும்; வேறு எதிலும் அவைகள் இல்லை. தேவனற்ற உலக மனிதர்களிடையே வேத பிரமாணங்கள் சிதறடிக்கப்பட்டுக் கிடந்தாலும்; அவற்றை எடுப்பதில் பிரச்சனைகள் இருக்கிறது. அவற்றோடு தேவனுக்கு சித்தமில்லாத காரியங்களும் ஒட்டிக்கொண்டு வரும் ஆபத்து இருக்கிறது. அதனால் வேதம் மாத்திரமே நமக்குப் போதுமானது; பாதுகாப்பானதும் கூட. நல்ல, தரமான, மனதை கவர்கின்ற, சிந்திக்க தூண்டுகிற, தர்க்கரீதியிலான உலக புத்தகங்களை வாசிக்கலாம்; ஆனால் அவைகள் நமக்கு வழிகாட்டியாக முடியாது. வேதம் மட்டுமே நம்முடைய வாழ்க்கையின் பயனாளர் கையேடு. ***(User's manual!***)

## *மனதில் எதையெல்லாம் வைக்கக்கூடாது?*

நம்முடைய மனதைக் குறித்து பல ஆழமான சத்தியங்கள் வேதத்தில் புதைந்து கிடக்கின்றன. அவற்றைக் கண்டுபிடித்து தோண்டியெடுக்கும் போது; நாம் வாழ்க்கையில் முன்னேற, வெற்றியடைய,

தேவனுடைய திட்டத்திற்கேதுவான கிரியைகளை நடப்பிக்க பல சாத்தியக்கூறுகளை உருவாக்கிக் கொள்கிறோம். **நம்முடைய மனதை குறித்து கரிசனையில்லாமல் அதை ஏனோதானோவென்று போட்டுவிடுவோமானால்; அது பாழடைந்த கட்டிடம் போலாகிவிடும். பிறகென்ன அங்கே ஆந்தைகளின் அலறலையும், சீறும் பாம்புகளையும், பாதாளமூலி, வெள்ளெருக்கு செடிகளையும், வௌவால்களையும், கும்மிருட்டையும், இரவு நேரத்தில் நடக்கும் சட்ட விரோத காரியங்களையும் தான் அங்கே பார்க்க முடியும்.**

நம்முடைய சிந்தனைகளுக்கு உலகளவில் பாதிப்புகளை ஏற்படுத்தும் வல்லமை இருக்கிறது. அதனால் மனதில் வைக்கும் காரியங்களைக் குறித்து நாம் அதிக கவனத்துடன் ***(careful attention)*** இருக்க வேண்டும். மனிதர்களின் நினைவுகள் பெருமளவில் சூழ்நிலைக் கைதிகளாகவே இருக்கின்றன. ஒரு நேர்மறை எண்ணத்தைத் தொடர்ந்து ஒரு எதிர்மறைச் சிந்தனை; அதைத் தொடர்ந்து மீண்டுமாக ஒரு ***positive thought***, தொடர்வதோ ***negative mind set !*** இப்படி அலைசடிப்படும் நினைவலைகள் எதையும் சாதிப்பதில்லை என்று வேதம் சொல்லுகிறது. *"இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக. ... சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். யாக். 1:8, 7, 6."*

ஒரு மனதாக இருக்க முடியாதவர்களின் வாழ்க்கையும் அவர்களின் நினைவலைகளைப் போலவே இரண்டும் கெட்டானாகவே இருக்கிறது. என்னென்னவோ நடக்கிறது, ஒன்று கிடக்க ஒன்று நடக்கிறது, எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்று மனசு கிடந்து அடிக்கிறது; பிறகு பயந்த காரியமே நடக்கிறது. எனக்கு மட்டும் ஏன் இப்படியெல்லாம் நடக்கிறது என்று புலம்பித் தீர்ப்பார்கள். மனதைச் சரியானபடி ஒழுங்கு படுத்தாமல் விட்டுவிட்டதால்; நம் மனதிலிருந்து பறந்து போன தேவையில்லாத நினைவுகள் கூட இன்று உருவம் பெற்று நம் கண் முன்னே நிற்கின்றன. நாள்தோறும் 60,000 நினைவுகள் பறவைகள் போல நம் மனதைத் தாண்டி கடந்து பறந்து போய்க்கொண்டேயிருக்கின்றனவாம். அவைகள் எல்லாவற்றையும் நாம் பிடித்து மனதில் வைத்து சிந்திக்கக் கூடாது. தேவனுடைய சித்தம் எதுவோ (நன்மை + பிரியம் + பரிபூரணம்), அவருடைய திட்டத்தை பூமியில் செய்யக்கூடியவைகள் எவைகளோ, அவைகளை மட்டுமே பிடித்து மனதில் வைக்க வேண்டும்.

நிச்சயமாக ஒரு காலக்கட்டத்தில் நாம் சிந்திப்பவையெல்லாம் நம் நடக்கையாக மாறப்போகிறது; பிறகு அதுவே நம் வாழ்க்கையின் கட்டாயமாகப் போகிறது என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட எச்சரிக்கையுணர்வு நம் மனதுக்கு கடிவாளம் போட்டு நடத்தும். நம்முடைய எந்த நடக்கையானாலும் நிச்சயமாக அதற்கு முன்னதாக அதைப் பற்றின நினைவுகள் கண்டிப்பாக இருந்தே ஆக வேண்டும். மிருகங்கள் தான் சிந்திக்காமல் செயல்படும்; நாய் கடிப்பதற்கு முன்னதாக யோசிப்பதில்லை!

சிந்தனையில் தானே எல்லா பிரச்சனைகளும், பாவங்களும் ஆரம்பிக்கின்றன? அதனால் சிந்திக்காமலேயே இருந்து விடலாம் என்று முயற்சிக்கக்கூடாது. சிந்தனை தான் மூளையை இயக்குகிறது. மூளை ஒழுங்கான செயல்பாட்டுடன் இருக்க சிந்தனையோட்டம் நிச்சயம் அவசியம்; அது தான் மூளைக்கு உயிர் கொடுக்கும் உணவாகும். நம்முடைய சிந்தனைகளுக்கு ஆதரவாக நிற்போம். *"... இருதயத்திலிருந்து (மனதிலிருந்து) பொல்லாத சிந்தனைகளும், ... புறப்பட்டுவரும். இவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும். மத். 15:19, 20"*

**"ஞானிகளுடைய சிந்தனைகள் வீணாயிருக்கிறதென்று கர்த்தர் அறிந்திருக்கிறாரென்றும் எழுதியிருக்கிறது. ... 1 கொரி. 3:20." ஆனால் அவருடைய மனவிருப்பத்தை இந்தப் பூமியின் மேல் நிறைவேற்றுவதற்காகத் தெரிந்து கொள்ளப்பட்ட அவருடைய பிள்ளைகளாகிய நம்முடைய சிந்தனைகள் பிரயோஜனமானவைகள் என்றும் கர்த்தர் அறிந்திருக்கிறார் என்று நான் உங்களுக்கு எழுதுகிறேன்!** நல்ல காரியங்களை அங்கே வைப்போம் (பிலி. 4:8) சிறப்பான காரியங்களைச் செய்வோம், தேவனுடைய திட்டத்தில் தொடர்ந்து முன்னேறுவோம்.

நம்முடைய மனதின் விருப்பத்தைப் பொறுத்துத்தான் செயல்பாடுகளும் இருக்கும். சோம்பேறித்தனமாக எப்போதும் தூங்கி வழிந்து கொண்டிருந்தால் மனதின் செயல்பாடுகள் குறைகிறது. தூக்கக்கலக்கமாக இருக்கும் மனதிலிருந்து எழும்பும் சிந்தனைகளால் சோம்பல் முறித்துக் கொள்ளவும், கொட்டாவி விடவும் தான் தெரியும். பிறகென்ன அங்கேயிருந்து தூங்குமூஞ்சி நினைவுகள் தான் எழும்பும். *சோம்பற்கையினால் வேலை செய்கிறவன் ஏழையாவான்; சுறுசுறுப்புள்ளவன் கையோ செல்வத்தை உண்டாக்கும். நீதி. 10:4.* நாம் எந்த அளவுக்குச் சிந்தித்து, யோசித்து, முடிவெடுத்து வேலை செய்கிறோமோ அந்த அளவுக்கு ஐசுவரியத்தை சம்பாதிப்பது நிச்சயம். வேதனையைக் கூட்டாத நல்ல பணத்தை நிறைய சம்பாதிக்கிற கலையை வேதம் நமக்கு பலவிதங்களில் கற்றுக் கொடுக்கிறது.

தூங்கும் நேரத்தில் நம் சிந்தனை செயலற்றதாக இருக்கும்; அதாவது யோசிப்பதில்லை. அதற்காக தூங்கவே கூடாது என்று சொல்ல வரவில்லை; 6 முதல் 8 மணி நேரம் வரையிலான தூக்கமே போதுமானது. அதற்கும் அதிகப்படியான தூக்கம் சோம்பேறித்தனத்திற்கு வித்திடுகிறது. சோம்பேறிகள் வேலையே செய்வதில்லை என்று சொல்லமுடியாது; வேலை செய்கிறார்கள் தான். ஆனால் சோம்பேறித்தனம் மனதையும், நினைவுகளையும், யோசனைகளையும் பாதிக்கிறது; இதனால் அவனுடைய செயல்களிலும் அந்தப் பாதிப்பு தொடர்கிறது. சிந்தனை இல்லாத இடத்தில் செயல்களும் இல்லை, சிந்தனை ஒரு காரியத்தை செய்யச் சொல்லாவிட்டால் கையும் காலும் எதையும் செய்வதில்லை. அதனால் உழைப்பு இல்லை, உழைப்பில்லாவிட்டால் சம்பளம் இல்லை, சம்பளம் இல்லாவிட்டால் பணம் இல்லை, பணம் இல்லாவிட்டால் சாப்பாடு இல்லை.

சோம்பேறியின் நினைவுகள் அவனை வேலை செய்ய விடுவதில்லை. இன்னும் கொஞ்சம் தாமதமாக எழுந்திரு, இன்றைக்கு வேலை செய்ய வேண்டாம் ஓய்வு எடு, களைப்பாக இருக்கிறது அதனால் தூங்கிவிடு, நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம், இதைச் செய்யாவிட்டால் ஒன்றும் குடி முழுகிப் போய்விடாது என்று பலவிதங்களில் அவனுடைய நினைவுகள் சோம்பேறித்தனத்தை ஊக்குவித்து தாலாட்டுப் பாடுகிறது. தரித்திரம் படிப்படியாக வாழ்க்கைக்குள் அடியெடுத்து வைக்கும் விதத்தை வேதம் அழகாக விவரிக்கிறது.

*"தூக்கத்தை விரும்பாதே, விரும்பினால் தரித்திரனாவாய்; கண்விழித்திரு அப்பொழுது ஆகாரத்தினால் திருப்தியாவாய். நீதி. 20:13" "சோம்பேறியே, நீ எவ்வளவு நேரம் படுத்திருப்பாய்? எப்பொழுது உன் தூக்கத்தைவிட்டு எழுந்திருப்பாய்? ...உன் தரித்திரம் வழிப்போக்கனைப் போலவும், உன் வறுமை ஆயுதமணிந்தவனைப்போலவும் வரும். நீதி. 6:9, 11" "சோம்பேறியின் வயலை ... கடந்துபோனேன். இதோ, அதெல்லாம் முள்ளுக்காடாயிருந்தது; நிலத்தின் முகத்தைக் காஞ்சொறி மூடினது, அதின் கற்சுவர் இடந்து கிடந்தது. அதைக் கண்டு **சிந்தனை பண்ணினேன்;** அதை நோக்கிப் புத்தியடைந்தேன். நீதி. 24: 30, 31, 32" (I looked at this, thought about it, and learned a lesson from it)* இப்படிப்பட்ட வசனங்களை நினைவில் நிறுத்துவோம்.

## மனதில் எதையெல்லாம் வைக்கவேண்டும்?

வாழ்க்கைக்குள் தரித்திரம் நுழைந்து, ஆக்கிரமித்து, உயிரை வாங்கிக்கொண்டிருக்கும் நேரத்திலும்; அந்தக் கொடிய தரித்திரப் பிசாசிடமிருந்து தப்பித்துக் கொள்ள வழி இருக்கிறது. சரியான காரியங்களை மனதில் வைத்து சிந்தனை செய்வதின் மூலம்; ஐசுவரியத்தை நம் வாழ்க்கைக்குள் கொண்டு வர முடியும். சிந்தனை செய் மனமே, செய்தால் தீவினை அகன்றிடுமே! என்ற உலகத்தானின் பாட்டும் வேதத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட இரகசியம் தான். அளவுக்கதிகமான தூங்கும் நேரத்திலும் குறட்டை நேரத்திலும் தான் தரித்திரம் உள்ளே நுழையக்கூடிய கதவுகளைத் திறந்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பது புரிய ஆரம்பிக்கும். *"... தாழ்வுகாலத்தில் சிந்தனை செய்; ... பிர. 7:14" "என் ஆத்துமாவே, நீ என் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? (Why am I so sad? Why am I so troubled?) தேவனை நோக்கிக் காத்திரு; ... சங். 42:5,11, 43:5."*

கவலைகளால் மனம் அலைசடி படும் போது; அங்கே தேவனுக்கு வேலையில்லாமல் போய்விடுகிறது. தேவன் மேல் நம்பிக்கை வைத்து காத்திருக்கும் போது; நம் மனம் நல்ல, சந்தோஷமான, தேவனுக்குப் பிரியமான நினைவுக் கதிர்வீச்சுக்களை வெளியே அனுப்புகிறது. தேவனுடைய

வல்லமையுள்ள வார்த்தைகள் வேலை செய்ய ஆரம்பிக்கின்றன. தேவனுடைய திட்டத்திற்கு உதவிகரமான காரியங்களை மனதில் நிலைநிறுத்த ***(set - launch)*** நாம் பழக வேண்டும். நாம் ஒவ்வொருவருமே கண்ணுக்குத் தெரியாத ஆவி மனிதர்கள். (கண்ணுக்குத் தெரிகின்ற சரீரத்தை ஒரு நிமிஷம் மறந்து விடுங்கள்). ஆவியான மனிதனுக்கு ஒரு ஆத்துமா(மனம்) கொடுக்கப்பட்டிருக்கிறது; யோசிப்பதற்காக! தேவன் மனிதனைச் சிந்தித்து செயல்படும் விதத்தில் தான் உருவாக்கியிருக்கிறார்; ஏனென்றால் தேவன் அப்படிப்பட்டவரே!

தேவனையறியாத உலக மனிதர்கள் யோசிப்பதற்குத் தேவையான விஷயங்களை கண்காண்கின்ற காரியங்களிலிருந்து கிரகித்துக் கொள்கிறார்கள். கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று வாழ்ந்து வருகிறார்கள். தேவனை அறிந்த நாம் இப்படிப்பட்ட மனம் படைத்தவர்களல்ல. அறியாமையின் காலகட்டங்களில் கண்டதையெல்லாம் மனதில் போட்டு வைத்து; அதிலிருந்து கண்டவைகளையும் சிந்தித்துக் கொண்டிருந்தோம். பிறகென்ன வாழ்க்கையும் கண்டபடி இருந்தது. தேவனை அறிந்திருக்கும் இக்காலங்களில் நம் சிந்தனைக்குத் தேவையான கருப்பொருட்களைத் தேவனிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டியது மிக முக்கியம். *"அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று **(repent)** எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். அப். 17:30"* தேவனைக்குறித்தும், அவருடைய வார்த்தைகளின் வல்லமைகளைக் குறித்தும் எதுவும் தெரியாதிருந்த அந்தக் காலங்களில் நம்முடைய மனமும் நினைவுகளும் எப்படியிருந்ததோ அப்படியே இப்போதும் இருக்கக் கூடாது. இன்னமும் அதே நினைவுகளின்படி வாழ்ந்து கொண்டிருப்போமானால்; வாழ்க்கையில் எந்த மாற்றமும் இருக்காது. மாற்றம் இல்லாத வாழ்க்கையில் முன்னேற்றம் இருக்காது, வெற்றியும் இருக்காது, வாழ்க்கையின் முடிவு வரையிலும் தேவன் வைத்திருக்கும் செழிப்பான நல்ல வாழ்க்கையை ருசி பார்க்காமலேயே செத்துப்போகக்கூடிய சூழ்நிலையும் வரலாம்.

அதனால் தான் தேவன் மனந்திரும்புங்கள் என்று எல்லா மனிதர்களுக்கும் கட்டளை கொடுக்கிறார். மனதைத் திருப்பி விட்டால்; வாழ்க்கையையும் நிச்சயம் திருப்பி விடலாம் என்பதால் தான் அப்படிச் சொல்கிறார். நம்முடைய பழைய சாபங்கள், பாவங்கள் நிறைந்த வாழ்க்கையை நினைத்து மனஸ்தாபப்பட்டு; இனிமேல் அப்படிப்பட்ட சாபமான காரியங்களுக்கு வாழ்க்கையில் இடம் கொடுக்கவே கூடாது என்று மனதில் முடிவெடுப்பதையே இது குறிக்கிறது. இந்த மனம் திரும்புதல் வேத வசனங்களைச் சார்ந்து, தேவனுடைய கிருபையை சார்ந்து நடக்கிறது. அப்போது மனம் புதிதாகிறது, மறுரூபமடைகிறது. ...உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். ரோமர். 12:2

*"வீண் சிந்தனைகளை நான் வெறுத்து, உமது வேதத்தில் பிரியப்படுகிறேன். சங். 119:113."* இந்த வசனத்தை உற்றுப் பார்க்கும் போது; வேதத்தில் மாத்திரம் தான் நம் வாழ்க்கைக்கு பிரயோஜனமான காரியங்கள் இருக்கின்றன என்பதை அறிந்து கொள்ளலாம். அதற்கு வெளியே உள்ள காரியங்கள் உள்ளே போகும் போது; அவைகள் வீணான சிந்தனைகளாக உருவெடுக்கிறது. அப்படிப்பட்ட வீண் சிந்தனைகளை வெறுத்து; பிரயோஜனமான சிந்தனைகளை விரும்ப வேண்டும்.

வீண் சிந்தனைகள் வாழ்க்கையை வீணாக்கி விடும்; பிரயோஜனமான சிந்தனைகள் வாழ்க்கையை ஆக்கப்பூர்வமானதாக்கும், தேவ திட்டத்தை நோக்கி விரைவாக முன்னேறவும் அது உதவியாக இருக்கும். வீணான சிந்தனைகள் மனதை நிறைப்பதற்கான காரணத்தை இந்த வசனத்தில் நேரிடையாகவே பார்க்க முடிகிறது. *"அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது. ரோமர். 1:21"*

## *சிந்தனை கெடுவது ஏன்?*

தேவன் என்கிறவர் எங்கேயோ எட்டாத உயரத்தில் இருக்கிற யாரோ ஒருவர் அல்ல, அவர் நம்முடைய அப்பா என்ற இரகசியத்தைப் புரிய வைக்க இவ்வளவு இமாலய முயற்சிகள் எடுத்து வருகிறோம். நாம் அவரில் இருந்து பிறந்து வந்தவர்கள், பிரிந்து வந்தவர்கள். ஆவியான தேவன் ஆவியான நம்மை தன்னுடைய சொந்தப்பிள்ளைகளாகப் பெற்றெடுத்திருக்கிறார். சரீரத்திற்குள்ளாக

வாழுகிற ஆவியான மனிதர்கள் நாம்; உண்மையில் கண்ணுக்குத் தெரியாதவர்கள்! நம்முடைய சரீரம் இந்த உள்ளான ஆவி மனிதனின் சிந்தனைகளைத் தன் சரீர உறுப்புக்களின் மூலமாக வெளிப்படுத்திக் காண்பிக்கிறது. சரீரம் நல்லதைச் செய்கிறதா, கெட்டதைச் செய்கிறதா என்பதெல்லாம் ஆவி மனிதனின் சிந்தனையைப் பொறுத்தது.

ஆனால் இந்த அறிவு எல்லோரிடத்திலும் இல்லை. கண்ணால் காண்கின்ற சரீரத்தை மனிதன் என்று நினைக்கும் பழக்க தோஷத்தால்; பெரும்பான்மையான கிறிஸ்தவர்களின் ஆவிக்குரிய வாழ்க்கை மிகவும் தரம் குறைந்ததாக இருக்கிறது. அவர்களுடைய வாழ்க்கை சரீரத்துடன் முடிந்து போகிறது. சரீரத்திற்குள் மறைந்து கிடக்கும் ஆவி மனிதனைப் பற்றியும், அவனுடைய மனதைப் பற்றியும் எதுவுமே தெரியாத மனிதர்களின் நிலை மிருகத்தின் நிலைக்கு தரம் தாழ்ந்து போய்விடுவதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

*"மனுபுத்திரர் தாங்கள் மிருகங்களைப் போல் இருக்கிறார்களென்பதை... பிர. 3:18." "மனுபுத்திரருக்குச் சம்பவிக்கிறது மிருகங்களுக்கும் சம்பவிக்கும்; அவர்களுக்கும் இவைகளுக்கும் ஏக சம்பவமுண்டு; இவைகள் சாகிறது போலவே அவர்களும் சாகிறார்கள்; ஜீவன்களுக்கெல்லாம் சுவாசம் ஒன்றே; மிருகத்தைப் பார்க்கிலும் மனுஷன் மேன்மையுள்ளவன் அல்ல; 3:19."* பரிணாமவாதிகளின் நம்பிக்கையை ***(evolution theory)*** இந்த வசனங்கள் எதிரொலிக்கின்றன.

மேலோட்டமாகப் பார்க்கும் போது மனிதனுக்கும் மிருகங்களுக்கும் உள்ள ஒற்றுமை; இரண்டும் ஒன்று தான் என்று நினைக்கத் தோன்றுகிறது. அதாவது மனிதனும் அறிவில் வளர்ச்சியடைந்த ஒரு மிருகம் தான் ***(mammal)*** என்று சிந்திக்க வைக்கிறது. மனிதனைப் பற்றின இப்படிப்பட்ட நினைவுகள், அவர்களுக்குள் இருக்கும் கடவுளைப் பற்றின நினைவுகளையும் தாக்கத்துக்குள்ளாக்குகிறது ***(attack).*** மனிதர்கள் தன்னைப் பற்றி என்ன நினைக்கிறார்களோ; அப்படியே தான் தேவனைப் பற்றியும் நினைக்கிறார்கள்.

மனிதர்களின் மனதில் தன்னைப் பற்றி பதிவு செய்யப்பட்டிருக்கும் கருத்துக் கணிப்பு தான்; தேவனைப் பற்றின கருத்துக் கணிப்பாகவும் இருக்கிறது. அதாவது இன்னமும் பரிணாமக் கொள்கைக்குள்ளாக இருந்து கொண்டே தேவனைப் பற்றிச் சிந்திக்கிறார்கள்.

அதனால் தான் மனிதர்கள் தேவனை மிகவும் மட்டமான ரீதியில் தங்கள் இருதயத்தில் (சிந்தனையில்) சித்தரித்து வைத்திருக்கின்றனர். அதனால் தேவனைப் பற்றிக் கவனம் கொள்வதில்லை, கவலைப்படுவதுமில்லை; கடவுள் இருக்கிறார் என்றால் இருந்துவிட்டுப் போகட்டும்; நாம் நம் வேலையைப் பார்ப்போம் என்கிற அறிவுப்பூர்வமான சிந்தனை தான் மனிதர்கள் மனதில் ஆழமாகப் பதிவாகியிருக்கிறது. சரியாக புரிந்து கொள்ள முடியாத, தெளிவில்லாத, குழப்பமான கடவுளை வாழ்க்கைக்குள் நுழைய விட்டுவிட்டு ஏன் வீணாக மெனக்கெட வேண்டும் என்று நினைக்கிறார்கள். அதனால் அவரை தங்கள் வாழ்க்கைக்கு வெளியேயே நிறுத்தி வைத்துவிடுவது மனிதர்களுக்கு நியாயமாகப்படுகிறது.

அன்பே உருவான தேவனை அன்பில்லாத கடின இருதயமுள்ளவராகவும், மகா பரிசுத்தமான தேவனை களங்கம், கறைகள் உள்ளவராகவும் நினைக்கின்றனர். *"தேவனைக்குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது; தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். எப்படியென்றால் காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை, தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே (காணப்படுகிறவைகளாலே) உலகமுண்டானது முதற்கொண்டு தெளிவாய்க் காணப்படும்; அதனால் அவர்கள் போக்குச் சொல்ல இடமில்லை. (ரோமர்.1:19, 20)"*

தேவன் இருக்கிறார் என்கிற உண்மை அவர்களையும் அறியாமல் எல்லா மனிதர்களுக்குமே தெரிந்திருக்கிறது; ஆனால் அவர் எப்படிப்பட்டவர் என்பது தான் சரியாகத் தெரியவில்லை. மனிதனைப் பற்றியும், கடவுளைப் பற்றியும் சரியான, மிகச் சரியான தகவல்களை சேகரித்துக் கொடுக்கும் வேலை நம்முடையது. அதனடிப்படையில் அவர்களை வேலை செய்ய வைக்க வேண்டிய பொறுப்பும் இருக்கிறது.

## *தேவனைப் பற்றின தவறான எண்ணங்களே பாவங்களுக்கான மூலகாரணி:*

இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன்; இவர்கள் என் துதியைச் சொல்லி வருவார்கள். ஏசா. 43:21. ***(This people have I formed for myself; they shall shew forth my praise).*** தன்னை மகிமைப்படுத்தவும், ஸ்தோத்திரிக்கவும் ஏற்ற விதத்தில் தான் தேவன் மனிதனை உருவாக்கியிருக்கிறார். மனிதனைத் தேவன் உருவாக்கினதற்கான முக்கியமான உள் நோக்கமே இது தான். தேவனை மகிமைப்படுத்துவது, துதிப்பது எல்லாம் மனதில் நிகழக்கூடிய காரியங்கள். மனதில் தோன்றாத எதுவும் வாயிலிருந்து வெளிவருவதில்லை; வார்த்தைகளின் முன்னோடி நினைவுகளே. இதனடிப்படையில்தான் நாம் தொடர்ந்து வேதத்தின் இரகசியங்களை ஆராய்ந்து வருகிறோம். தன்னைப் பற்றி மிக மோசமாக நினைக்கும் மனிதன் தேவனைப் பற்றியும் அப்படியே நினைக்கிறான். அவனுடைய மோசமான நினைவுகள் தேவனை மகிமைப்படுத்தவோ, ஸ்தோத்திரிக்கவோ விடுவதில்லை. தேவனைப் பற்றின சரியான சிந்தனைகள் தான் அவரை மகிமைப்படுத்தத் தூண்டும். தேவனைப் பற்றின நேர்மறைச் சிந்தனைகள் இருந்தால் தான் அவரை ஸ்தோத்திரிக்கவும் முடியும். இவற்றைச் செய்யும்போது தான் சிந்தனையில் வெளிச்சம் இருக்கும். இல்லாவிட்டால் இருதயம் இருளடைந்து போகும் என்று சொல்லத் தேவையில்லை. *"அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது. (ரோமர். 1:21)".*

அதனால் தேவனைப் பற்றிய சரியான காரியங்களை மனதில் வைப்பது முக்கியம்; அதற்கு சரியான காரியங்களை பிரசங்கிக்க வேண்டியது அவசியம். பிரசங்கம் கேட்டுக் கொண்டிருக்கும் போது; தேவனைப் பற்றின தெளிவில்லாத, குழப்பமான சிந்தனைகள் மனதிலே தோன்றுமானால் ... ? அந்த இடத்தை விட்டு எழுந்து போய்விடுவது நல்லது. சரியானவைகளைக் கேட்க முடியாமல் போனாலும் பரவாயில்லை, தவறானவைகளை மனதில் ஏற்றாமல் இருப்பது நமக்கு நல்லது.

தன்னை மிருகத்தின் சாயலாக பார்க்கிற மனிதன் தேவனையும் அப்படித்தானே பார்ப்பான்? மிருகத்தின் சாயலாக தேவனைப் பார்க்கிற மனிதனுக்கு; தன்னைப் பற்றின உணர்வும் அப்படித்தானே இருக்கும்? *"அதனால் அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காரராகி, அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள் மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள். (ரோமர். 1:22, 23)"* இன்றளவும் மனிதர்கள் இவைகளையெல்லாம் தேவனாக உருமாற்றி வணங்குவதற்கு காரணம்; அவர்களின் சிந்தனையில் ஏற்பட்ட விகாரங்கள் தான். வீணான சிந்தனைகள் அவர்களை இப்படிப்பட்ட படுமோசமான, கேவலமான நிலைமைக்குக் கொண்டு வந்துவிட்டது. ஆறறிவுள்ள மனிதனுக்கு ஐந்தறிவுள்ள எலியும், புலியும், யானையும், பூனையும் எப்படி தேவனாக முடியும்! வெட்கக்கேடான விஷயம் ***(shameful).*** உணர்வில்லாத மனித இருதயம் எப்படி யோசிக்கிறது பாருங்கள்! தேவசாயலாக இருக்கிற மனிதனுக்கு தேவசாயலாக உருவாக்கப்படாத ஜீவராசிகள் எப்படி கடவுளாக இருக்க முடியும்? ***(illogical - unacceptable - nonsense!)***

மிருகமாகத் தன்னைக் குறித்து யோசிக்கும் ஒரு மனிதன்; நிச்சயம் மிருகம் போலத்தான் வாழ முடியும். ஏனென்றால் மனிதனின் நினைவுகள் எப்படியோ அப்படியே தான் அவனும் இருக்கிறான் என்பது நாங்கள் அறிவித்துக் கொண்டு வருகிற தேவ இரகசியம். மனிதனின் இப்படிப்பட்ட மட்டரக சிந்தனையால் இயற்கைக்கு மாறான பாலியல் நடவடிக்கைகள், தாறுமாறுகள் மனித வாழ்க்கைக்குள் புகுந்தன (ரோமர். 1: 24, 26, 27) இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்திக் கொள்கிறார்கள்.

## *உச்சக்கட்ட பாவங்களுக்குள் நடத்தும் மனம்:*

கெட்ட நினைவுகள் கெட்ட நடவடிக்கைகளுக்கு வழிகாட்டியது. உலகம் முழுவதும் தலைவிரித்தாடும் பாவமே இது தான். எந்த பாவமும் முதலில் மனிதனின் மனதைத்தான் குறி

வைக்கிறது. மனிதனின் நினைவுகளைக் கெடுத்துவிட்டால் போதும்; அவன் வாழ்க்கையையே கெடுத்து அழித்து விடலாம் என்பது சாத்தானுக்குத் தெரியும். பாவத்துக்குள் தள்ளி, சரீரத்தையும் அதன் பெலனையும் கெடுத்து, அழித்து, கொன்று குவித்துக் கொண்டிருப்பதே இப்படிப்பட்ட இயற்கைக்கு முரணான பாலியல் பாவங்கள் தான் என்பது சொல்லாமலேயே எல்லோருக்கும் தெரியும். உலகமும் விஞ்ஞானமும் இந்தக் காரியங்களோடு ஒத்துப் போய்; அவற்றையும் இயற்கையோடு சேர்ந்த காரியங்களாகவே பார்க்கிறது. தவறு என்று தெரிந்தும், எங்கோ பிரச்சனை இருக்கிறது என்று உள்ளுணர்வு எச்சரித்தும்; தப்பிக்க வழி தெரியாததினால் இவற்றோடு கைகோர்த்து நடக்க ஆரம்பித்து விட்டார்கள் மனிதர்கள்! *ரோமர் 1–ம் அதிகாரத்தை* கவனமாக வாசித்துப் பார்த்தீர்களானால்; இப்படிப்பட்ட பாவங்களுக்கு மூலகாரணமே விக்கிரக ஆராதனை தான் என்பதை நிதானிக்கலாம்.

உலகத்தில் காணப்படுகிற சகல பாவங்களுக்கும் மூல காரணி இந்த பாவம் தான் என்று பார்க்கிறோம். தேவனை அறியும் அறிவைப் பற்றிக்கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால், தகாதவைகளைச் செய்யும்படி, தேவன் அவர்களை கேடான சிந்தனைக்கு ஒப்புக்கொடுத்தார். ரோமர். 1:28. கேடான சிந்தனை தகாதவைகளைச் செய்யத் தூண்டுகிறது. கேடான சிந்தனைகள் வரக் காரணம்? தேவனை அறிந்து கொள்ள மனமில்லாமல் போவது தான். தேவனைப் பற்றிய அறிவை மனதுக்கு உணவாகப் போடாவிட்டால்; மனம் தன்னுடைய பசியைத் தீர்க்க கண்டதையும் சாப்பிட ஆரம்பித்து விடும். உணவு கிடைக்காத தெருவோர நாய்கள் குப்பைகளையும், கழிவுகளையும் சாப்பிடுவதைப் பார்த்திருப்போம்; அவைகளின் பரிதாப முடிவும் நமக்குத் தெரியும். நம்முடைய மனதுக்கு நல்ல உணவைக் கொடுத்து பராமரித்தால்; அங்கேயிருந்து ஆரோக்கியமான நினைவுகள் எழும்பும், வாயிலிருந்து ஆரோக்கியடையச் செய்யும் வார்த்தைகளும் வரும். ஆரோக்கியமுள்ள நாவு ஜீவவிருட்சம்; ... நீதி. 15:4

இப்படிப்பட்ட மோசமான பாவச் சிந்தனைகளையும், பழக்க வழக்கங்களையும் கொண்டிருக்கும் மனிதர்களுக்குள் ஒளிந்திருக்கும் பாவங்களை இந்த அதிகாரம் பட்டியலிடுகிறது (ரோமர் 1:29–31) சுமார் 23 பகுதிகளாக இந்தப் பாவங்கள் மனிதர்களின் மனதிலிருந்து புறப்பட்டு; பூமி முழுவதிலுமாக தன் ஆளுகையை நடத்தி வருகிறது. ஒரே வார்த்தையில் சொல்லப்போனால் ***very simple!*** உண்மையான தேவனைப் பற்றின அறிவு இவையெல்லாவற்றையும் மாற்றி, நீக்கும் வல்லமையை உடையதாயிருக்கிறது. அதனால் தான் கோடி கோடியாய் பணத்தைக் கொட்டி, நேரத்தைச் செலவழித்து, கடின உழைப்பை ஊற்றி இயேசுவை அறிவிக்கிறார்கள். பூமியிலுள்ள சகல பாவங்களை நீக்கி, சகல வியாதிகளையும் போக்கி, எல்லோரையும் ஐசுவரியம் உள்ளவர்களாக்கி, வாழ வைக்க ஒருவர் வருகிறாரென்றால்; அவரை ஏன் தடை செய்ய வேண்டும்? விக்கிரகங்களுக்கு எதிராக சுவிசேஷகர்கள் வரவில்லை, தேவனைப் பற்றின அறியாமைக்கு எதிராகத்தான் வருகிறார்கள். தாங்கள் வணங்கும் தேவர்களே தங்களுடைய பாவங்களுக்கு மூலகாரணி என்ற அதிர்ச்சி தருகிற இரகசியத்தை அறியாமலிருக்கிறதினாலே தான் அவர்கள் சுவிசேஷத்துடன் வருகிறவர்களைப் பார்த்து முறைக்கிறார்கள்.

இயேசுவுக்கும், அவரைப் பற்றின சுவிசேஷத்திற்கும், அந்தச் சுவிசேஷத்தைச் சுமந்து வரும் சுவிசேஷகர்களுக்கும் எதிராக உலகத்தார் எழும்புவதற்கு காரணங்கள் அநேகம் உண்டு. அவைகள் என்னவென்று கண்டுபிடித்துச் சரிசெய்து கொண்டால்; சுவிசேஷ அறிவிப்பு வெற்றிகரமானதாக இருக்கும். சரியான வெளிப்பாட்டோடு, புதிய உடன்படிக்கையின் வெளிச்சத்தில் பிரசங்கிக்கப்படும் பரிபூரண சுவிசேஷம் தோல்வியடைந்ததாக சரித்திரமே இல்லை. எந்தவொரு வெளிப்பாடும் இல்லாமல், பழைய நியாயப்பிரமாணத்தின் சாப இருட்டில் பிரசங்கிக்கப்படுகிற சுவிசேஷம் வெற்றியடைந்ததாகவும் சரித்திரம் இல்லை. இப்படிப்பட்ட பிரசங்கங்கள் சபையை மீண்டுமாக இருண்ட காலத்துக்குள் இழுத்து விடும். இந்தப் பேராபத்தை தடுத்து நிறுத்தி, விளக்கேற்றி வெளிச்சம் கொடுக்கின்ற வேலை தான் புதிய உடன்படிக்கையின் வேலையாட்களாகிய நம்முடைய வேலை.

சிலுவையில் இயேசு கிறிஸ்து எவற்றையெல்லாம் முடித்து வைத்தாரோ; அவற்றுக்கெல்லாம் மீண்டுமாக உயிரோட்டம் கொடுக்க முயற்சிப்பதே சுவிசேஷகர்களின் தோல்விக்கு காரணம் ஆகும். சிலுவையில் இயேசு உருத்தெரியாமல் அழித்துப்போட்ட நியாயப்பிரமாணத்தை மீண்டுமாக

எழுதுகிறார்கள். இயேசுவின் மரணத்தின் மூலமாக மனுக்குலத்தின் மீதிருந்த தேவகோபம் நீங்கிவிட்டது; என்றாலும் இன்னமும் அவர் நம் மீது கோபமாக இருப்பதாகவே நினைக்கிறார்கள். அதனால் *"என் ஜெபவீட்டிலே அவர்களை மகிழப்பண்ணுவேன்; ... ஏசா. 56:7"* என்ற தீர்க்கதரிசன வசனத்திற்கு எதிராக ஜனங்களை கலங்கப் பண்ணுகிற பிரசங்கங்களைச் செய்கிறார்கள்! *"என் ஜனத்தை ஆற்றுங்கள், தேற்றுங்கள்; ஏசா. 40:1"* என்ற வார்த்தைகளுக்கு எதிரிடையாக இதயத்தைக் காயப்படுத்துகிற பிரசங்கங்கள்!! "கர்த்தருடைய ஆலயத்துக்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன். சங். 122:1" என்று சொல்லுகிற அனுபவத்தை நியாயப்பிரமாண பிரசங்கங்கள் கெடுத்து கவலைப்பட வைக்கிறது!!! இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு வராமல் இருந்திருந்தால் என்ன நடந்திருக்குமோ அதைத்தான் பிரசங்கிக்கிறார்கள். அவர் சிலுவையில் அறையப்படாமல் இருந்திருந்தால் தேவபிள்ளைகள் எப்படியிருந்திருப்பார்களோ; அப்படித்தான் இந்த பிரசங்கியார்களும் இருக்கிறார்கள். இயேசுவின் மூலமாக தேவன் மனிதனுக்கு மீட்பைக் கொடுத்திராவிட்டால் எப்படியிருந்திருப்பானோ; அப்படியே இருக்க வைத்துவிடுகிறார்கள். யோசிக்க வேண்டிய விஷயங்களில் இதுவும் ஒன்று.

## *பிரச்சனைகளே இல்லாத பூமிக்கு நாம் தான் பொறுப்பாளிகள்!:*

பூமியைக் காப்பாற்ற, வெப்பமடையாமல் தடுக்க, பனிமலைகள் உருகாமல் தடுக்க, கடல் மட்டம் உயராமல், கரையைக் கடக்காமல், உயிர்களை அழிக்காமல் இருக்க, காடுகளை காப்பாற்ற, கடலைக் காப்பாற்ற, மிருகங்களை காப்பாற்ற என்னென்னவோ முயற்சிகளை எடுக்கிறார்கள். (தேவனைப் பற்றி எதுவும் தெரியாத, வெளிப்பாடுகளில்லாத மனிதர்களின் மனதிலிருந்து வெளியேறும் இந்த ஏதேனின் ஒளிக்கீற்றுகள் என்னை ஆச்சரியப்பட வைக்கின்றன.) இதே முயற்சியைத்தான் நாமும் எடுக்கிறோம்; ஆனால் செயல்முறை தான் வேறு வேறு. அவர்கள் பூமியின் மீது நடக்கின்ற இந்தக் காரியங்களைப் பார்த்து; மூளையறிவை உபயோகித்து, சரீர முயற்சிகளை எடுக்கிறார்கள். அவைகள் மிகச் சிறியஅளவில் வேலை செய்தாலும் அது தான் மிகப்பெரிய அளவில் மனிதர்களின் கண்களுக்குத் தெரிகிறது. நாமோ... கண் காணாதிருக்கிற பரலோகத்தின் காரியங்களை நம்பி, நம் ஆவிக்குரிய கண்களால் அதைக் கண்டு விசுவாசித்து, அதற்கேற்ற சிந்தனைகளை நம் மனதில் பதிவாக்கி, பேசி, செயல்முறைப் படுத்துகிறோம். இந்தக் காரியங்கள் மிகப்பெரிய அளவில் வேலை செய்தாலும் மிகச்சிறிய அளவில் தான் மனிதர்களின் பார்வைக்கு வருகிறது!

புதிய உடன்படிக்கையின் ஊழியக்காரர்களாகிய நம் கையில் தான் இந்தப் பொறுப்புகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால் நம்முடைய தாக்குதல் ***(attack)*** இந்தப் பூமியின் மீது பெரிய அளவில் இருக்க வேண்டும்; அது பெரிய அளவில் இந்தப் பூமியை பாதிக்க ***(consequence)*** வேண்டும்; அதை உலகம் பார்க்கும் அளவில் இருக்க வேண்டும். இயேசுவைப் பற்றின சுவிசேஷத்தில் தான் இந்த பிரச்சனைகளுக்கெல்லாம் தீர்வு ***(solution)*** இருக்கிறது. சுவிசேஷம் என்றால் நற்செய்தி என்று அர்த்தம். துர்ச்செய்திகளால் சூழப்பட்ட உலகம் இது; பூமியின் நான்கு திசைகளிலிருந்தும் துர்ச்செய்திகளை அள்ளிக்கொண்டு வந்து ஒவ்வொருவருடைய வீடுகளுக்குள்ளும் தட்டும் குப்பை லாரிகள் தான் நியூஸ்! ***(News). News? N - North, E - East, W - West, S - South!***

விழுந்து விழுந்து நியூஸ் பார்த்து; அளவுக்கதிகமாக துர்ச்செய்திகளை நினைவில் தேக்கி வைக்கும் மனிதர்கள்; மீண்டும் மீண்டும் அப்படிப்பட்ட மோசமான நிகழ்வுகளையே எதிர்பார்க்கிறார்கள் என்று ஒரு ஆய்வறிக்கை கூறுகிறது! நியூஸ் பார்க்காவிட்டால் உலகத்தின் மீது என்ன நடக்கிறது என்பது எப்படித் தெரியும்? நாட்டு நடப்பு தெரிய வேண்டாமா? அரசியல் பற்றியே தெரியாமல் போய்விடுமே? என்றெல்லாம் கேள்விக்கணைகள்; வாஸ்தவம் தான். ஆனால், டிவி நியூசில் செய்திகளை பார் பார் என்று பார்த்து, ரேடியோ நியூசை கேள் கேள் என்று கேட்டு, நியூஸ் பேப்பரை வாசி வாசியென்று வாசித்து, தகவல்களை சேர் சேர் என்று சேர்த்து வைத்திருப்பவர்கள்; அதை வைத்து பூமியின் மீது எதைச் சாதித்தார்கள் என்பது தான் இப்போது கேள்வி! இவர்கள் இப்படி பார்த்து, கேட்டு, வாசித்து, சேர்த்து வைத்திருக்கும் தகவல்களை பேசிப் பேசி துர்ச்செய்தியை பரவச் செய்து கொண்டிருப்பார்கள். துர்ச்செய்திகள் பிரச்சனைகளை அதிகமாக்குமே தவிர குறையச் செய்யாது. பிரச்சனைகளைப் படிப்படியாகக் குறைத்து; பிரச்சனைகளே இல்லாத பூமியை உருவாக்குவது தான் நம்முடைய இறுதி

இலக்கு. இந்த இலக்கை அடைய துர்ச்செய்திகள் அல்ல, நற்செய்திகளே நமக்கு உதவிச் செய்யப் போகிறது. *"நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம். 1கொரி. 13:10."* நற்செய்திகளைத் தொடர்ச்சியாக நாம் பரப்பிக் கொண்டேயிருக்கும் போது; துர்ச்செய்திகளை அது நிச்சயம் ஒழித்துக் கட்டும்.

## *நற்செய்திகளை நம் மனதிலே பதிப்போம்:*

சில வசனங்களினடிப்படையில் இந்தப் பிரச்சனையை ஆராய்வோம். *"அங்கே ... இராட்சதரையும் கண்டோம்; நாங்கள் எங்கள் பார்வைக்கு வெட்டுக்கிளிகளைப் போல் இருந்தோம், அவர்கள் பார்வைக்கும் அப்படியே இருந்தோம் என்று சொல்லி ... தாங்கள் சுற்றிப் பார்த்து வந்த தேசத்தைக் குறித்து துர்ச்செய்தி (evil report) பரம்பச் செய்தார்கள். எண். 13:33."* கண்களினால் பார்க்க முடிகிற காரியங்களையே பற்றிப் பேசிக்கொண்டிருந்தால்; 99% அது கெட்ட செய்திகளாகத்தான் இருக்கும், ஏனென்றால் உலகம் அந்த இலட்சணத்தில் தான் இருக்கிறது. அப்படியானால் நல்ல செய்திகள் எங்கே இருக்கின்றன? அது கண்களினால் காண முடியாத உலகத்தில் தான் இருக்கிறது; அந்த நற்செய்தி நாங்கள் பிரசங்கிக்கிற இந்த விசுவாசத்தின் வார்த்தைகள் தான். இந்தச் செய்திகள் இந்த பூலோகத்திலிருந்து அல்ல, அந்த பரலோகத்திலிருந்து (கண்களால் பார்க்க முடியாத உலகம்) வருகிறது. *"அந்த தேசத்தை சோதித்துப் பார்க்கும்படி மோசேயால் அனுப்பப்பட்டுத் திரும்பி, அந்த தேசத்தைக் குறித்து துர்ச்செய்தி கொண்டு வந்து... எண். 14:36."* ஆனால் நாமோ அப்படியல்ல, தேவனால் அனுப்பப்பட்டு பூமியைக் குறித்த நற்செய்தியை ***(good news)*** பூமிக்கு அறிவிக்கிறவர்களாக இருக்கிறோம்!

*"... இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள்; ... 2 இரா. 7:9."* ஒவ்வொரு நாளின் ஒவ்வொரு கணப்பொழுதும் இவ்வுலகம் நற்செய்திக்காக ஏங்கிக் காத்துக் கிடக்கிறது. ஒவ்வொரு மனித மனங்களின் நாக்கும் நற்செய்தி என்கிற தண்ணீர் துளிகளுக்காக தாகிக்கிறது. *"நீ இந்த காலத்திலே மவுனமாயிருந்தால், ...சகாயமும், இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும், அப்பொழுது நீயும் ...அழிவீர்கள்; நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, ... எஸ்தர். 4:14."* நம்முடைய நற்செய்தி அறிவிப்பின் வேகம் போதாது. நாம் இப்படி நத்தை வேகத்தில் நகர்ந்து கொண்டிருப்பதால்; இரட்சிப்பு என்ற பெயரில் இயேசு இல்லாத பிரமாணங்களை – வெற்றியின் இரகசியங்களை உலகத்தாரே தங்களுக்காக உருவாக்கி அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். தேவனற்ற வெற்றுப் பிரமாணங்களைப் பின்பற்றி; நாங்கள் வெற்றியடைந்துவிட்டதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். தேவனில்லாமல் வெறும் பிரமாணங்களும் வேலை செய்யும்; அதனால் ஏமாந்து போகிறார்கள். தேவன் நமக்காக தம் ஆவியானவர் மூலமாக தொகுத்தளித்த வெற்றியின் பிரமாணங்கள் எப்படி வேதத்திலிருந்து பறிபோனது என்பதை கடந்து சென்ற விதைகள் – 15 ஆம் பகுதியில் நாம் கொஞ்சம் பார்த்தோம். (இனிமேலும் கொஞ்சம் கொஞ்சமாகப் பார்க்கப் போகிறோம்).

*"விக்கினத்தின் மேல் விக்கினம் வரும்; துர்ச்செய்தியின் மேல் துர்ச்செய்தி பிறக்கும்; எசே. 7:26".* இந்த வசனத்தின்படி தான் இப்போது நடந்து கொண்டிருக்கிறது. துர்ச்செய்தியென்றால் வதந்தி ***(rumour)*** என்ற அர்த்தத்திலும் எடுத்துக் கொள்ளலாம். நம்ப முடியாத, நம்புவதா வேண்டாமா என்று யோசிக்க வைக்கிற செய்திகளாக ***(doubtful truth)*** அவை இருக்கும். ***"Rumour is pipe, Blown by surmises, jealousies, conjectures" -*** என்றார் ஷேக்ஸ்பியர். அப்படி செய்திகளின் வழியாக வருகின்ற துர்ச்செய்திகள் உத்தேசமானதாக, பொறாமையினால் தோன்றுகிறவைகளாக, யூகத்தின் அடிப்படையிலானதாக இருக்கும். தேவனுடைய திட்டத்திற்கு வெளியே நிற்கிற உலக மனிதர்கள் தங்களுடைய கற்பனைக் குதிரைகளின் பிடரியைத் தட்டிவிடும் போது; அவைகள் கண்மண் தெரியாமல் பறக்க ஆரம்பிக்கின்றன! தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தேன் (அது தொல்லைக் காட்சியாக இருந்த போதும்!); சுமார் 50க்கும் மேலான ***News channels*** ஐ பார்க்க முடிந்தது. **துர்ச்செய்திகள் வராமல் இருக்க வேண்டுமானால்; நாம் நற்செய்தியின் மேல் நற்செய்திகளை அனுப்பிக் கொண்டே இருக்க வேண்டும்.**

## *நாம் கெட்டிக்காரர்கள் (Good men) !:*

அதற்காகத்தான் புதிய உடன்படிக்கையின் ஊழியக்காரர்களாக நம்மை எழுப்பியிருக்கிறார். செய்திகளில் வருகின்ற கெட்ட செய்திகளையெல்லாம் கேட்டு பரிதாபப்பட்டு உச் கொட்டி, ஐய்யோ பாவம் என்று சொல்லிக்கொண்டிருக்க நாம் அழைக்கப்படவில்லை. இனிமேல் இப்படிப்பட்ட துர்க்காரியங்கள் பூமியின் மீது நடக்காதபடி தடுத்து நிறுத்தவே அழைக்கப்பட்டிருக்கிறோம். நம் கையில் நற்செய்தித்தாள்கள் ***(good news papers!).*** *"... உள்ளே வா, நீ கெட்டிக்காரன், நீ நற்செய்தி கொண்டு வருகிறவன் என்றான். 1 இரா. 1:42* ***("You're a good man; you must be bringing good news.)'*** நம் தேவன் நல்லவர்; அதனால் அவருடைய பிள்ளைகளாகிய நாமும் நல்லவர்களாகத்தான் இருக்க முடியும். நம் தேவன் நல்லவர்; நற்செய்திகளின் மன்னர். அதனால் நாமும் அவரைப் போலவே நல்லதையே நினைத்து, பேசி, செயல்படுத்துவோம்.

*"நீ எதினிமித்தம் பெருமூச்சு விடுகிறாய் என்று அவர்கள் உன்னிடத்தில் கேட்டால், நீ அவர்களை நோக்கி: துர்ச்செய்தி வருகிறதினிமித்தமே... அதினால், இருதயங்களெல்லாம் உருகி, கைகளெல்லாம் தளர்ந்து, மனமெல்லாம் தியங்கி, முழங்கால்களெல்லாம் தண்ணீரைப்போல அலைவு பண்ணும். எசே. 21:7."* கெட்ட செய்திகளையே கேட்டுக் கொண்டிருக்கும் மனிதர்கள் படும் பாட்டை இந்த வசனம் விவரிக்கிறது. கெட்ட செய்தியை கேட்கும் போது மனம் பயத்தால் படபடக்கிறது; எதையும் உருப்படியாக செய்ய முடியாத பலவீனம் ***(feeble)*** அவர்களுக்கு உண்டாகிறது; தள்ளாடிப் போகிறார்கள், மயக்கமே வந்து விடுகிறது, மாரடைப்பு வந்து செத்தும் போகிறார்கள்!

ஆனால் நாம் கொண்டு வருகிற நற்செய்தி என்ன செய்கிறது என்று பாருங்கள்: *"... நற்செய்தி எலும்புகளை புஷ்டியாக்கும்." "தூரத்திலிருந்து வரும் நற்செய்தி விடாய்த்த ஆத்துமாவுக்கு கிடைத்த குளிர்ந்த தண்ணீருக்குச் சமானம். (நீதி. 15:30, 25:25)* ***(good news makes feel better, like a drink of cold water when dry and thirsty)"*** *"... எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். லூக். 2:10." "... அவர் பட்டணங்கள் தோறும் கிராமங்கள் தோறும் பிரயாணம் பண்ணி, தேவனுடைய ராஜ்யத்திற்குரிய நற்செய்தியைக் கூறிப் பிரசங்கித்து வந்தார். ... லூக். 8:1"* மயக்கம் போட்டு விழுந்து கிடப்பவனுடைய முகத்தில் குளிர்ந்த தண்ணீரை தெளித்தவுடன்; அவன் மெல்லக் கண்ணைத் திறந்து பார்ப்பான். உடனே அவனுக்குக் கொஞ்சம் தண்ணீரைக் குடிக்கக் கொடுப்பார்கள்; அவனும் மெல்ல எழுந்து உட்காருவான். நாம் கொண்டுபோகிற தேவனைப் பற்றின நற்செய்திகள் இந்த வேலையைத்தான் மனிதர்களின் மனதில் செய்கிறது.

அவர்களுடைய சிந்தனையில் நல்ல மாற்றத்தையும், புத்துணர்ச்சியையும், புதிய நம்பிக்கையையும் உண்டாக்குகிறது. கார்மேகங்கள் சூழ்ந்த இறந்த கால இருட்டை நினைத்து; நிகழ் காலத்தில் மயக்கம் போட்டு கிடக்கும் மனிதர்களுக்கு, எதிர் காலமென்கிற நீல வானத்தைக் காட்டுகிறது. அதில் புதிய வாழ்வுக்கான நட்சத்திரங்கள் மின்ன ஆரம்பிக்கின்றன, அதிகாலையின் விடிவெள்ளி தோன்றுகிறது, சூரியன் உதிக்கிறது. **நீ எதினிமித்தம் சந்தோஷத்துடன் பூரிக்கிறாய் என்று அவர்கள் உன்னிடத்தில் கேட்டால், நீ அவர்களை நோக்கி: நற்செய்தி வந்ததினிமித்தமே. அதினால் இருதயங்களெல்லாம் நல்ல விசேஷத்தினால் பொங்குகின்றன, கைகளெல்லாம் பலங்கொண்டு உயர்ந்து தேவனை ஆராதிக்கின்றன, மனமெல்லாம் மகிழ்ந்து ஆராதனை கீதங்கள் பாடுகின்றன... முழங்கால்களெல்லாம் நிமிர்ந்து துள்ளிக் குதிக்கின்றன! (எசே. 21:7 ன்** ***negative page)*** *"என் இருதயம் நல்ல விசேஷத்தினால் பொங்குகிறது; ... சங். 45:1."* பொங்கி வழிந்து ஆறு போல பாய்ந்தோட வேண்டும். துர்ச்செய்திகளினால் காய்ந்து, பாலைவனமாகி வெடித்துப் போன இருதயங்களுக்குள் பாய்ந்தோடி; அதைச் செழிப்பான வயல் வெளியாக்க வேண்டும். துர்ச்செய்தியா, நற்செய்தியா? அதுவா, இதுவா? அவர்களா, நாமா? ஒரு கை பார்த்து விடுவோம்!

## *பூமியின் தலையெழுத்தை மாற்றியெழுதுவோம்:*

ஆனால் தனியாக அல்ல, தேவன் இயேசுவோடு சேர்ந்து! தேவனை அறியாத, தேவனில்லாத, இயேசுவை ஏற்றுக் கொள்ளாத புறமதஸ்தர்கள் இந்தப் பூமியைச் சுதந்தரித்து தேவன் நமக்கு கொடுத்த

வேலையைச் செய்கிறார்கள். நற்செய்தி போதுமான அளவுக்கு அறிவிக்கப்படாததினால்; இயேசு இல்லாமலேயே விதிமுறைகளைப் பயன்படுத்தி பூமியைச் சொந்தமாக்கி, தங்களுக்குக் கீழாக்கி, ஆளுகிறார்கள். ஆனால் அதைப் பண்படுத்தி காத்துக் கொண்டார்களா என்றால்; அது தான் இல்லை. அதை நாம் தான் செய்ய வேண்டும். ஆனால் அவர்களுடைய ஆளுகைக்குக் கீழாக இருக்கிற காரியங்களை நாம் போய் பண்படுத்த முடியாது. இயேசுவைப் பற்றின நற்செய்திகளை அறிவிப்பதன் மூலமாகத்தான் இந்த வேலையைச் செய்ய முடியும். நற்செய்தி பரவும்போது மட்டுமே பூமி இயேசுவின் ஆளுகைக்குக் கீழாக வர ஆரம்பிக்கிறது; அதாவது அவரை உள்ளே வைத்திருக்கிற நமக்குக் கீழாக வர ஆரம்பிக்கிறது. அப்படி வந்தால் தான் நாம் முழு உரிமையோடு வேலை பார்க்க முடியும்.அவர்களின் எல்லைகளுக்குள்ளாகப் போய் நின்று நம் வேலையைப் பார்த்தால் எதிர்ப்பு வரத்தான் செய்யும். அவர்களைச் சொல்லி குற்றமில்லை, தவறு நம் மேல்தான். குறை சொல்லிச் சொல்லியே காலத்தைக் கழித்துக் கொண்டிருக்காமல்; நம்மிடத்திலிருக்கும் குறைகளைக் கண்டுபிடித்து அதை சரிசெய்ய வேண்டும். இயேசுவைப் பற்றின நற்காரியங்களை சுவிசேஷமாக அறிவிக்கும் போது; அது மனிதர்களின் மனதில் வேலை செய்கிறது, மாற்றங்களை உருவாக்குகிறது. கேட்கிற ஜனங்கள் மனம் திரும்புகிறார்கள், அதாவது மனம் இதுவரையில் போய்க் கொண்டிருந்த தவறான திசையிலிருந்து சரியான திசைக்குத் திரும்புகிறது. அவர்களின் மனம் மறுரூபமடைகிறது, அதாவது இதுவரையிலிருந்த மனதின் படங்கள் கழற்றப்பட்டு, சரியான படங்கள் அங்கே மாட்டப்படுகின்றன. இயேசு கிறிஸ்துவை – இராஜ்ஜியத்தின் சுவிசேஷத்தை – புதிய உடன்படிக்கையின் இரகசியங்களை அறிவிக்கும் போது இதயங்களை இயேசுவுக்காகக் கைப்பற்றுகிறோம். சுவிசேஷம் மனித மனங்களில் சரியான காரியங்களைத் துவக்கி வைக்கிறது; பிறகென்ன அவர்கள் தானாகவே இராஜ்ஜியத்தினுடைய வேலையை செய்ய ஆரம்பித்து விடுவார்கள். சத்தியத்தை ஜனங்கள் ஏற்றுக்கொள்ளும் போது; தங்களுடைய நிலமை அவர்களுக்குப் புரிகிறது. நற்செய்திப்பணி மனிதர்களின் ஏனோதானோ வாழ்க்கையில் ஒரு திருப்பு முனையைக் கொண்டுவருகிறது ***(turning point - completely new).***

தேவனுடைய திட்டம் நிறைவேறுவதற்குத் தேவையான நல்ல விதைகளை மனதில் விதைக்கும் போது; சிந்திக்க ஆரம்பிக்கிறார்கள், பேசத் துவங்குகிறார்கள், செயலிலும் காட்டத் தீவிரமடைகிறார்கள். மனிதன் எப்படியோ அப்படித்தான் இந்த உலகம் இருக்கும். மனிதனின் சிந்தனைக்கு ஏற்றபடி தான் பூமியால் இயங்க முடியும்; அவன் எதைப் பேசுகிறானோ அது தான் நடக்கும். தன்னுடைய நடவடிக்கைகளால் பூமியையே தலைகீழாக்கி எந்தவொரு குறைவுமில்லாத ஆரம்ப நிலைமைக்கு மீண்டுமாக கொண்டு வர அவனால் முடியும். இந்த நம்பமுடியாத, மகா பயங்கரமான காரியத்தை நடப்பிக்க பரலோகமே நமக்கு பின்புலமாக, அதாவது நமக்குத் துணையாக நிற்கிறது. பிதாவாகிய சர்வ வல்லமையுள்ள தேவன், இயேசுகிறிஸ்து, பரிசுத்தாவியானவர், தேவதூதர்கள், பரலோகத்தின் மகத்துவமான பல காரியங்கள், தேவனைப் பற்றின அறிவு, பரலோக இரகசியங்கள், வெளிப்பாட்டு அறிவு, தரிசனங்கள், வசனங்கள், வாக்குத்தத்தங்கள், ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள், நம்மைக் குறித்த சரியான வெளிப்பாடு – இப்படிப் பல ஆவி ரீதியிலான காரியங்களில் நமக்கு உதவி செய்கின்றனர்... செய்கின்றன. நாம் உலகத்தை இயக்குவோம்; உலகம் நம்மை இயக்க இடம் கொடாதிருப்போம்.

## *சந்தர்ப்பக் கதவுகள்:*

சந்தர்ப்பக் கதவுகள் ஏராளம் திறந்து கிடக்கின்றன; ஆனால் தேவனுடைய பிள்ளைகளின் கால்கள் ஏனோ தயங்கி நிற்கின்றன. **சினிமாவா? வேண்டாம் அது ஆபாசம், அசுத்தம், வன்முறைகளின் பிறப்பிடம் என்று ஒதுங்கி விடுகிறார்கள். சினிமா பார்க்கக்கூடாது என்ற கட்டளையை சபையின் மத ரீதியிலான சட்டதிட்டமாக்கி விட்டார்கள். *[நல்லது தான், ஆனால் பூமியின் மீது செயல்படுகின்ற மிக முக்கியமான செய்தி கடத்திகளில் (media) இதுவும் முக்கியமானதொன்று என்பதை உணருவதில்லை.]* அரசியலா, அது சாக்கடை என்று முகத்தைச் சுளிக்கிறார்கள். *[ஆனால் அரசின் மூலமாக வருகிற நன்மை தீமைகள் அவர்களின் வாழ்க்கையையே ஊடுருவித்தான் போய்க்கொண்டிருக்கிறது என்பதை மனதார அறியாமல் இருக்கிறார்கள்.]***

அன்று முதல் இன்று வரையிலும் மனுவர்க்கத்தின் மனதில் பெருமளவில் பாதிப்பை ஏற்படுத்தி

வருபவர்கள் சிந்தனையாளர்கள் தான். நம்முடைய சிந்தனையைத் தூண்டும் காரியங்கள் எதில் இருந்தாலும் அதைக் கவனித்துப் பார்க்க வேண்டியது அவசியம். நாம் சாபத்தால் பாதிப்படைந்த தூசி நிறைந்த பூமியில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால் வேடிக்கை பார்க்க அல்ல, அந்த சாபத் தூசியை தட்டிவிடவே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். சகல ஜனங்களைக் குறித்த பொறுப்பு நமக்கு இருக்கிறது, பூமியின் மீதான சகல காரியங்களின் மீதும் பொறுப்பு இருக்கிறது. தேவன் அவருடைய விஷயத்தில் உண்மையாய் இருப்போம் என்று தெரிந்து தான் நம்மை அழைத்திருக்கிறார். ஏனென்றால் நாம் கிறிஸ்துவின் கிருபையின் பிரமாணத்திற்குட்பட்டவர்கள்; பாவம் நம்மை மேற்கொள்ளாமல் பாதுகாக்கும் ஆற்றல் அந்தப் பிரமாணத்திற்கு உண்டு. அதனால் நாம் பாவ உலகத்தில் இருந்தாலும், பாவிகளின் நடுவில் வசித்தாலும், அவர்கள் மூலம் வெளிப்படும் காரியங்களை ஆராய்ந்தாலும் அவற்றில் சிக்கிக் கொள்ள மாட்டோம். *"நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது. ரோமர். 6:14"* ***(sin shall not have dominion over you: for you are not under the law, but under grace)***

பாவத்தை விட்டு விலகி வாழவேண்டியது அவசியம்; ஆனால் பரிசுத்தத்தைக் காத்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக பாவிகளை விட்டே விலகி வாழ நினைப்பது எப்படியிருக்கிறது தெரியுமா? வியாதி வந்துவிடக்கூடாது என்பதற்காக நோயாளிகளை விட்டே விலகி வாழ நினைக்கும் டாக்டரைப் போலிருக்கிறது! பாவம் நிறைந்த உலகத்திற்குள்ளே தான் நமக்கு வேலையிருக்கிறது; ஆனால் பாவம் நம்மைக் கட்டுப்படுத்த முடியாது, ***control (influence)*** பண்ண முடியாது. சபிக்கப்பட்ட பூமியில் நின்று வேலை பார்க்கிறோம்; ஆனால் சாபம் நம்மை ஆக்கிரமிக்க முடியாது; பறந்து விடலாம்! ***(Take-off)***

*"ஆவிக்குரியவன் எல்லாவற்றையும்* ***(all things)*** *ஆராய்ந்து நிதானிக்கிறான்; ... 1 கொரி. 2:15."* ஆராய்ச்சி என்று வரும் போது நல்லதோ, கெட்டதோ எல்லாவற்றையும் நம் கண் முன்னதாக கொண்டு வந்து தான் ஆக வேண்டியதாயிருக்கிறது. அப்படி கொண்டு வந்தால் தான் ஆராய்ந்து பார்க்க முடியும். மருத்துவ உலகம் மோசமான வியாதிக்கிருமிகள் செயல்படும் விதத்தைப் பார்த்து ஆராய்ச்சி செய்யாமல் இருந்திருந்தால்; வியாதிகளுக்கு மருந்துகளே கண்டுபிடிக்க முடியாமல் போயிருக்கும். எந்த ஆராய்ச்சியாளனும் நோய்க்கிருமிகள் தன்னைத் தொற்றிக் கொண்டு, தாக்கி, அழிக்கும் அளவுக்கு அஜாக்கிரதையாக ***(casual)*** இருப்பதில்லை. *"கர்த்தருக்கு காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள். ஏசா. 40:31."* **பாவ சூழ்நிலைகள் சாதகமாக இருந்தாலும் பாவம் செய்ய மாட்டார்கள், சந்தர்ப்பவாதிகளாக இருக்க மாட்டார்கள். மாம்ச பலவீனம் பிரதர், ஆம்பளன்னா அப்படித்தான் இருப்பான் என்ற பழைய பல்லவியையே பாட மாட்டார்கள்.**

## *பாவம் செய்யாமலிருக்க வேதம் காட்டும் வழிகள்:*

*"அவர் மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை (1 யோவான் 3:1,2) வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறது போல தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான்."* ***"அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ்செய்கிறதில்லை; பாவஞ்செய்கிற எவனும் அவரைக் காணவுமில்லை, அவரை அறியவுமில்லை. (1 யோவான். 3: 3,6)."*** *"தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான்."* ***"இதினாலே தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும், பிசாசின் பிள்ளைகள் இன்னாரென்றும் வெளிப்படும்; ... (1 யோவான் 3:9, 10)"*** *"தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று அறிந்திருக்கிறோம்; தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான், பொல்லாங்கன் அவனைத் தொடான். (1 யோவான். 5:18)"* ***"நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது. (ரோமர். 6:14)"***

இயேசுவை ஏற்றுக் கொண்ட பிறகு பாவம் செய்யாமல் நம்மைக் காத்துக் கொள்ள எத்தனை

அனுகூலமான வசனங்கள் ***(options)*** வேதத்தில் இருக்கிறது பாருங்கள். இத்தனை வருஷங்களாக இந்த வசனங்கள் நம்முடைய வேதத்தில் தான் இருக்கிறது; என்றாலும் நாம் அவற்றை எடுக்க வில்லை. வாசித்தோம், ஆனால் அதன் அர்த்தம் புரியவில்லை, திரும்பத் திரும்ப வாசித்தோம் தான்; என்றாலும் நம்முடைய உள்ளான ஆவி மனிதனின் மனக்கண்கள் திறக்கப்படாமல் இருந்தபடியால், சுயாதீனப் பிரமாணத்தை உற்றுப் பார்க்க முடியாமல் போய்விட்டது. இயேசு கிறிஸ்து தன் சிலுவைப் பாடுகளின் மூலமாக ஏற்படுத்தி வைத்த புதிய பிரமாணத்தின் இரகசியங்களை அறிந்து கொள்ளாமலேயே காலங்களைக் கடத்தி விட்டோம். பாவம் செய்யாமல் நம்மைப் பாதுகாத்துக் கொள்ள இயேசு சிலுவையில் ஏற்படுத்தின சாத்தியக்கூறுகளைக் குறித்த வெளிப்பாடு இல்லாமல் போனதால்; கொஞ்சமும் சொரணையில்லாமல், வெட்கமில்லாமல் பாவம் செய்து கொண்டேயிருந்தோம்.

நாம் பாவப் பிரமாணத்திற்குக் கீழே வாழ்ந்து கொண்டிருந்த அந்நாட்களில் பாவம் நம் எஜமானாக இருந்தது; எஜமான் சொன்னபடிதான் வேலைக்காரன் கேட்டாக வேண்டும், வேறு வழியில்லை. ஆனால் இன்று நாம் நீதியின் பிரமாணத்திற்கு கீழ் வந்துவிட்டோம்; அதாவது பாவம் செய்யாமல் வாழக்கூடிய ஆற்றலை நமக்குத் தருகிற ஒரு பரிசுத்த பிரமாணத்தின் கீழ் வந்துவிட்டோம். இப்போது பாவம் நம் எஜமான் அல்ல, அந்த எஜமான் சொல்கிறபடியெல்லாம் கேட்டு நடக்க வேண்டிய அவசியமில்லை. இப்போது நம்முடைய எஜமான் யாரோ அவருடைய சொற்படி கேட்டு நடந்தால் போதும்! புரிகிறதா இப்போது?

இப்போது நம்மை ஆளுகை செய்து கொண்டிருக்கும் புதிய பிரமாணம் நம்மைப் பாவமில்லாமல் வாழச் சொல்லி கட்டளை கொடுக்கிறது. அதனால் நாம் நீதியைச் செய்ய ஆரம்பிக்கிறோம். அப்படியானால் பாவச் சோதனைகள் வரவே வராதா? என்றால்... நிச்சயமாக வரும்; ஆனால் பாவம் செய்ய மனசு வருவதில்லை. அப்படியானால் பாவம் செய்வதற்கான வாய்ப்புகளே இல்லையா? என்றால்... நிச்சயமாக உண்டு; ஆனால் செய்யாமல், “முடியாது” என்று சொல்லி நகர்ந்து போய்விடும் அதிகாரம் இப்போது நமக்கு உண்டு. அப்பொழுது அவள் அவனுடைய வஸ்திரத்தைப் பற்றிப்பிடித்து, என்னோடே சயனி என்றாள். அவனோ (யோசேப்போ) தன் வஸ்திரத்தை அவள் கையிலே விட்டு வெளியே ஓடிப் போனான். ஆதி. 39: 12ல் யோசேப்பு நடந்து கொண்டதைப் போல ஏனென்றால் **இப்போது பாவம் நம் எஜமான் அல்ல, நீதி தான் நம் எஜமான்; பிரமாணம் மாறிவிட்டது, அதனால் எஜமானும் மாறிவிட்டார்! நம்முடைய எஜமான் யாரோ அவர் சொன்னதைக் கேட்டு நடந்தால் போதும்.**

பாவம் நம் எஜமானாயிருந்த போது அது சொன்னபடி கேட்டோம். பாவப்பிரமாணம் பலவீனமாக இருந்ததினால்; நல்லவர்களாக வாழ வேண்டும் என்ற ஆசையிருந்த போதிலும் வாழ முடியாமல் போனது. ஏனென்றால் அதற்கான அதிகாரம், சக்தி எதுவுமே நமக்குள் அப்போது இல்லை. ஆனால் இப்போதோ பிரமாணம் மாறிய பிறகு; இயேசுவினால் அந்த அதிகாரமும், வல்லமையும் நமக்குள் வந்திருக்கிறது. அதனால் நல்லவர்களாக, அதாவது தேவனுக்குப் பிரியமானவர்களாக, பரிசுத்தவான்களாக நம்மால் வாழ முடிகிறது. பழைய பாவ எஜமான் வந்து நம்மை வம்புக்கு இழுத்தாலும்; அவனைத் தைரியமாக எதிர்த்து நிற்க முடிகிறது, அவனை வெட்டிச்சாய்த்து ஜெயிக்கவும் முடிகிறது. இந்த சத்தியங்களை நாம் தொடர்ச்சியாக ஆராய்ந்து, சரியாக விளங்கிக் கொள்ளும் போது தொடர்ச்சியாக இயேசுவைப் போலவே வாழ்வதற்கான வாய்ப்புகளும் உண்டாகிறது.

ஒரு தெய்வீக சத்தியத்தை எந்த அளவுக்குப் புரிந்து கொள்கிறோமோ அந்த அளவுக்குத்தான் நம் செயல்பாடுகளும் இருக்கும். இன்னமும் அவ்வப்போது பாவம் செய்து கொண்டே இருக்கிறோமென்றால்; இந்த இரகசியத்தைப் புரிந்து கொள்வதில் எங்கேயோ கோட்டை விட்டுவிடுகிறோம் என்று தான் அர்த்தம். ஒரு ட்யூஷன் வாத்தியாரை ***(tutor)*** வைத்தாவது இந்த சப்ஜெக்டை புரிந்து கொள்ள முயற்சிகளை எடுங்கள். இந்த சப்ஜெக்டை நான் புரிந்துக் கொள்ள; இதைப் பற்றின வேத விளக்க உரைகளை சுமார் 50 பகுதிகளாக பார்த்து, வாசித்து, கற்றுக் கொள்ள வேண்டியதாயிருந்தது.

ஆட்டின் குட்டி பன்றியாக இருக்க நிச்சயமாக வாய்ப்பேயில்லை ***(keeps himself pure, just as Christ is pure).*** ஒரு வேளை ஆடு சாக்கடைக்குள் விழுந்து விட்டாலும்; முதலில் வெளியே

வரவேண்டும் என்பதைத் தவிர வேறெந்த நினைப்பும் அதற்கு இருக்காது ***(does not continue to sin for God's very nature is in him)*** நம்முடைய பாவமில்லாத பரிசுத்த ஜீவியம் தான் நம்மை உலகத்தாரிடமிருந்து வித்தியாசப்படுத்திக் காட்டுகிறது; ***(This is the clear difference between God's children and the Devil's children.)*** வெளியே போடுகிற சட்டையும் சொட்டையும் தான் அதற்கு அடையாளமாக இருக்குமேயானால்; கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே! பரிபூரண சுவிசேஷத்தின் இரகசியத்தைப் பூமியெங்கும் கொண்டு போக புதிய உடன்படிக்கையின் ஊழியக்காரர்களாகிய நாங்கள் இந்த அளவுக்குப் பாடுபடவேண்டிய அவசியம் என்ன? ஆளுக்கொரு வெள்ளை உடையை தைத்துக் கொடுத்து விட்டால் வேலை எளிதாக முடிந்து விடுமே?

## *நான் எழுதுவதென்னவென்றால் ... :*

உபதேசங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; எதுவானாலும் எடுத்துக் கொண்டு வந்து புதிய உடன்படிக்கையின் வெளிச்சத்தில் வைத்து உற்றுப் பாருங்கள். எதைக் கொண்டு வந்தாலும் உடனே எடுத்து வாயில் போட்டு லபக்கென்று விழுங்கும் பழக்கத்தை முதலில் விட்டுவிட வேண்டும். நல்லது உள்ளே போகாவிட்டாலும் கெட்டதாவது உள்ளே போகாமல் இருக்கும்.

சொல்லுவதற்கெல்லாம் ஆமென் போடக்கூடாது. ஆமென் என்றால் நிச்சயமாக என்று அர்த்தம் ***(so be it, certainly)*** என்று அர்த்தம். பிரசங்கியார் சொல்லுவதை அப்படியே ஏற்றுக் கொள்வதாக ஆகிறது. ஒருவேளை தவறான காரியங்களைச் சரியென்று நினைத்து நாம் எடுத்துக் கொள்ளும்போது அவைகளே நம் வாழ்க்கையாகி விடும் ஆபத்தும் இருக்கிறது. அதனால் இந்த அபாயகரமான ஆமென்களைக் குறித்து கவனம் தேவை. *"நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ... 1 யோ. 2:1."* நம்மைப் பாவம் செய்யாதபடிக்கு பாதுகாக்கும் ஆற்றல் இந்தப் புதிய உடன்படிக்கையின் பிரசங்கங்களுக்கு இருக்கிறபடியினால் தான் இவற்றையே தொடர்ந்து போதிக்கிறோம். மட்டுமல்ல, மனுக்குலம் பாவத்துக்குள் பிரவேசித்த போது துவங்கிய சாபச்சீர்கேடுகளாகிய சகல விதமான வியாதிகள், தரித்திரக்கோலங்களிலிருந்தும் விடுதலையாக்கும் சக்தியும் இப்படிப்பட்ட உபதேசங்களுக்கு உண்டு.

*"... நான் புதிய கற்பனையையும் உங்களுக்கு எழுதுகிறேன், இது அவருக்குள்ளும் உங்களுக்குள்ளும் மெய்யாயிருக்கிறது; ஏனென்றால், இருள் நீங்கிப் போகிறது, மெய்யான ஒளி இப்பொழுது பிரகாசிக்கிறது." "... அவருடைய (இயேசுவின்) நாமத்தினிமித்தம் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறதினால் உங்களுக்கு எழுதுகிறேன்." "... ஆதிமுதலிருக்கிறவரை நீங்கள் அறிந்திருக்கிறதினால் உங்களுக்கு எழுதுகிறேன். வாலிபரே, பொல்லாங்கனை நீங்கள் ஜெயித்ததினால் உங்களுக்கு எழுதுகிறேன். பிள்ளைகளே, நீங்கள் பிதாவை அறிந்திருக்கிறதினால் உங்களுக்கு எழுதுகிறேன். (1 யோ. 2: 7, 8, 12, 13)"* புதிய பிரமாணம் நமக்கு என்னவெல்லாம் தந்திருக்கிறது, நம்மை எப்படியெல்லாம் மாற்றியமைத்திருக்கிறது என்பதை இந்த வசனங்களில் பார்க்கலாம்.

## *No. 1 பிரமாணம்:*

முன்பு பழைய நியாயப்பிரமாணத்தின்படி இயங்கி, தோல்வியைத் தழுவிக்கொண்டிருந்தோம். பழையப் பிரமாணத்திற்கு நியாயப்பிரமாணம், கிரியைப் பிரமாணம், மோசேயின் பிரமாணம், சாட்சிப் பிரமாணம், நியாயவிதிப் பிரமாணம், பாவப்பிரமாணம் என்று பல பெயர்கள் உண்டு. ***(Lord's Law, Law of works, Law of Moses, testimony, statue of judgment, the law of sin)*** இப்போது நாம் தேவனிடமிருந்து வெற்றியைக் கைகப்படுத்தக்கூடிய புதிய பிரமாணத்தைப் பெற்றிருக்கிறோம். **இந்தப் பிரமாணம் நம்மைப் பாவத்திலிருந்து விடுதலையாக்கியிருக்கிறது, சாத்தானை ஜெயிக்க வைத்திருக்கிறது, பிதாவையும் குமாரனையும் அறிய வைத்திருக்கிறது. இப்படிப்பட்ட காரியங்கள் நம் உள்ளே நடந்திருக்கிறபடியினால் தான்; இந்த உபதேசங்களை எடுத்துக் கொண்டு ஜீரணிக்க முடிகிறது. ஜீரணிக்கப்பட்ட உணவின் சத்துக்கள் நம் சரீரத்திற்குப் பெலத்தைக் கொடுத்து நம்மை செயலாற்ற வைக்கிறது. அதுபோலவே உள்ளான ஆவி மனிதன் தான் விழுங்கி ஜீரணித்த இப்படிப்பட்ட சத்தியங்களிலிருந்து தான் தன்னுடைய வெற்றிக்குரிய செயல்பாடுகளுக்குத் தேவையான பெலத்தைப் பெற்றுக்கொள்கிறான்.**

புதிய பிரமாணத்திற்கு கிருபை பிரமாணம், சிலுவையின் பிரமாணம், கிறிஸ்துவின் பிரமாணம், விடுதலைப் பிரமாணம், விசுவாசப்பிரமாணம், ஜீவனுள்ள ஆவியின் பிரமாணம், சுயாதீனப் பிரமாணம், பூரணப் பிரமாணம், ராஜரீகப் பிரமாணம், மனதின் பிரமாணம் என்ற பல பெயர்கள் உண்டு. ***(Grace, the law of Christ, the law of the spirit, the law of faith, the law of mind, law of freedom, perfect law of liberty, Royal law)*** இயேசுவின் சிலுவை மூலமாக பிரகடனப்படுத்தப்பட்ட இந்தப் புதிய பிரமாணம் தேவனுடைய கிருபையைச் சார்ந்து இயங்குகிறது; நம்முடைய கிரியைகளினால் இதை இயங்க வைக்க முடியாது. விசுவாசம் இந்த பிரமாணத்தின் உயிர்மூச்சு; செத்த பிணங்களினால் இந்தப் பிரமாணத்தை இயக்க முடியாது. இந்த பிரமாணத்திற்குள் வந்த பிறகு நியாயப்பிரமாணத்தால் நம்மைக் கட்டுப்படுத்த ***(dominate)*** முடியாது; நாம் சுதந்திரமாக யாருக்கும் பயப்படாமல் இயங்க முடியும், நியாயப்பிரமாண சட்டதிட்டங்களுக்கு நாம் பயப்பட வேண்டியதில்லை. இதைவிடச் சிறப்பான பிரமாணத்தை யாராலும் உருவாக்க முடியாது, இது தான் ***No.1! (in the first place)***

தேவனால் இயற்றப்பட்ட இப்படிப்பட்ட ஓர் உயர்தரமான பிரமாணத்தின் இரகசியங்களைத் தொடர்ச்சியாக அலசி ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். உலகத்தோற்ற முதல் காலங்காலமாக மறைக்கப்பட்ட, மறக்கடிக்கப்பட்ட இந்தத் தெய்வீக இரகசியம் சுவிசேஷ வரலாற்றில் ஒரு புதிய கோணம் ஆகும். **இதுவரை ஆரம்பித்த எத்தனையோ எழுப்புதல் மின்மினிப்பூச்சிகளாக, மின்னல் வெட்டுகளாக, தீப்பொறிகளாக பறந்து போய்விட்டன. ஆனால் இந்தக் கடைசி காலத்தில் புதிய உடன்படிக்கை ஊழியக்காரர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற இந்த வெளிப்பாடு ஒரு அணைக்க முடியாத காட்டுத்தீ என்பதை மறந்துவிடக்கூடாது.** பூமியின் சாபம், மனிதர்களின் அறியாமை இருள், நியாயப்பிரமாண சட்டதிட்டங்கள், இவற்றின் நடுவில் இந்த காட்டுத்தீ கொளுத்தப்பட்டிருக்கிறது. இதற்கான அக்கினியை போடுவதற்காகத்தான் இயேசு வந்தார். *"பூமியின் மேல் அக்கினியைப் போடவந்தேன், அது இப்பொழுதே பற்றி எரிய வேண்டுமென்று விரும்புகிறேன். லூக். 12:49."* அப்போதிலிருந்தே தேவனுடைய விருப்பம் நிறைவேற ஆரம்பித்தது; ஒரு பூரணமான முடிவை நெருங்கிக் கொண்டிருக்கிறது, நம்முடைய வெற்றி ஆரம்பமாகி விட்டது.

இரகசியம் என்றாலே யாருக்கும் தெரியாமல் பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்று என்று தான் நினைப்போம். ஆனால் நாங்கள் கொண்டு வருகிற இந்த சுவிசேஷத்தின் இரகசியம் வெட்டவெளிச்சமாக்கப்பட வேண்டிய ஒன்று! இரகசியம் என்றாலே என்னவோ ஏதோ என்று நினைத்து பதற வேண்டியதில்லை. இதுவரையில் தெரியாமல் இருந்தது; இப்போது அது என்னவென்று தெரிந்துவிட்டது, அல்லது தெரியப்போகிறது, அவ்வளவு தான். உலகத்தாரால் மறைத்து வைக்கப்படுகிற இரகசியங்கள் வெளிப்படும்போது அது பேரதிர்ச்சியாக, தலைமேல் இடி இறங்கியது போலிருக்கும். ஆனால் நாங்கள் அறிவிக்கிற பரிபூரண சுவிசேஷத்தின் இரகசியம் வெளிப்படும்போது; அது பேரின்ப அதிர்ச்சியாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை தானே?

## *ஆதியிலே ... ஏதேனிலே ... :*

ஆதியில் ஏதேனில் மனிதனுக்குச் சாத்தானால், கீழ்படியாமையினால் பல பிரச்சனைகள் ஏற்பட்டன. அதை ஒவ்வொன்றாகக் கண்டுபிடித்து அதைச் சரி செய்யும் பொறுப்பு புதிய உடன்படிக்கையின் ஊழியர்களின் கைகளில் கொடுக்கப்பட்டுள்ளது. அதற்காகத்தான் இந்த ஊழியம், வெளிப்பாடு, தரிசனம், பிரகாசமுள்ள மனக்கண்கள், உணர்வையும் தெளிவையும் அளிக்கும் ஆவி... ***etc.***, எல்லாம். அப்படி ஒவ்வொன்றாக கண்டுபிடித்துப் பிரச்சனைகளை சரி செய்யும் போது; இழந்து போன ஆதி மகிமை பூமியின் மீது மீண்டுமாக படிய ஆரம்பிக்கிறது. இறந்த காலத்தை நினைத்து அழுது கொண்டிருப்பதால் தேவசித்தம் நடக்கப்போவதில்லை.

வருங்காலத்தை நினைத்து பயந்து நடுங்கிக்கொண்டிருப்பதாலும் அவர் திட்டம் நிறைவேறப்போவதில்லை. நிகழ்காலமே நம்முடைய வாய்ப்பு; நாம் வீணடிக்கும் ஒவ்வொரு நொடியும், நிமிடமும் கையை விட்டு நழுவி இறந்த காலத்திற்குள் பாய்ந்து கொண்டிருக்கிறது. காலத்தைப் பிடித்து தடுத்து நிறுத்த முடியாது; ஆனால் அதோடு ஒத்திசைவாக ஓடி தேவனுடைய வேலையை சிறப்பாக முடிக்க முடியும். அதற்கான எல்லா உபகரணங்களும் ஆவி ரீதியில் நமக்குள் இருக்கிறது.

அவற்றை ஏற்ற விதத்தில் இயக்க வேத வசனங்கள் நமக்கு உதவி செய்கின்றன. நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிற புதிய பிரமாணத்தின் வெளிச்சத்தை தேவனுடைய வார்த்தைகளின் மீது பாய்ச்சி... உற்றுப் பார்த்து ஆராய்ந்து தேவையானதை எடுக்க வேண்டும். நம்முடைய உள்ளான ஆவி மனிதனில் ஒளியேற்றப்பட்டிருக்கும் பிரகாசமுள்ள மனக்கண்கள் என்ற அணுதரிசினி ***(microscope)*** இந்த வேலையைச் செய்ய நமக்கு உதவுகிறது.

ஏதேனில் ஏற்பட்ட பிரச்சனைகளில் ஒன்று தான் பயம்; ஆதாம் பயந்தான், அங்கே தான் பூமிக்குச் சனி பிடித்தது. அன்று முதல் இன்று வரை இந்த பயம் மனிதனின் மனதை ஆக்கிரமிப்பு செய்வதை நிறுத்தவில்லை. பூமியின் மீது தேவன் நிர்மாணித்திருந்த வெற்றிப் பிரமாணங்களை இயங்க விடாமல் அந்த பயம் கையைப் பிடித்து நிறுத்துகிறது. பயம் நமக்குள் இருக்கிற விசுவாசத்தை இடப்பெயர்ச்சி ***(substitute)*** செய்துவிட்டுத்தான் வருகிறது. **பூமியில் இருந்து கொண்டே கண்ணுக்குத் தெரியாத ஆவியுலகில் (பரலோகத்தில்) மனிதன் இயங்குவதற்கு தேவனால் மனிதனுக்குள் வைக்கப்படும் உபகரணங்களில் மிக முக்கியமானது விசுவாசம் தான். பணம் இல்லாவிட்டால் எப்படி இந்த உலகத்தில் வாழ முடியாதோ; அப்படியே விசுவாசம் இல்லாவிட்டால் ஆவிக்குரிய உலகத்திலும் வாழ முடியாது.** ஆவிக்குரிய உலகத்தில் நாம் வாழ முடியாவிட்டால்; இந்தப் பூமியிலும் வாழ முடியாது. ஏனென்றால் ஆவியுலகத்திலிருந்து தான் கண் காணும் இந்த உலகம் வந்தது; அதனால் அங்கே அசைவு ***(vibration)*** இல்லாமல் இங்கே எதுவும் நடக்காது.

பணம் உலக வாழ்க்கையின் வாழ்வாதாரமாக இருப்பதைப் போல; விசுவாசம் ஆவிக்குரிய வாழ்க்கையின் வாழ்வாதாரமாக இருக்கிறது. கண்காணாத உலகத்துடன் தொடர்பு கொள்ளவேண்டுமானால் அதற்கான ஒரேயொரு வழி; அங்கேயுள்ள காரியங்களெல்லாம் நம் கண் முன்பாக இருப்பதாகவே நம்ப வேண்டும். அந்த நம்பிக்கை தான் விசுவாசம். ஆவியான தேவனுடன் தொடர்பு கொண்டு; பரலோகத்தின் சகல நன்மைகளையும் பெற்றுக் கொள்ள வேண்டுமானால்; விசுவாசம் ஒன்று தான் நம் முன்னிருக்கும் ஒரே வழி. இந்த விசுவாசமானது மனதில் துவங்கி, சிந்தனையாக எழும்பி, விசுவாச அறிக்கையாக வெளியேறி, விசுவாசத்திற்கேற்ற கிரியைகளின் வழியாக முன்னேறுகிறது. வேதத்தை முழுவதுமாக ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் இந்தப் பரலோக ஆக்க சக்தியான விசுவாசம் ஒரு பிரமாண்டமான விஷயம் ***(theme)***. கதைக்கு கரு எவ்வளவு முக்கியமோ; அதுபோல மனிதர்களுக்கு விசுவாசம் முக்கியம்.

மனிதனுடைய வாழ்க்கையின் மூலாதாரமான இந்த விசுவாசம் என்ற சக்தியின் எதிர்மறை பக்கம் தான் பயம் என்பது. இந்தப் பயமும் விசுவாசத்தைப் போலவே வேலை செய்யும் சக்தி படைத்தது. விசுவாசம் நன்மையானதை எதிர்பார்க்கும்; பயம் தீமையை எதிர்பார்க்கும். விசுவாசம் நன்மையை, செழிப்பை, ஜீவனைக் கொண்டு வரும்; பயம் தீமைகளை, அழிவை, மரணத்தைக் கொண்டு வரும். விசுவாசத்தினால் தேவனோடு மிக நெருக்கமாக, தைரியத்தோடு ஏதேனில் உலாவி வந்த மனிதன்; பயத்தினால் அவரைவிட்டு விலகி ஒளிந்து கொள்வதைப் பார்க்கிறோம். தேவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியாமல் போனதால் பயம் வந்தது. அப்படியானால் மனதுக்குள் ஒளிந்து கொண்டிருக்கும் இந்தப் பயத்தை விரட்ட என்ன செய்ய வேண்டும்? மிகவும் எளிதான பதில்: மீண்டுமாக தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிய வேண்டும். அப்படி செய்யும் போது பயம் வெளியே போய்விடும், விசுவாசம் உள்ளே நுழையும். மீண்டுமாக தைரியமாக தேவனோடு கைகோர்த்துக் கொண்டு ஏதேனுக்குள் நுழைய முடியும். **முதல் மனிதன் ஆதாம் எதையெல்லாம் தப்புத்தப்பாக செய்தானோ; அதையெல்லாம் நாம் செய்யாமல் இருக்க வேண்டும். எதையெல்லாம் சரியாக செய்யாமல் விட்டானோ அதையெல்லாம் நாம் செய்ய வேண்டும்.** பயப்படாதே என்று தேவன் சொல்லும் இடங்களிலெல்லாம் நின்று உற்றுக் கவனித்தால்; அவர் விசுவாசமாயிரு என்று மறைமுகமாகச் சொல்லியிருப்பதை அறிய முடியும்.

*"... நீ **பயப்படாதே; (fear not)** நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பெலனுமாயிருக்கிறேன் என்றார். ஆதி. 15:1."*

*"... **பயப்படாதே**, நான் உன்னோடேகூட இருந்து, ... உன்னை ஆசீர்வதித்து, உன் சந்ததியைப்*

*பெருகப்பண்ணுவேன் என்றார். ஆதி. 26:24."*

*"... கர்த்தர்: உனக்குச் சமாதானம்; **பயப்படாதே**, நீ சாவதில்லை என்று சொன்னார். நியா. 6:23"*

*"உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உன் வலதுகையைப் பிடித்து: **பயப்படாதே**, நான் உனக்குத் துணை நிற்கிறேன் என்று சொல்லுகிறேன். ஏசா. 41:13"*

*"நான் உம்மை நோக்கிக் கூப்பிட்ட நாளிலே நீர் அணுகி: **பயப்படாதே** என்றீர். புல. 3:57"*

*"தேசமே, **பயப்படாதே**, மகிழ்ந்து களிகூரு; கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வா(தா)ர். யோவேல். 2:21."*

*... **பயப்படாதே**, விசுவாசமுள்ளவனாயிரு ... மாற். 5:36*

என்ன பிரச்சனை வந்தாலும் சரி; தைரியமாயிரு; விசுவாசத்தைத் தடைசெய்ய பயத்துக்கு இடங்கொடாதே என்று தான் எல்லா இடங்களிலும் தேவன் சொல்லுகிறார். விசுவாசமென்ற பரலோக சக்தி பூமியை செழிப்பாக்குவதற்காக பாய்ந்து கொண்டிருக்கிறது. பயம் என்ற நரக சக்தி அதைக் கெடுத்துக் கொண்டிருக்கிறது. அதனால் பயத்தை ஒழித்து; தைரியத்தை நிலை நாட்டி விசுவாச சாதனைகள் படைப்போம்; ஜெயிக்கப் போவது நிச்சயமாக நாம் தான். நாம் ஜெயித்ததினால் பிறந்தோம்; சாத்தான் தோற்றுப் போனதால் பிறந்தான். பயம் என்ற வார்த்தையை நம் அகராதியிலிருந்து எடுத்துப் போடுவோம்; அதைக் கொண்டு போய் சாத்தானின் அகராதியில் எழுதுவோம். சாத்தானுடைய **Target** (இலக்கு) நம் மேல்; நம்முடைய **Target?** அவனுடைய **Target**-ன் மேல்! சாத்தான் அவனுடைய இலக்குகளை அடைய முடியாமல் தடைசெய்யப்படும் போது; பூமியின் மீது பாழ்க்கடிப்புகள் **(destructions)** நிறுத்தப்படுகிறது. கேடுகள், அழிவுகள், நாசங்கள் நிறுத்தப்படும் போது; செழிப்பின் இலைகள் தானாகவே துளிர்விட ஆரம்பிக்கும்; சந்தோஷம் மொட்டு விடும். பயப்படாமல் தைரியமாயிருந்து, பூமி தேவனுடைய மகிமையால் நிரம்ப வழிவகுப்போம்.

## *பூட்டப்பட்ட மகிமையின் சாவி:*

பூமியை ஏதேனாக்கும் நம் முயற்சி; தேவனுடைய கிருபையினடிப்படையில் இருக்க வேண்டும். நியாயப்பிரமாண கிரியைகளினால் முயற்சி செய்கிற கூட்டத்தார் வெற்றயடையவில்லை; அவர்களின் முயற்சிகள் கைகூடப் போவதுமில்லை. அவர்கள் செத்து வேண்டுமானால் பரலோகம் போக முடியும்; ஆனால் பூமியைப் பரலோகமாக்க முடியாது. கிரியையின் மூலமாக மகிமைக்குள் பிரவேசிக்க முயற்சித்த ஆதாம் ஏதேனை நாசம் பண்ணின காட்சியைத்தான் பார்க்கிறோமே! இன்றைக்கும் பெருமளவில் இதே காட்சிகளைத்தான் பார்க்க முடிகிறது. நியாயப்பிரமாண சட்டதிட்டங்களினால் ஏதேனின் கதவைப் பூட்டிப் போடுகிறார்கள்; கிருபையினடிப்படையில் இயங்குகிற சிலுவைப் பிரமாணத்தால் அதை நாம் திறக்கிறோம். அவர்கள் பூட்ட பூட்ட நாம் திறக்க திறக்க... பெரிய சண்டையே நடக்கிறது! சிறிய அளவிலான நம்முடைய முயற்சி மிகச்சிறிய அளவில் சுற்றிச் சுழன்று கொண்டிருக்கிறது.

தேவனுடைய இராஜ்ஜியம் சுவிசேஷம் சொல்வதில் மாத்திரமல்ல; நாம் செழிப்படைந்து, சகல நன்மைகளையும் பெற்று சமாதானத்தோடு வாழ்வதிலும் உண்டாயிருக்கிறது. ஒரு தனி மனிதனின் நல்வாழ்வு அவனுடைய குடும்பத்தையே பாதிக்கிறது. குடும்பங்களின் சமாதானம் சமுதாயத்தை பாதிக்கிறது. நல்லதொரு சமாதானம், சமாதானமான பட்டணங்களையும், பட்டணங்கள் இராஜ்ஜியங்களையும், இராஜ்ஜியங்கள் பூமியையும் செழிப்படையச் செய்கின்றன. தனிப்பட்ட ஒவ்வொரு தேவபிள்ளையினுடைய கிருபை சார்ந்த முயற்சிகளும் இப்பூமிக்கு இழந்த மகிமையை திருப்பிக் கொண்டு வரப்போவது நிச்சயம். *(ref: 2 சாமு. 18:25, ஆதி. 47:12, ஏசா. 44:26, 61:4, ஆதி. 26:5, ஏசா. 6:3, 11:9)*

நம் தேவன் காலப்பிரமாணத்தைக் கடந்தவர்; வெகு வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் காலம் அவரைப் பாதிப்பதில்லை **(disturb)**. ஏனென்றால் அவருக்குச் சரீரம் கிடையாது; அவர் ஆவியாயிருக்கிறார். ஆவியைக் காலம் தொந்தரவு **(interrupt)** செய்வதில்லை. நாமும் அவரைப் போலவே ஆவியான மனிதர்களாகத்தான் இருக்கிறோம்; அதனால் நம்முடைய ஆவி மனிதனையும்

காலம் பாதிப்பதில்லை. அப்படியானால் தேவன் காலம் (time) என்ற ஒரு பிரமாணத்தைப் பூமியின் மீது நியமித்திருப்பதற்கு என்ன காரணம்? அது மனிதனுடைய சரீரம் செயல்படுவதற்கேதுவாகத்தான். மனிதனுடைய ஆவியின் செயல்பாடுகளுக்கு (சிந்தனைக்கு) காலம் தேவையில்லை; அது jet வேகத்தில் போகிறது. சிந்தனைகளின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் சரீரம் தடுமாறுகிறது. நம்முடைய மனதில் தினமும் சுமார் 30,000 சிந்தனைகள் கடந்து போகின்றனவாம். ஆனால் அவைகள் எல்லாவற்றையும் நம் சரீரம் செயல்படுத்துவதில்லை; அப்படி செயல்படுத்தவும் முடியாது. வருகின்ற சிந்தனைகளின்படியெல்லாம் செய்ய சரீரத்திற்கு வேகமும் போதாது, நேரமும் போதாது. அப்படியே செய்ய முயற்சித்தாலும் அது ஆபத்தாக முடியும். ஏனென்றால் சிந்தனைப் பகுதியில் ஓடுகின்ற நினைவுகள் எல்லாமே சரியானவைகளாக இருக்க முடியாது. வாழ்க்கைக்குத் தேவையில்லாத, பிரயோஜனமில்லாத நினைவுகளுமே பெருமளவில் ஓடுகின்றன. விழுந்து போன மனிதனின் சிந்தனைப் பகுதியில் பெருமளவில் சீர்கெட்ட சிந்தனைகளே ஆக்கிரமிக்கின்றன என்பதை சொல்ல வேண்டியதில்லை, அது எல்லோருக்குமே தெரியும்.

*"மனுஷனுடைய ... இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே ... ஆதி. 6:5.(... every imagination of the thoughts of his heart was only evil continually)"* மனிதனுடைய சிந்தனைகளின் தாறுமாறுகளுக்கேற்றபடியே அவனுடைய நடவடிக்கைகளும் மோசமாகி, முடிவில் வாழ்க்கையே அழிந்தும் போகிறது. பொல்லாத சிந்தனைகள் பாவத்திற்குள் வழி நடத்துகிறது; பாவம் மனிதனை மரணத்திற்குள் இழுத்துக் கொண்டு போகிறது. சிந்தனைகள் மனத்திரையில் சம்பந்தப்பட்டப் படத்தை உருவாக்குகிறது; குறித்த காலத்தில் அந்தப் படம் நிஜமாகி வெளியேறி பூமியின் மீது கால் பதிக்கிறது. நல்லதோ கெட்டதோ எதுவானாலும் மனிதனின் நினைவுகள் கர்ப்பத்தில் குழந்தை போல் கருத்தரித்து உற்பவக்காலத்தில் ***(due date - time)*** பிரசவிக்கப்படுகிறது. மனிதனின் சிந்தனைகளின் பயங்கரத்தால் ஒட்டு மொத்த பூமியே (மனுக்குலமே) அழிக்கப்பட்ட காட்சியை நோவா காலத்தில் பார்க்கிறோம். அந்தச் சந்ததியை தேவன் தொடர்ச்சியாக வாழ அனுமதித்திருந்திருப்பாரானால்; மொத்த மனுக்குலமே அழிந்து போயிருக்கலாம். தேவனுடைய திட்டத்தை நிறைவேற்ற ஒருவர் கூட மிஞ்சியிருக்க மாட்டார்கள். அந்த அளவுக்கான பயங்கர விஷக்கிருமிகள் மனிதனின் நினைவு மண்டலத்தை ஆக்கிரமித்திருந்ததை தேவன் கவனித்ததினால் தான்; இப்படிப்பட்ட அதிரடி நடவடிக்கைகளை தேவன் எடுக்க வேண்டியதாயிருந்தது. நோயாளியின் உடம்பிலிருந்து வியாதியினால் பாதிக்கப்பட்ட உறுப்பை அறுவைச்சிகிச்சையின் மூலம் அகற்றும் மருத்துவர்கள் அந்த மனிதனின் உயிரைக் காப்பாற்றவே போராடுகின்றனர். அவன் மேல் பரிதாபப்பட்டு பாதிக்கப்பட்ட உறுப்பை அப்படியே விட்டுவிடுவார்களானால் அந்த மனிதன் செத்துப் போவானே! நோவா கால வெள்ளத்தின் மூலம் பூமியின் & மனுக்குலத்தின் உயிரைக் காப்பாற்றினார் தேவன்!

மனிதனைக் குறித்த தன்னுடைய திட்டத்தில் தேவன் மிகக் கவனமாக, குறியாக இருப்பதைப் பார்க்க முடிகிறது. தன்னுடைய திட்டத்தை மனிதனின் மூலமாகத்தான் நிறைவேற்ற முடியும் என்பதால் அவர் மனிதர்களிடம் அளக்க முடியாத அசைக்க முடியாத அன்புள்ளவராக, கிருபை, இரக்கம், மனதுருக்கம், நீடிய சாந்தமுள்ளவராக, பொறுமையுள்ளவராக, தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவராக இருக்கிறார். மட்டுமல்ல மனிதர்களை விடுவிக்கிறவராக, வாழ வைக்கிறவராக, வெற்றியைக் கொடுப்பவராக, செழிப்படைய செய்பவராக, சமாதானம் தருபவராக இருக்கிறார். மனிதனைத் தேடி வருகிறார், இரட்சிக்கிறார், ஆவியை அருளுகிறார், தன்னுடைய திட்டத்தைப் பற்றின சகல இரகசியங்களையும் வெளிப்படுத்துகிறார், அதைச் செயல்படுத்துவதற்கேதுவான தரிசனம், புதிய உடன்படிக்கை, ஊழியம் எல்லாவற்றையும் தருகிறார். கூடவே இருந்து பாதுகாக்கிறார், உதவி செய்கிறார், வழி நடத்துகிறார், ஆலோசனை தருகிறார்... சொல்லிக்கொண்டே போகலாம்; நேரம் போதாது, பக்கமும் போதாது.

## *நம் மனது கெட்ட விஷயங்களினால் அல்ல; நல்ல விசேஷங்களினால் பொங்க வேண்டும்:*

இதையெல்லாம் புரிந்து கொண்டு அவருடைய மனதின் விருப்பங்களை நிறைவேற்ற வேண்டுமானால்; அதற்கு விழுந்து போன மனிதனின் சிந்தனைகள் உபயோகப்படாது. அதற்கு

மனந்திரும்புதல் அவசியமாயிருக்கிறது. நம்முடைய நினைவுகளின் தோற்றத்தை மாற்ற வேண்டும், சிந்தனைகளை ஒழுங்குபடுத்த வேண்டும், கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும். ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டுமானால் நம் இருதயம் (மனம்) நல்ல விசேஷங்களினால் பொங்க வேண்டும். வேத வசனங்களின் மூலமாகத்தான் இந்த வேலையையெல்லாம் நம் மனதிற்குள் செய்ய முடியும். ஏனென்றால் நல்ல விசேஷங்கள் தேவனிடத்தில் தான் இருக்கிறது; உலகத்தில் இல்லை, அதனால் அவற்றையெல்லாம் வேதத்தில் இருந்து சேகரிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

*"என் இருதயம் நல்ல விசேஷத்தினால் பொங்குகிறது; ... என் நாவு விரைவாக எழுதுகிறவனுடைய எழுத்தாணி. சங். 45:1. **(My heart is inditing a good matter; ... my tongue is the pen of a ready writer - KJV). (Beautiful words fill my mind, ... Like the pen of a good writer my tongue is ready with a poem - Good News Bible)."*** முற்காலங்களில் நம்முடைய சிந்தனைகளில் என்னவெல்லாம் இருந்ததோ; அதுவே இக்காலத்திலிருக்கிற நம்மை உருவாக்கியிருக்கிறது. இப்போது வாழ்ந்து கொண்டிருக்கிற நாம் மற்றும் நம்மைச் சார்ந்த காரியங்களெல்லாம் ஏற்கெனவே நம்முடைய சிந்தனையில் பதிக்கப்பட்டவைகள் தான். திடீரென்று எதுவுமே நடக்கவில்லை; இப்படியெல்லாம் நடக்குமென்று நான் கனவில் கூட நினைக்கவில்லை என்று சொல்வீர்களானால்; உங்களையே ஏமாற்றிக் கொண்டிருக்கிறீர்கள் என்று அர்த்தம். சோகங்கள், பிரச்சனைகள், வேதனைகள், வியாதிகள், ஏமாற்றங்கள், அதிர்ச்சிகள் போன்ற அரக்கர்கள் எங்கிருந்தோ ஒடி வந்து சுவரேறி நம் வாழ்க்கைக்குள் குதிக்கவில்லை. அவர்களெல்லாம் நம் இருயத்திற்குள்ளிருந்து தான்***(mind)*** வெளியே குதித்தார்கள் என்று சொன்னால் நம்ப முடிகிறதா? நம்பித்தான் ஆக வேண்டும்; ஏனென்றால் அதுதான் உண்மை.

*"நான் பயந்த காரியம் எனக்கு நேரிட்டது; நான் அஞ்சினது எனக்கு வந்தது. யோபு.3:25 **(Everything I fear and dread comes true)"*** என்றார் யோபு. மொத்த மனுக்குலத்தின் கதையும் இது தான்; அவரவர்கள் பயந்த காரியங்கள் அவரவர்களுக்கு வந்தது. எண்ணத்தில் பயத்தை வைப்பதினால் மனிதர்களின் வாழ்க்கை பாழாகிப் போகிறது. அப்படி பாழாகிப் போன மனிதர்களின் வாழ்க்கை மீண்டும் கட்டியெழுப்பப்பட வேண்டுமானால்... ? காய்ந்து போன வாழ்க்கையில் செழிப்பு வரவேண்டுமானால் ... ? மட்கிப் போன கனவுகள் துளிர்த்தெழும்பவேண்டுமானால் ... ? தோல்விகள் ஜெயமாக மாற வேண்டுமானால் ... ? பிச்சாதிபதிகள் இலட்சாதிபதிகளாக மாற வேண்டுமானால்... ? சகதியில் கிடக்கும் ஒரு பன்றிக்குட்டி அழகான ஆட்டுக்குட்டியாக வேண்டுமானால்... ? நம்முடைய இருதயம் – மனது நல்ல விசேஷங்களினால் (விஷயங்களினால்) பொங்க வேண்டும்.

## துணிச்சலை மனதில் வளர்ப்போம்; நினைத்ததை நடத்தி முடிப்போம்:

சங். 45:1 ன்படி நல்ல காரியங்களை மனதுக்குள்ளே வைக்க வேண்டும். அழகான கனவுலகத்தை நம் மனதுக்குள் உருவாக்க வேண்டும்; அதற்கு தேவனுடைய வார்த்தைகள் தான் மூலதனம். வாக்குத்தத்தங்களின் உள்ளே செழிப்புலகத்துக்கான கருக்கள் (பறவைகளின் முட்டையைப் போல) புதைந்திருக்கிறது. அவைகளை எடுத்து மனதில் வைத்து அடைகாக்கும் போது வெற்றி பிறப்பெடுக்கிறது; சிறகுகளைக் கட்டிக் கொண்டு பறக்க ஆரம்பிக்கிறது. ஒரு நல்ல எழுத்தாளனின் மனதின் சிந்தனைகளை அவன் கையிலிருக்கும் பேனா வார்த்தைகளாக காகிதத்தில் கக்குகிறது; அதுபோலத்தான் நாக்கும்! ஒரு பேனாவைப் போல நம்முடைய நாக்கு அவற்றை மீண்டுமாக நம் மனதில் எழுதுகிறது. அது எப்படி சாத்தியமாகிறது? மனதில் இருக்கிற நல்ல விஷயங்கள் விசுவாச அறிக்கையாக வெளியேறும் போது நம் காதுகள் அவற்றை உள்வாங்கி மீண்டுமாக மனதிற்குள் கொண்டு போகிறது. இதைத்தான் சங்கீதக்காரன் தாவீது விவரிக்கிறான். நிதானமாக வாசித்துப் புரிந்து கொண்டு மேலே வாசியுங்கள்.

மனதில் (இருதயத்தில்) எழுதப்பட்ட காரியங்களை; மீண்டுமாக மனம் அசை போட்டு, அவைகளைச் சிந்தனைகளாக வெளியே விடுகிறது. மீண்டுமாக அவைகள் வார்த்தைகளாக வெளியேறி காதின் வழியாக உள்ளே நுழைகிறது. இந்தச் சுழற்சி தொடர்ச்சியாக நடக்கும் போது; அந்த நல்ல காரியங்களை செய்வதற்கு நம்முடைய ஐம்புலன்கள் தயாராகி விடுகின்றன. பிறகென்ன... வெற்றி கைவசமாகிறது; நினைத்தது நடக்கிறது, விரும்பியது வருகிறது.

இதுவரை நீங்கள் எந்த மனிதனையும் கண்ணால் பார்த்ததேயில்லை. இதுவரையில் நாம் கண்களால் பார்த்து வந்ததெல்லாம் மனிதர்களின் சரீரத்தைத்தான். *"தேவன் ஆவியாயிருக்கிறார், ... யோவா. 4:24."* அதனால் அவருடைய சாயலின்படி இருக்கிற நாமும் ஆவியாகத்தான் இருக்க முடியும். *"அப்படியே கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான். 1 கொரி. 6:17."* சரீரத்திற்குள்ளாக வைக்கப்பட்டிருக்கிற ஆவி மனிதனுக்கு ஒரு மனம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை வைத்துத்தான் ஆவியான மனிதன் சிந்திக்கிறான். ஆவியான மனிதனுக்குச் சிந்திக்க முடியும், கற்பனை செய்ய முடியும். ஆனால் வேறு எதையும் அவனால் செய்ய முடியாது. சிந்தித்த காரியத்துக்கு செயல் வடிவம் கொடுக்க வேண்டுமானால் அதற்கு வேறு சில காரியங்கள் தேவைப்படுகிறது; அதுதான் சரீரம். மனமும் அதிலிருந்து பிறக்கிற சிந்தனைகளும் இல்லாதிருக்குமானால்; மனிதன் செயலற்றவனாக, ஒன்றுக்கும் உதவாதவனாக, அசையாமல் கிடக்கும் ஒரு காய்ந்த மரத்தைப் போலிருப்பான்.

மனம் எந்த அளவுக்கு முக்கியமானது என்பதை மனதார அறிந்திருக்க வேண்டும். வெறும் சரீரத்தையே பார்த்துக் கொண்டிருப்பதை நிறுத்தி விட்டு; மனம் சார்ந்த காரியங்களைப் பற்றியும் ஆழமாக சிந்திக்க வேண்டியது அவசியம். மனம், சிந்தனை, கற்பனை சக்தி ஆகியவற்றைப் பற்றிய வெளிப்பாடு நம் வாழ்க்கையை திசை திருப்பி, வெற்றியின் பாதையில் அழைத்துச் சென்று, முடிவில் இலக்கை அடைய வைக்கும் என்பதில் எந்த வித சந்தேகமுமில்லை. மனம் என்ற பதம் வேதத்தில் பல இடங்களில் ஆத்துமா என்றும் சில இடங்களில் இருதயம் என்றும் அழைக்கப்படுகிறது.

மனம் என்பது ஆற்றல் மிகுந்த ஒரு சிந்தனைத் தளம். அதைச் சிந்தனைகளின் ஏவுதளம் என்றும் சொல்லலாம். அதிலிருந்து எதை வேண்டுமானாலும் ஏவிவிட முடியும். கெட்ட சிந்தனைகளை மனதில் வைத்தால்; அவைகள் சீறிப்பாயும் ஏவுகணைகளைப் போல... ***(rocket).*** நல்ல காரியங்களை வைத்தால் அவைகள் ராக்கெட்டுகளைப் போலப் பாயும். சிந்தனைகளுக்கு வேகம் அதிகம் ***(move fast).*** நாளொன்றுக்கு ஒரு சராசரி மனிதனுடைய மனதில் 60,000 வரையிலான சிந்தனைகள் கடந்து செல்கின்றன என்றால் அவற்றின் வேகத்தை கணக்கிட முடியும்! அவைகள் சீக்கிரமாக இலக்கை அடையும் ஆற்றலுள்ளவை ***(attain something quickly)*** நல்ல... தேவனுடைய சித்தம் செய்யக்கூடிய சிந்தனைகள் வெற்றிக் கரையை கடக்க உதவி செய்கின்றன. கெட்ட... சாத்தானால் உருவாகிற நினைவுகள் தோல்வியின் ஆழ்கடலுக்குள் இழுத்துக் கொண்டு போய்விடுகிறது.

## *மனதோடு பேசுவோம்:*

தாவீதுக்கு இந்த இரகசியம் தெரிந்திருந்தது; அதனால் தான் தன் மனதுடனே பேசி அதை சரி செய்கிறான். *"என் ஆத்துமாவே, (மனமே) நீ ஏன் கலங்குகிறாய்? என் எனக்குள் தியங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு; ...(சங். 42:11)* ***(why are you cast down, O my soul? and why are you disquieted within me?)"*** என்கிறான். நாமும் கூட நம் மனதுடன் இப்படிப் பேசிப் பழக வேண்டும். நாம் பிரச்சனைகளின் நேரத்தில் அவைகளுடன் மல்லுக்கட்டி அவற்றைச் சரி செய்ய முயற்சிக்கிறோம்; ஆனால் அவைகள் அநேகமாக பிரச்சனைகளை அதிகமாக்கி விடுகிறது. ஆனால் நம்முடைய மனதின் பக்கமாகத் திரும்பி, அதை அமைதிப்படுத்தி, சாந்தமாக அதனோடு பேசிப் புரிய வைத்தால்; பிரச்சனைகள் பயந்து பின்வாங்கத் துவங்கும், ஆளை விடு என்று ஓடியும் போய்விடும்!

உலகத்தாருக்கும் இரகசியம் தெரிகிறது; கத்தியைத் தீட்டாதே, புத்தியைத் தீட்டு என்கிறான்! கத்தியைத் தீட்டி மனிதனை கொலை செய்யும் கொலைகாரன்; ஆரம்பத்திலேயே தன் புத்தியை சரி செய்திருந்திருந்தால், இன்று அவனுக்கு கொலைகாரப் பட்டமும் கிடைத்திருக்காது. விழுந்து போன இந்தப் பூமியில் வாழும் மனிதர்களின் மனது பெருமளவில் சோகக்கதைகளையே சொல்லிக்கொண்டிருக்கிறது ***(dejection).*** அதனால் மனது உற்சாகமிழந்து போகிறது ***(depression).*** மனம் பல சந்தோஷங்களை எதிர்பார்த்து ஏங்கி ஏமாந்து போகிறது; அதனால் ஏற்படுகிற கவலைகள் மனதை கவ்விப் பிடித்துக் கொண்டு தொங்குகிறது. இப்படிப்பட்ட பலவிதமான பாதிப்புகளினால் மனம் செயலிழக்க ஆரம்பிக்கிறது. மனம் பழுது பட்டால் அதனால் சரியான விதத்தில் சிந்தனைகளை அனுப்ப முடியாது. மனதால் வேலை செய்யாமல் சும்மாயிருக்கவும் முடியாது; அது இயங்கிக்

கொண்டேயிருக்கும் ஆற்றல் பெற்றது. நாம் அனுமதி கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும் சிந்தனையலைகளை அது அனுப்பிக் கொண்டுதான் இருக்கும். ஆனால் அந்த அலைகளை ஒழுங்குபடுத்தி சரியான அலைவரிசைகளில் அனுப்பும் சக்தி நம் மனதுக்கு உண்டு. தேவன் நமக்குள் வைத்திருக்கும் இந்த ஆற்றல் மிகுந்த மனதையும் அது வெளிப்படுத்தும் சிந்தனைகளையும் சரியானபடி திட்டமிட்டு அனுப்பத் தெரிந்து கொள்ள வேண்டும்.

சோகமாக இருக்கிற ஒருவரிடம் போய்; "என்ன பிரச்சனை?" என்று கேட்டால்; "மனசே சரியில்லை" என்பார். அதுதான் பிரச்சனையே, சரியில்லாத மனசு சரியானதை யோசிக்காது. சரியில்லாத யோசனையை வைத்து சரியான காரியத்தைச் செய்யவும் முடியாது. அதனால் முதலில் மனதை சரிப்படுத்த வேண்டியது அவசியம். மனம் சரியாகும் வரைக்கும் எதையும் பேசாமல், செய்யாமல் இருப்பது நல்லது. தாவீதைப் போல மனதுடன் பேசி, அதை அமைதிப்படுத்தி, சாந்தப்படுத்தி, கொஞ்சம் நேரம் தனிமைப்படுத்தி, சந்தோஷப்படுத்தி, தைரியப்படுத்தி பிறகு செயலில் இறங்குவது நல்லது. எதையும் தாங்கும் இதயம் வேண்டும், திட மனசு வேண்டும். மனதைச் சரிப்படுத்த மனிதர்கள் பல காரியங்களை வைத்திருக்கிறார்கள். போதைப் பழக்கங்களுக்கு அடிமையாகிறார்கள்; புண்பட்ட மனதை புகை போட்டு ஆற்ற முயற்சிக்கிறார்கள் ***(cigarette).*** பல பாவ சிற்றின்பங்களுக்கு அடிமைப்பட்டுப் போகிறார்கள். இதனால் வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சிக் கொள்கிறார்கள்.

மனதை அமைதிப்படுத்துவதற்கு உலக ரீதியிலான பல நல்ல காரியங்களையும் முயற்சிக்கிறார்கள் ***(counseling, meditation, yoga, mass media etc.,).*** அலைமோதும் சிந்தனைகளைத் தடுத்து நிறுத்தி; அவற்றை சரிப்படுத்தி அனுப்பும் முயற்சிகள் பல உலகளவில் பின்பற்றப்படுகின்றன. அவைகளினால் ஓரளவுக்கு மனதைக் கட்டுப்படுத்த முடிகிறது என்றாலும் அவற்றின் முடிவைக் குறித்து வேதம் எச்சரிக்கிறது. மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு; அதின் முடிவோ மரண வழிகள். நீதி. 16:25. ***(What you think is the right road may lead to death)*** மனிதனைத் தன்னைப் போலவே உருவாக்கி; பூமியை அவனுடைய கையில் கொடுத்திருக்கிறார் என்பது உண்மை தான். என்றாலும் மனிதனின் வீழ்ச்சியால் பூமியின் மீது இயங்கிக் கொண்டிருக்கிற சாபப்பிரமாணங்கள் அவனுடைய தனிப்பட்ட முயற்சிகளுக்குச் சவாலாக இருந்து வருகிறது. தேவனில்லாமல் எதையும் தனித்து செய்ய முடியாத, கட்டாயச் சூழ்நிலைக்கு மனிதன் தள்ளப்பட்டிருக்கிறான். *"... என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது." யோவா. 15:5* என்றார் இயேசு. ***(you can do nothing without me)*** மனதைக் கட்டுப்படுத்தும் காரியத்திலும் இது பொருந்தும் என்று பார்க்கிறோம். *"... அவன் (நீதிமானின்) இருதயம் கர்த்தரை நம்பித் திடனாயிருக்கும். (சங். 112:7)* ***(his heart is fixed, trusting in the Lord)."***

## *நினைவுகள் தோன்றும் நெஞ்சில் இயேசு:*

இயேசுவை இருதயத்திற்குள் வைத்திருக்கும் தேவனுடைய பிள்ளைகளாகிய நம்முடைய மனது வேறு விதத்தில் இயங்குகிறது. நம்முடைய இருதயம் தேவனுடைய இருதயத்தோடு (மனதோடு) இணைக்கப்பட்டிருப்பதால், அவருடைய சிந்தனைகள் நம்முடைய மனதுக்குள் வருகிறது; இப்படியாக நம்முடைய சிந்தை கிறிஸ்துவின் சிந்தனையாக மாறுகிறது. *"... எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது. (1கொரி. 2:16)* ***(we have the mind of Christ)."*** தேவனைப் போலவே நாம் சிந்திக்க ஆரம்பித்து விட்டோமானால்; பிறகென்ன கேட்கவா வேண்டும்? தேவன் தன்னுடைய சிந்தனையினால், அதைத் தொடர்ந்த வார்த்தையினால் வானங்களையும், அதிலுள்ளவைகளையும், பூமியையும் அதிலுள்ளவைகளையும் உருவாக்கினார். நிமிர்ந்து அவர் செய்த காரியங்களையெல்லாம் கவனித்துப் பாருங்கள்; எவ்வளவு அழகாக, அட்டகாசமாக, நேர்த்தியாக இருக்கிறது? அதற்குக் காரணம்? அவருடைய சிந்தனைகளும் அழகாக, நேர்த்தியாக, ஒரு குறைவும் சொல்ல முடியாத அளவுக்கு அமைந்திருப்பது தான் காரணம். அதே சிந்தனைகள் நமக்கும் உண்டாயிருக்கிறது என்று பார்க்கிறோம். அவருடைய மனம் + சிந்தனை நமக்கு ஏற்கெனவே உண்டாயிருக்கிறது; அதனால் அதற்காக ஜெபிக்க வேண்டியதில்லை. நன்றி மாத்திரம் சொல்லி விட்டு அதை இயக்க வேண்டியது தான். இயக்கி இயக்கி பூமியைக் குறைவில்லாத சிங்கார பூமியாக, பனிவிழும் மலர் வனமாக, அழகு சிரிக்கும் தோட்டமாக, பழமுதிர்ச்சோலையாக, (ஏதேனாக) மாற்ற வேண்டியது தான்.

*Eden? - (perfect place) any place seen as being perfect, highly pleasing, or happy, without faults, without errors, flaws, or faults. complete and lacking nothing essential, excellent or ideal in every way, having all the necessary or typical characteristics required for a given situation, very proficient, skilled, or talented, used to emphasize the extent or degree of something.*

*"நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். ரோம. 12:2."* தேவனுடைய சித்தம் என்றால் அதில் 3 காரியங்கள் வருகின்றன; அவை: நன்மை + பிரியம் + பரிபூரணம் ஆகும். தேவனுடைய மனவிருப்பங்களைக் கண்டுபிடித்து; அதை நம்முடைய விருப்பமாக மாற்றியமைக்க வேண்டுமானால்; அதற்கு முன்னதாக நம்முடைய மனதில் சில மாற்றங்களை உருவாக்க வேண்டும். அதாவது இதுவரை இருந்த பழைய மனதை வைத்து அவருடைய சித்தத்தை அறியவும் முடியாது, திட்டத்தைச் செய்யவும் முடியாது. அதற்கு புதிய மனது, புதிய சிந்தனைகள் தேவையாயிருக்கிறது. தேவனுடைய திட்டம் நன்மையானது, அவருடைய மனதுக்கு பிடித்தமானது, எந்தவொரு குறைவும் இல்லாதது. இதைச் செய்ய வேண்டுமானால் அதற்கேற்றபடியான காரியங்களை நம்முடைய மனதில் வைக்க வேண்டும், ***install*** பண்ண வேண்டும். புதிய உடன்படிக்கையின் கண்ணாடியை அணிந்து வேதத்தை ஆராய்வதன் மூலம் நம் நினைவில் நிலைநிறுத்த வேண்டிய காரியங்களைக் கண்டுபிடிக்கலாம்.

தேவனையறியாத உலக மக்கள் நல்லவர்களாக இருப்பதைப் போலத் தோன்றினாலும், அவர்கள் செழிப்படைந்திருப்பதாகத் தோன்றினாலும், தேவபிள்ளைகளை அவர்கள் முந்திச் செல்வதைப் போலக் காணப்பட்டாலும்; அவைகள் வெறும் தோற்றமே தவிர நிஜமல்ல. அவர்களுடைய மனதின் சிந்தனைகளின்படி அவர்கள் இயங்குகிறார்கள்; தேவனுடைய மனதின் விருப்பங்கள் அங்கே வைக்கப்படவில்லை. ஐம்புலன்களால் அவர்கள் உலகத்தைப் பார்த்து, கேட்டு, உணர்ந்து எதையெல்லாம் கற்றுக் கொண்டார்களோ; அவைகளைத் தான் மனதிற்குள் வைத்திருக்கிறார்கள். தேவனுடைய திட்டத்தை முடிக்கும் எந்த காரியத்தையும் அவர்கள் மனதிற்குள் அவர்கள் வைக்கவில்லை, வைக்கவும் முடியாது. ஏனென்றால் அவர்களுக்குத் தேவனையும் தெரியாது, அவருடைய சித்தமும் தெரியாது, திட்டமும் தெரியாது. அதனால் அவர்களுடைய சிந்தனைகளை நம்முடைய சிந்தனைகளாக்கக் கூடாது, அவர்கள் சிந்திக்கும் ரீதியில் சிந்திக்கவும் கூடாது என்று இந்த வசனம் சொல்லுகிறது. ***Do not conform yourselves to the standards of this world, but let God transform you inwardly by a complete change of your mind. Then you will be able to know the will of God - what is good and is pleasing to him and is perfect.***

## *நிழல் ஏதேன் Vs. நிஜ ஏதேன்:*

அவர்களின் எல்லைகளுக்குள்ளாகக் காணப்படும் செழிப்பு ஏதேனைப் போலக் காணப்பட்டாலும்; உண்மையில் அது ஏதேனல்ல. அவர்கள் உலக மகா ஐசுவரியவான்களாக காணப்பட்டாலும்; தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்கு தேவையான எதுவும் அவர்களிடம் இல்லை என்பதே உண்மை. இயேசு இல்லாமல் செழிப்பு இல்லை. **எந்தவொரு மனிதனானாலும் சரி; அவனுடைய மனதிற்கு ஆற்றல் உண்டு. இயேசு இல்லாமலும் அந்த ஆற்றலை செயல்படுத்த முடியும். பூமியின் செழிப்பின் மீது அந்த ஆற்றலைக் குவித்து; அவற்றை வசீகரித்து, இழுத்து தன் வசப்படுத்த முடியும். இப்படித்தான் தேவனற்ற உலகத்தார் தங்களிடமுள்ள இந்த ஆற்றலைத்தான் உபயோகித்து; செழிப்பைத் தங்கள் வசப்படுத்தி, தேவ பிள்ளைகளை முட்டாள்களாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.** தேவனைப் போலவே உருவாக்கப்பட்டிருக்கும் மனிதர்களுடைய மனதிலிருந்து ஆற்றல் வெளிப்படுவதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. தன்னுடைய ஞானத்தால், புத்தியால், அறிவால், விவேகத்தால், ஆற்றலால் கடந்த 8000 வருஷங்களில் உலகத்தையே தலைகீழாகப் புரட்டிப் போட்டிருக்கிறான். மனிதனுடைய அறிவு சார்ந்த முன்னேற்றங்கள், அறிவியல் கண்டுபிடிப்புகள், விண்வெளி ஆராய்ச்சிகள், நாகரீக முன்னேற்றங்கள், சாபத்தை உடைத்தெறிந்து முன்னேற மனிதன் எடுக்கும் வீரியமான முயற்சிகள்... இவைகளெல்லாம் பிரம்மிப்பில் ஆழ்த்துகின்றன, மூக்கின் மேல் விரலை வைத்து, கண்களை விரித்து, வாயைப் பொத்தி ஆச்சரியப்பட வைக்கின்றன !

என்றாலும் மனிதனின் முன்னேற்றம் தேவனுடைய திட்டத்தை நோக்கிச் செல்லாமல்; உலகத்தின் மாயையில் முட்டி மோதி கரைந்து போகிறது. விழுந்து போன மனுக்குலத்தின் சோகக்கதையை பிரசங்கி விவரிக்கிறார். ஆசையாகக் குழந்தையை பெற்றெடுக்கிறான், வளர்க்கிறான், படிக்க வைத்து, வேலை வாங்கிக் கொடுத்து, கல்யாணம் செய்து வைத்து... என்று வாழ்க்கை ஓடுகிறது. ஆனால் வாழ்க்கையின் அர்த்தம் புரியவில்லை, இலக்கு தெரியவில்லை. ஏன்? ஏனென்றால் மனிதனுக்கு தேவனையே தெரியவில்லை. தேவனையே தெரியாத மனிதனால் அவரைப் போலவே படைக்கப்பட்டிருக்கும் தன்னைப் பற்றி மட்டும் எப்படித் தெரியும்? ஆனால் நம்முடைய நிலைமை இப்படியில்லை. தேவனுடைய பிள்ளைகளாகிய நாம்; அவருடைய புதிய உடன்படிக்கையின் ஊழியக்காரர்களாகிய நாம் வாழ்க்கையின் நோக்கத்தை நிதானித்து அறிந்திருக்கிறோம்.

தேவனற்ற உலகத்தாரின் மனம் மாயையில் சுழல்கிறது; முடிவில் அது மாயையையே பிரசவிக்கிறது. தன்னுடைய பிறப்பின் அர்த்தம் தெரியாமல், பிறந்த குழந்தையின் நோக்கம் தெரியாமல், பேரப்பிள்ளைகளைப் பற்றிய கேள்விக்குறிகளில் கரையும் மனது! சந்ததி சந்ததியாக இதுவே தான் திரும்பத் திரும்ப நடக்கிறது. ஆனால் நம் நிலை அதுவல்ல, அவர்களுடன் நம்மை ஒப்பிட்டுப் பார்க்கக்கூடாது. நாம் தேவனால் பிறந்தவர்கள், அவருக்காகப் பிள்ளைகளைப் பெற்றெடுத்தோம், இந்தக் காரியங்களையெல்லாம் பிள்ளைகளுக்கும் புரிய வைப்போம். அப்போது பேரக்குழந்தைகளும் தேவத்திட்டத்தை கையிலெடுத்தபடி பிறக்கும்.

புதிய காரியம் என்று பூமியிலுள்ளவர்களிடத்தில் எதுவுமில்லை. பாட்டியம்மா அம்மியில் மசாலா அரைத்து மீன் குழம்பு செய்தார்கள். அம்மா மிக்சியில் அரைத்தார்கள், மகள் உடனடிக் குழம்பு மசாலாவை ***(instant)*** வாங்கினாள். அதற்கடுத்த சந்ததி மீன் குழம்பையே வாங்கி வந்துவிட்டாள். இதில் பெரிதாக என்ன முன்னேற்றம் தெரிகிறது? அன்றும் இன்றும் அதே மீன் குழம்பு தான்! கால ஓட்டத்திற்கு ஏற்ப ***up-to-date*** மாற்றங்களை அந்த மீன் குழம்பு சந்தித்து வந்திருக்கிறது, அவ்வளவு தான்; எல்லாக்காரியங்களுமே இப்படித்தான். *"எல்லாம் வருத்தத்தால் நிறைந்திருக்கிறது; ... (பிர. 1:8) முன் இருந்ததே இனிமேலும் இருக்கும்; முன் செய்யப்பட்டதே பின்னும் செய்யப்படும்; ... நூதனமானது ஒன்றுமில்லை. (பிர. 1:9)"* ஆனால் நம் நிலைமை அதுவல்ல, நாம் புதிய காரியங்களைச் செய்வோம். செய்வதற்கு முன்பாகவே இவைகளை எழுதுகிறோம், உபதேசிக்கிறோம், இவைகளெல்லாம் ஆரம்பத்திலேயே எங்கள் இருதயங்களில் இருந்தன! *"எல்லாரும் ஆச்சரியப்பட்டு: இது என்ன? இந்த புதிய உபதேசம் எப்படிப்பட்டது?...(மாற். 1:27)"* இதுவரையிலும் கேட்டதில்லையே என்று பேசிக்கொள்வார்கள்.

## *மயக்கம், கலக்கம், குழப்பம், வாழ்க்கையில் நடுக்கம் எதுவும் வேண்டாம்:*

உலகத்தைப் பார்த்து நம் மனதை குழப்பிக் கொள்ளக்கூடாது. விழுந்து போன மனிதனின் நிலைமையைத்தான் நாம் மேலோட்டமாகப் பார்க்கிறோம். அவர்களோடு சேர்ந்து குட்டையைக் குழப்பிக் கொண்டிருக்க நாம் பிறக்கவில்லை. பூமியில் பிறக்கிற எந்தவொரு மனிதனும் தோற்றுப் போன நிலைமையில் தான் வந்து பிறக்கிறான்; நீங்களும் நானும் இதற்கு விதிவிலக்கல்ல. ஆனால் நாம் ஜெயிக்கிறவர்களாக இருக்க வேண்டும் என்பதே நம்மைக் குறித்த தேவனுடைய திட்டம். தோல்வியில் வந்து பிறந்தோம்; ஆனால் ஜெயிக்கிறவர்களாக முடிப்போம். *"... உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூறுகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே.* ***(more than conquerors)*** *(ரோமர் 8:36, 37)"* அதாவது விழுந்து போன இந்தப் பூமியிலிருந்து எழும்பி நிற்கும் சகல விதமான கேடுகளையும் எதிர்த்து நின்று, போராடி அவற்றை ஜெயிக்கும் ஆற்றல் நமக்குள் இருக்கிறது. சும்மா வரவில்லை, நமக்குள்ளிருக்கிற இயேசுவினால் தான் இந்த ஆற்றல் நமக்குள்ளாக இருந்து வெளிப்படுகிறது.

தேவனில்லாத உலக மக்களும் இப்படிப்பட்ட காரியங்களை வரவேற்பதில்லை; அவைகளை எதிர்க்கத்தான் செய்கிறார்கள். உபத்திரவங்கள், வியாகுலங்கள், துன்பங்கள், பசி, நிர்வாணம், நாசமோசம், பட்டயம் போன்ற சாபங்களை எந்த மனிதனும் விரும்புவதில்லை, வரவேற்பதுமில்லை.

அவைகளைத் தங்கள் வாழ்க்கையிலிருந்தும், பூமியிலிருந்தும் ஒழித்துக்கட்டவே அவர்களும் போராடுகிறார்கள். ஆனால் தங்களுக்குள் இயற்கையாகவே தேவனால் அமையப்பெற்ற சுய ஆற்றலின்படி போராடுகிறார்கள். ஆனால் அந்த ஆற்றலில் சாபச்சீர்கேடுகளின் மேல் ஜெயம் எடுக்கும் அளவிலான வீரியம் இல்லை. அவற்றை எதிர்கொண்டு, ஓரளவுக்குச் சமாளித்து, ஓடுகிறார்கள்; ஆனால் இன்றளவும் எந்த சாபத்தையும் ஒழிக்க முடியவில்லை. அது ஒழிக இது ஒழிக என்ற கோஷங்கள் மட்டும் தான் விண்ணைப் பிளக்கின்றன. ஒழிக்க முடியாத சாபங்களை, பாவங்களை தங்கள் வாழ்க்கைக்குள் நுழைய விட்டு அவைகளோடு ஒப்புரவாகி விடுகிறார்கள். சாபங்களுக்கிசைவான வாழ்க்கையை அமைத்துக் கொண்டு வெற்றி பெற்றுவிட்டதாக மார்தட்டிக் கொள்கிறார்கள். பாவங்களை தங்கள் வாழ்க்கையின் ஒரு பாகமாக்கிக் கொண்டு; அவற்றைச் சரி தான் என்று நிரூபிக்க முயற்சிக்கிறார்கள். ஆனால் நாம் அப்படியல்ல; பூமியின் சாபங்களுடன் கைகோர்த்து நடக்க வேண்டிய அவசியம் நமக்கில்லை, அவற்றை எதிர்த்து, போராடி, ஜெயித்து ***(takeoff)*** வாழக்கூடிய ஆற்றலை இயேசுவால் பெற்றிருக்கிறோம். அந்த ஆற்றலை உபயோகித்து; உலகத்தாரால் முடியாத காரியங்களை நாம் முடித்துக் காட்டுவோம்.

## *ஒருமனம்:*

தேவனுடைய திட்டத்தை வெற்றியாக முடிக்க ஒருமனம் மிக முக்கியமானதாகும். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கிற மனதின் ஆற்றலைப் பார்த்தோம். இப்படிப்பட்ட வல்லமையான மனங்கள் ஒரு மனப்படும் போது ***(one consent)*** அவற்றின் ஆற்றல் பல மடங்காக அதிகரிக்கிறது. தேவனுடைய திட்டத்திற்கு வெளியேயிருந்து செயல்படும் உலகத்தார் ஒருமனதால் சாதனை படைக்கிறார்கள். அப்படியிருக்கும் போது கிறிஸ்துவின் சிந்தையுள்ள நம்முடைய மனது ஒருமனப்படுமானால்; அங்கேயிருந்து ஆற்றல் மிகுந்த சிந்தனை ஏவுகணைகளை அனுப்ப முடியும்; பூமியின் ஒட்டுமொத்த செழிப்பை வசீகரிக்கவும் முடியும்.

*“... உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் ... மத். 18:19.”* சபையார் ஒருமனப்பட்டிருந்தபோது புதிய ஏற்பாட்டு சபை ஒரு முக்கியமான திருப்புமுனையை சந்தித்தது. முதன் முறையாக சபையார் பரிசுத்தாவியினால் நிரப்பப்பட்டு அந்நியபாஷைகளைப் பேசினார்கள். அன்று பொழியப்பட்ட அந்த அபிஷேகம் தான் இன்று வரை நமக்குள் இருந்து இப்படிப்பட்ட வெளிப்பாடுகளைக் கொடுத்து வருகிறது. சபை வளர்ச்சிக்கு இந்த ஒருமனம் தான் முக்கிய காரணமாக அமைந்தது. *(அப். 2).*

மனிதனின் மனம் என்பது ஒரு பேராற்றலுள்ள தளம் என்று பார்த்தோம். பலருடைய சிந்தனைகள் ஒன்றாகும்போது அதன் ஆற்றல் பலமடங்கு அதிகரிக்கும் என்பதை நாமே நிதானிக்க முடியும். தேவனுடைய திட்டத்தின் முடிவின் பகுதியை நெருங்கிக் கொண்டிருக்கும் நமக்கு இந்த ஒருமனப்பாடு மிகவும் தேவை. புதிய உடன்படிக்கையின் ஊழியக்காரர்களாகிய நாம் இந்த விஷயத்தில் அதிகம் கவனம் செலுத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது. *“இரண்டு பேர் ஒருமனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்து நடந்து போவார்களோ? ஆமோ. 3:3.”* ஒரு காரியத்தைப் பற்றிய கருத்து இரண்டு பேருடைய மனதில் வித்தியாசமாக இருந்தாலே செய்யப்போகிற காரியம் உருப்படாது என்று பார்க்கிறோம். அப்படியிருக்க தேவனுடைய திட்டத்தில் இருக்கிற நாம் அநேகராயிருக்கிறோம். இழந்து போன பூமியின் மகிமையை திரும்பக் கொண்டு வரும் வேலையில் அமர்த்தப்பட்டிருக்கும் புதிய உடன்படிக்கையின் ஊழியக்காரர்களாகிய நாம் நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில், லட்சக்கணக்கில் இருக்கிறோம். நம்முடைய மனது ... எண்ணங்கள் ... நினைவுகள் ... கனவுகள் எல்லாம் ஒன்று போல் இருக்க வேண்டியது அவசியம். நம்முடைய இலட்சியங்கள் ... கற்பனைகள் ... வெளிப்பாடுகள் ... தொலைநோக்குப் பார்வையெல்லாம் ஒரே காரியத்தில் குவிக்கப்பட வேண்டியது அவசியம்.

இதில் சொல்லப்பட்டிருக்கிற எல்லாமே மனம் சார்ந்த விஷயங்கள் தான். பூமியின் மீது இதுவரையிலும் தோன்றின ... தோன்றிக்கொண்டிருக்கிற ... தோன்றப்போகிற எல்லா விஷயங்களுக்கும் தேவையான உபகரணங்களின் ***(raw materials)*** உற்பத்தி ஸ்தானம் மனசுதான்! அவைகள்

நினைவுகள், சிந்தனைகள், யோசனைகள், எண்ணங்கள் என்று பலவிதங்களில் தோன்றி இறக்கை கட்டி பறக்கின்றன. அதனால் புதிய உடன்படிக்கையின் ஊழியக்காரர்களாகிய நாம் மனதில் பதியன் போடப்போகிற விஷயங்களைப் பற்றி அதிக கவனத்துடன் இருக்க வேண்டும். கருத்து வேறுபாடு வருகிறது என்றால்; நிச்சயமாக அது கவனிக்கப்பட வேண்டிய விஷயம். ஏனென்றால் பழைய உடன்படிக்கையின் சட்ட திட்டங்கள், பாரம்பரியங்கள், மதம் சம்பந்தப்பட்ட காரியங்களின் மோசமான கதிர்வீச்சுக்கள் உள்ளே நுழைந்திருந்தால் தான் மாற்றுக் கருத்துக்கள் தோன்ற வாய்ப்புகள் இருக்கின்றன. ஒரு புது உடன்படிக்கையின் ஊழியக்காரர் இன்னொரு புது உடன்படிக்கையின் ஊழியரைக் குறை சொல்வதற்கு வழியேயில்லை. ஏனென்றால் இதில் குறையேதும் இருக்க வாய்ப்பே இல்லை; அப்படிப்பட்ட அப்பழுக்கற்ற ஊழியம் இது. ஏனென்றால் இது கிறிஸ்துவுக்குள், அவருடைய நீதிக்குள், கிருபையைச் சார்ந்து, ஆவியின்படி செய்யப்படுகிற ஊழியம். ஒரு ஊழியக்காரர் இன்னொருவரை குறைசொல்லி, குற்றம் பிடித்து, பழி சொல்லி சண்டைபோடுகிறார் என்றால் ... அது ஆதாமிற்குள், அவனால் நுழைந்த பாவத்திற்குள், நியாயப்பிரமாணத்தை சார்ந்து, மாம்சத்தின்படி செய்யப்படுகிற ஊழியம் என்பதை அறிந்து கொள்ளலாம்.

சபைக்குள் இருக்கிற இந்தப் பிரச்சனையை சரி செய்யாவிட்டால்; சபை தேவதிட்டத்தை நோக்கி முன்னேறுவதில் இருக்கிற பிரச்சனைகள் தொடர்கதையாகி விடும். அதற்கு நாம் இடம் கொடுக்காமல் பிரச்சனைகளை சரி செய்ய வேண்டும். வேதம் இந்த காரியத்தை அதிகமாக வலியுறுத்துகிறது. *“ஒருவரோடொருவர் ஏக சிந்தையுள்ளவர்களாயிருங்கள்; ரோம. 12:16. (same mind) ... நீங்கள் ஏக சிந்தையுள்ளவர்களாயிருக்கும்படி (one mind) உங்களுக்கு அநுக்கிரகஞ்செய்வாராக. ரோம. 15:6.”*

## *வாலிபனே ...*

மனதின் நினைவுகளில் வாலிபர்களுக்கு மிக முக்கியமான பங்கு இருக்கிறது. ஒரு மனிதனின் துவக்கம் முதல் முடிவு வரையிலும் அவனுடைய மனது வேலை செய்து கொண்டு தான் இருக்கிறது. **இடைவிடாமல் சாகும் வரையிலும் வேலை செய்து கொண்டிருக்கும் சிறுநீரகத்தை *(kidney)* நினைத்து நாம் ஆச்சரியப்பட்டதுண்டு. ஆனால் நமக்குள்ளாக இருக்கும் மனது இடைவிடாமல் சாகும் வரை நினைவுகளை அனுப்பிக்கொண்டே இருப்பதை நினைத்து நான் ஆச்சரியப்பட இவ்வளவு நாள் பிடித்தது!** *“நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை; பிர. 12:1”* என்பது வேதம் வாலிபர்களுக்குத் தரும் ஒரு முக்கியமான ஆலோசனை. குழந்தைப் பருவம், வளரிளம் பருவம், வாலிபப் பருவம், நடுத்தர வயது, முதிர் வயது என்று பல பருவங்களோடு காலம் ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் கடந்தோடுகிறது.

உலகத்தின் மேல் நடக்கும் சகல காரியங்களையும் கவனமாகக் கேட்டு, பார்த்து, ஆராய்ந்து ஆச்சரியத்திலாழ்த்தும் புத்தகங்களை எழுதிய சாலமோன் ஞானி; ஒரு மனிதனின் வாலிப வயதை அதிகமாக உற்று நோக்குவதை ***(concentrate)*** பார்க்க முடிகிறது. ஒரு வாலிபனின் மனம் சார்ந்த காரியங்கள் தேவனுடைய திட்டத்தில் முதலிடத்தைப் பிடிக்கிறது. மனதுக்குள் ஒளிந்திருந்த காரியங்களெல்லாம்; அது நல்லதோ கெட்டதோ எதுவானாலும் சரி, அவனுடைய வாலிப வயதில் தான் வெளியே வருகிறது. சொல்பேச்சு கேட்பதில்லை, இவன் இப்படி மாறுவான் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை என்று தன் பிள்ளைகளைக் குறித்து அங்கலாய்க்கிறவர்களின் வார்த்தைகளைக் கேட்டிருக்கிறேன். அவளா இப்படிச் செய்தாள்? என்று ஆச்சரியப்படுவதைப் பார்த்திருக்கிறேன். குழந்தைப் பருவத்தில் எந்த பிரச்சனையுமில்லாமல் அடக்கமாக இருந்த மனம்; போகப் போக தன் அலைவரிசையை மாற்றிக் கொள்கிறது. வாலிப வயதில் வாலிபர்கள் கெட்டுப் போகும் காரியத்தைப் பற்றி நான் இங்கு பேச வரவில்லை; அதைத்தான் எல்லோரும் பேசுகிறார்களே.

வாலிபர்களிடத்தில் ***(teenagers - aged between 13 and 19)*** இருக்கிற நல்ல மனதை, அதிலிருக்கிற நல்ல காரியங்களைப் பற்றி பேசத்தான் நாம் இருக்கிறோம்; நாம் நற்செய்தியாளர்கள்! வாலிப வயதை அடையும் போது; பிள்ளைகளின் மனதில் தேடல்கள் அதிகமாகின்றன. உலகத்தின் காரியங்களை அதிகப்படியாக உற்றுப் பார்க்க, ஈர்க்க, இழுக்க, உள்வாங்க ஆரம்பிக்கிறது.

அதற்கேற்றாற்போல் அவர்கள் ஞானம், புத்தி, அறிவு, விவேகம் எல்லாமே அதிகரிக்கின்றது. சாதாரணமாக நாம் வாலிபர்களிடம் (ஆண் + பெண்) காணப்படும் சரீர வளர்ச்சி, அழகு, வசீகரம், தோரணை, வீரம் ***(handsome - good looking)*** கவனிக்கிறோம். ஆனால் இதெல்லாவற்றையும் விட அவர்களின் மனதின் இயக்கம் மிக வேகமாக இருப்பதை யோசிக்கத் தவறி விடுகிறோம். அந்த வேகத்தைச் சரியான விதத்தில் தூண்டி எழுப்புவதின் ***(stimulate)*** மூலம் அவர்களைச் சாதனையாளர்களாக்க முடியும். சண்டை போட்டு மண்டையை உடைத்துக் கொள்ளும் வாலிபர்களைப் பார்த்து இளஇரத்தம் கொதிக்கிறது என்று கிராமப்புறங்களில் சொல்வார்கள். ஆனால் உண்மையில் இரத்தம் அல்ல, மனசு கொதிக்கிறது என்பதே உண்மை. **மனசு என்று ஒன்று எதற்காக தேவனால் உருவாக்கப்பட்டதோ; அதைத் தேடி அது துடிக்கிறது; அது கிடைக்காத போது கண்டதெல்லாம் உள்ளே நுழைந்து அதை நாசம் பண்ணி விடுகிறது. நாசமாக்கப்பட்ட மனது வாழ்க்கையையும் நாசமாக்குகிறது.**

மனதில் என்ன இருக்கிறதோ; அதைப் பொறுத்துதான் வாழ்க்கை இருக்கும் என்பதால், அதில் ஏற்ற வேண்டிய காரியம் மிக மிக கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. **சிருஷ்டிகரை மனதில் வைத்து; அதை *stimulate* பண்ணுவதை விட சிறப்பான முயற்சி எதுவும் இருக்க வாய்ப்பில்லை.** தேவனை மனதில் நிறுத்திய வாலிபர்கள் சாதித்ததை விட அதிகமாக வேறு யாரும் சாதித்ததாக சரித்திரமுமில்லை. அதனால்தான் வாலிபர்கள் தங்கள் மனதில் சிருஷ்டிகரை வைத்து; அவரை நினைக்கச் சொல்லி வேதம் ஆலோசனை சொல்கிறது. அதாவது தேவனைச் சார்ந்த விஷயங்களை மனதில் வைக்க வேண்டும். அதாவது இப்போது நாம் கற்றுக் கொண்டு வருகிற காரியங்களான: நாம் யார்? நாம் ஏன் பூமியில் வந்து பிறந்தோம்? தேவன் நம்மை ஏன் அனுப்பினார்? நம்மைப் பற்றின அவருடைய நோக்கம் என்னென்ன? நம் கையில் கொடுக்கப்பட்டிருக்கும் தேவதிட்டம் எது? அதை எப்படி முடிப்பது? கிறிஸ்துவுக்குள் நாம் யார்? சிலுவையின் மூலமாக நமக்கு வந்து கிடைத்த காரியங்கள் என்னென்ன? புதிய உடன்படிக்கையைச் சார்ந்த தேவ இரகசியங்கள் ... ***etc.,*** இப்படிப்பட்ட காரியங்களை மனதில் வைத்து; அதைச் சுற்றியே நினைவுகளை ஓட வைக்க வேண்டும்.

**நவநாகரீக உலகத்தின் தற்கால வாலிபர்களுடைய மனதில் தேவனைப் பற்றின தவறான, மழுப்பலான, கிண்டலான, வேடிக்கையான காரியங்கள் சாத்தானால் ஏற்றப்பட்டிருக்கிறது *(uploaded).*** பெரும்பாலாக அவர்களுக்குள் தேவனைப் பற்றின எந்த உணர்வும் இல்லை, நம்பிக்கையும் இல்லை. தேவனில்லாத வெறுமையான மனதில் பூமியின் மீது காணப்படும் மோசமான, தவறான, பாவமான காரியங்கள் வந்து ஆக்கிரமிப்பதில் ஆச்சரியம் எதுவுமில்லை. ஐம்புலன்களின் வழியாக மனதுக்குள் கொண்டு வரப்படும் காரியங்களைச் சுற்றியே எண்ண ஓட்டங்கள் இருக்கும். இக்கால வாலிபர்களின் செயல்பாடுகளைப் பற்றிச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அவைகளின் உற்பத்தி ஸ்தானம் அவர்களின் மனம் தான். அங்கே என்னென்ன பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதை அவர்களின் செயல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

## *காதல் Vs. அன்பு:*

உதாரணமாக: காதல் ***(love)!*** இந்த வார்த்தையின் அர்த்தம் "அன்பு" என்று அவர்கள் நினைக்கிறார்கள். **ஆனால் உண்மையில் அன்புக்கும்; இவர்கள் சொல்கிற அந்த காதலுக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்பது நாங்கள் சொல்ல வருகிற தெய்வ இரகசியம்.** அன்பு என்பது ஒரு தெய்வத்துவ காரியம் ***(Godliness).*** *'... தேவன் அன்பாகவே இருக்கிறார்; ... 1 யோ. 4:16 (God is love).'* அன்பு என்பது தேவனிடமிருந்து மட்டும் தான் வர முடியும். தேவனற்ற உலக மனிதர்களிடமும் அன்பைப் பார்க்க முடிகிறது; ஆனால் அந்த அன்பு நிபந்தனைகளோடு தான் வெளியே வருகிறது. எதிர்பார்த்தது கிடைக்காமல் ஏமாற்றமடையும் போது அந்த அன்பு மறைந்து விடுகிறது. எல்லோருமே தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டிருக்கிறபடியால்; எல்லா மனிதர்களிடமும் அவருடைய குணாதிசயமான அன்பும் வைக்கப்படுகிறது. ஆனால் தேவனையறியாத அவர்களிடத்தில் ஊற்றப்பட்ட அன்பு பிரச்சனைக்குள்ளாகி சிதறடிக்கப்படுகிறது. சின்னாபின்னமாக்கப்பட்ட அன்பு பாசம், சிநேகம், நட்பு, பிணைப்பு, மனிதாபிமானம், காதல் (இனக்கவர்ச்சி), காமம் என்று பல விதங்களில்

உருவெடுக்கிறது. ஆனால் இவைகளெல்லாவற்றிலும் கரும்புள்ளிகள் உண்டு, ஓட்டைகள் உண்டு. கொஞ்சம் கொஞ்சமாக ஒழுகுகிறது, கசிகிறது, முடிவில் வெறும் சட்டிதான் மிஞ்சுகிறது; பசியோடு போனால் சட்டி கவிழ்த்திப் போடப்பட்டிருக்கிறது!

மனதில் தேவனை நினைக்காமல் அவனையும், அவளையும் நினைத்ததால் வந்த வினை தான் இந்தக் காதல். உண்மையில் இது ஒரு பொய்யான மனோராஜ்ஜியமே ***(mindset , frame of mind)*** தவிர வேறெதுவுமில்லை. நல்லதோ கெட்டதோ, சரியோ தவறோ, மனசுக்குள் என்ன இருக்கிறதோ; அதை சுற்றி நினைவுகள் வட்டமடிக்கும்; ஒரு மனோ ராஜ்ஜியத்தை அமைத்துக் கொள்ளும். அது மனதின் நியதி. தேவனுக்கும், அவருடைய அன்புக்கும் சம்பந்தமே இல்லாத காதல் என்கிற விஷயமும் இப்படித்தான் வேலை செய்கிறது. அது ஒரு பலமான மனக்கோட்டையை அமைத்துக் கொள்கிறது; பிறகு அந்த நினைவுகளை மனதை விட்டு அகற்றுவது கடினமாகி விடுகிறது. மனக்கோட்டைக்குள் இருக்கும் அவனி(ளி)ன் நினைவுகளை வெளியேற்ற முடியாமல் சிண்டைப் பிய்த்துக் கொள்ள வேண்டியதாகி விடுகிறது. காலப்போக்கில் சிலருக்கு இந்த காரியம் மறந்து விடுகிறது, சிலருக்கு முடிவு வரையிலும் மறக்க முடியாமலேயே போகிறது; அவரவரின் மனதைப் பொறுத்து அனுபவங்களும் வித்தியாசமானதாக இருக்கிறது.

**மனதிலிருக்கிற ஒரு விஷயத்தைச் சுற்றியே நினைவுகள் வட்டமிடுகிறது என்பதினால் அது முக்கியமானது என்று அர்த்தமல்ல. மனசுக்குள் ஒரு எருமை மாட்டை நிறுத்தினாலும் நினைவுகள் அதைச் சுற்றிதான் வட்டமிடும். எப்போதும் நினைத்துக் கொண்டே இருக்கும் அளவிற்கு எருமை மாடு அப்படியொன்றும் முக்கியமான மிருகமல்ல!** மனதின் இயல்புகளினால் மனிதன் ஏமாந்து போகிறான் என்பதே உண்மை. காலாகாலமாக ஒரு பெண்ணை மறக்க முடியவில்லையென்றால்; மனது இன்னமும் அவளுடைய நினைவுகளை வெளியேற்றாமல் உள்ளேயே வைத்திருக்கிறது என்று அர்த்தம். இதற்காக அது அன்பு என்றும், அழியாதது, என்றும் தெய்வீகமானது என்றும் அர்த்தமல்ல. மனசுக்குள் சரியானவற்றைக் கொண்டுபோவதன் மூலம் தேவையில்லாததை வெளியேற்றிவிட முடியும். **காதலியையே (காதலனையே) சுற்றிச் சுற்றி வருவதின் மூலமாக மனம் உங்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறது என்பதை எப்போது அடையாளம் காணப்போகிறீர்கள்?**

மனதின் குணாதிசயங்களையும், அதிலிருந்து எழும்பும் நினைவுகளையும் (சிந்தனைகள், எண்ணங்கள், யோசனைகள்) பற்றி தெரிந்து கொள்வதின் மூலம் காதல் என்ற இந்த மாயவலைகளிலிருந்து விடுதலையாக முடியும். வாலிபர்கள் தங்களுடைய வாழ்க்கையின் சிகரமான இந்த இளவயதில்; தன்னை உருவாக்கினவரையும், அவரைச் சார்ந்த நினைவுகளையும் மனதில் வைப்பதன் மூலம்; உலகத்திலிருந்து உருவான இந்த போலியான மயக்கவலைகளிலிருந்து வெளியே வரமுடியும். **சாயமிழந்து போன வாலிப வயதின் வானவில்லுக்கு புது அழகை இயேசுவால் மட்டுமே கொடுக்க முடியும். இருளுக்குள்ளே வாழ்ந்து; விடிந்த பின்பு தூங்கி வழிகிற உன் வாழ்க்கை முறையை அவரால் மட்டுமே மாற்ற முடியும்.** அவருக்கு மனதில் இடம் கொடு; நிச்சயம் அந்தக் காதல் நினைவுகள் தானாகவே வெளியே போய்விடும்.

## *முடிவாக ...*

முடிவாக ... தேவன் மனிதனைத் தன்னைப் போல தனக்காக உருவாக்கினார். சாத்தானால் சொதப்பலாகிப்போன பூமியைச் சீர்திருத்த அவனை அங்கே வைத்தார். முதல் மனிதன் மீண்டுமாக சொதப்பியபோது; இயேசுவை அனுப்பினார். அவர் சொதப்பவில்லை, தேவனுடைய மனதிலிருந்தவைகளை சரியாகச் செய்து முடித்து; வெற்றியின் திட்டத்தை நம்மிடம் கொடுத்துவிட்டு போயிருக்கிறார். இழந்த மகிமையை திரும்ப அடைவதற்கான நம்பிக்கையாக நமக்குள் இருக்கிறார். இனிமேல் ஒரு சொதப்பலா? நோ......... சான்சே........ இல்லை!

*"... என் மகனே! (என் மகளே!) இவைகளினாலே புத்தியடைவாயாக; அநேகம் புஸ்தகங்களை உண்டு பண்ணுகிறதற்கு முடிவில்லை; அதிக படிப்பு உடலுக்கு இளைப்பு. பிர. 12:12."*

விதைகள் 17 ம் பகுதியில் மீண்டுமாக தொடர்ந்து வருவேன்.

**உங்களது சந்தேகங்கள் - கேள்விகள் - ஆலோசனைகள் ஏதேனுமிருப்பின் எங்களுக்கு எழுதுங்கள். தொடர்பு கொள்ளுங்கள்.**


எங்கள் முகவரி:

சகோதரி. **லதா டேவிட்**

**நித்தியர் இயேசு ஊழியங்கள்**

5-A/233, கால்டுவெல் காலனி, 2-ம் தெரு கிழக்கு,
தூத்துக்குடி-628 008

தொலைபேசி: +91-461-2377889
அலைபேசி: +91-0-94424 66250 & +91-0-90034 56506

Email : sovereignjesus@gmail.com
Web : www. tamilchristian.com/ebooks

**Our Address:**

**Sis. LATHA DAVID**

**SOVEREIGN JESUS MINISTRIES**

**5-A/233, CALDWELL COLONY,
2nd STREET (EAST),
TUTICORIN-628 008**

**Ph.: +91 - 461 - 3209737
Mobile: +91-0-94424 66250 & +91-0-90034 56506**

Email : sovereignjesus@gmail.com
Web : www.tamilchristian.com/ebooks